Koviloor Digital Library

3-2

உ

கணபதி

(படங்களுடன்)



பொதிகைபடி விநாயகர் கோயில்

திருவாவடுதுறை ஆதீனம்

1984

Acc. No: 1189
Δ2, 11

Koviloor Digital Library

Koviloor Digital Library

வெளியீடு எண் 100.

1189

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

கணபதி

(படங்களுடன்)

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்
அருளாணையின்வண்ணம்
வெளியிடப்பெற்றது.

ஆதீன மகாவித்துவான்
டாக்டர் ச. தண்டபாணி தேசிகர்
எழுதியது

திருவாவடுதுறை ஆதீனம்
வள்ளுவராண்டு 2015. மெய்கண்டார் ஆண்டு 762.
1984

1984 — 20/=

Koviloor Digital Library

முதற்பதிப்பு 1956.
இரண்டாம் பதிப்பு 1984.

விலை ரூ. 20 — 00

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

3-2
KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

உ
சிவமயம்

முன்னுரை

இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், திருவாவடுதுறை ஆதீனத்திலிருந்து உலகில் உலாவந்து உபாசனு மார்க்கத்தினையும் திருவுருவத் தத்துவங்களையும் தெரிவித்த 'கணபதி', இரண்டாம் முறையாக நம்முடைய இடையூறுகளைப்போக்கி இன்பமும் ஞானமும் நல்க வெளிவருகிறுர். வரவேற்று அவரை வணங்குவது மக்கள் கடமையாகும்.

ஆதீனத்தில் இருபத்தொராவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து ஞானச்செங்கோல் செலுத்திய ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் எடுத்தணி வயலில் கணபதிக்குத் திருக்கோயில் கண்டு நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேம் 23—3—56 அன்று செய்வித்தபோது கணபதி முதன்முதலாக உலாவரத் தொடங்கினுர். அன்பர்களுடைய கைகளில் இடம்பெற்றுக் கருத்திலும் இடம் பெற்றுர். பெற்றதை எண்ணியெண்ணித் தியானித்து இன்பம் எய்தினர்.

இப்பொழுது ஞானபீடத்தை அலங்கரிக்கும் 23-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின்வண்ணம், திருநெல்வேலி மாவட்டம் பாவநாசம் அருள்மிகு பொதிகையடி விநாயகப் பெருமான் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் ரத்தாக்ஷி ஆண்டு சித்திரைத் திங்கள் நான்காம் நாள் (திருவள்ளுவர் ஆண்டு 2015. 16—4—84) 'கணபதி' இரண்டாம் பதிப்பாகப் புத்தகவடிவில் திருவுலாவருகிறுர்.

இதுவரையில் அகக்கண்ணுல் பிரணவப்பெருமானுடைய ஞானத்திருவுருவைக் கண்டு களித்த பெருமக்கள் மேலும்

Koviloor Digital Library

மந்திர யந்திர தியான முறைகளாலும் சிந்தித்து உய்ய ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுள்ளங்கொண்டார்கள்.

முன்பு நூதன ஆலய பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தின் போது வெளிவந்த சோடச கணபதிகளும் ஒருசேர நூல் வடிவில் இந்தக் கும்பாபிஷேகத்திலும் வெளிவருகிறார்கள். பெருஞ்சாந்தி விழாக்காலங்களில்தான் வெளிவரவேண்டும் என்பது கணபதியின் திருவுள்ளம்போலும். திருவுள்ளம் இருந்தபடியை அறிவார் யார்?

சமயவளர்ச்சியில் நேரிடும் இடையூறுகளை நீக்கிச் சமய வுலகத்தைத் தழைத்தோங்கச் செய்வது விநாயகப்பெருமா னுடைய திருவருள் நோக்கமாகும் என்பதை இப்பதிப்பு எடுத்துக்காட்டுகின்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஞானபீடத்தில் எழுந்தருளிய இந்த ஓராண்டுக்குள் ஒன்பதாம் திருமுறை வெளிவந்தது. ஐந்துதொகுதிகளாகப் பதினொராந்திருமுறையும் வெளிவந்துள்ளது. அடுத்து மகரத்தலைநாட் குருபூஜை விழா மலராகத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய இரண்டாந் திருமுறை அச்சிடப்பெற்றது. மற்றும் அவ்வப்போது சிறுசிறு நூல்களும் வெளியிடப்பெறுகின்றன. இங்ஙனம் இவர்கள் சிறியனவும் பெரியனவுமாக – அறிவுறுத்துவனவும் அனுபவிப் பனவுமாக – இளைஞர்களுக்கும் அறிஞர்களுக்கும் முதியோர் களுக்குமாகப் பல நூல்களை வெளியிட்டுச் சைவபரிபாலனம் செய்துவருகிறார்கள்.

வேதமரத்தின் உச்சியில் பழுத்த சித்தாந்தத் தீங்கனியை இருந்த இடத்திலிருந்தே எல்லோரும் துய்க்கும்படியாகச் சித்தாந்தப்பயிற்சியை அஞ்சல்வழியாக அறிவிக்கத் திருவுளம் பற்றித் தொடங்கப்பெற்ற அந்நிறுவனம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பெற்றுவருகிறது. அது வளர்ந்து அஞ்சல்வழிப் பட்டப்படிப்பாகவும் வளரும்நிலையில் உள்ளது. அதற்கு

Koviloor Digital Library 3-2

ஆதிகுருமூர்த்தி ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகள் திருவருள்விலாசம் மிகுதியும் இருக்கிறது.

சந்தானகுருமுதல்வராகிய ஸ்ரீ மெய்கண்டார் திருநாமங் கொண்டு மாத இதழ் மணம் வீசிவருகிறது. மேலும் ஆயிரம் இதழ்த் தாமரைகளாக அரனடியார் அகக்குளத்தில் மலரத் திருவருள் பெருகி வருகிறது.

இங்ஙனம் பலவகையிலும் செல்லுமிடமெல்லாம் சிவ போதத்தைச் செலுத்திவருகின்ற ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குச் சைவச்செந்தமிழுலகம் என்றென்றும் கடமைப் பட்டிருக்கவேண்டும். இதனை இரண்டாம் பதிப்பாக வெளி வரத் திருவுளம்பாலித்த ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்க ளுடைய திருவடிமலர்களுக்கு என்னுடைய உளமார்ந்த வணக்கங்கள் உரியன.

இந்நூலைப்பெற்று உய்ய இருக்கின்ற சைவநல்லுலகம் அடியேனை வாழ்த்துமாக.

இங்ஙனம்,

ஆதீன மகாவித்துவான்.

ச. தண்டபாணி தேசிகர்.

Koviloor Digital Library

கணபதி புகழ்மாலை

களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்(கு) உதவும் – அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும்! மற்றவன் தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

—கபிலதேவநாயனார்.

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே – தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலா(து) ஐயனே சூழா(து)என் அன்பு.

—அதிராவடிகள்.

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பைஅடி போற்றத் துணிந்தால் – நெருப்பை
அருந்தஎண்ணு கின்ற எறும்பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம்.

—நம்பியாண்டார்நம்பி.

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு
களியார வரும்ஆனை கழல்நாளும் மறவாமல்
அளியாளு மலர்தூவும் அடியார்கள் உளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே.

—உமாபதிசிவசாரியார்

Koviloor Digital Library



திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரம் தாலூகா பாவநாசம்
அருள்மிகு பொதிகையடி விநாயகர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

பொருளடக்கம்

			பக்க எண்
	முதற்பதிப்பின் முகவுரை		சு
	எடுத்தாண்ட நூல்கள்		கரு
1	பிள்ளையார் வணக்கம்	...	1
2	பிள்ளையார்சுழி	...	4
3	பிள்ளையாரும் பெரியோர்களும்	...	9
4	பிள்ளையார் பிறப்பு	...	11
5	திருவுருவத் தத்துவம்	...	21
6	கணபதி பழமையானவர்	...	26
7	பெயர்களும் காரணமும்	...	40
8	பிள்ளையார் வகைகள்	...	43
9	புராண வரலாறுகள்	...	56
10	வழிபட்டவர்களும் பெற்றபயனும்	...	71
11	சிறந்த தலங்கள்	...	78
12	சிறந்த குறிப்புகள்	...	85
13	வழிபாட்டுமுறை	...	88
14	பூசிக்கும்முறை	...	92
15	விரதங்கள்	...	98
16	பிள்ளையார் ஆயுதங்கள்	...	110
17	காணுபத்யமதம்	...	115
18	உபாசனை	—	116
19	விநாயகர் அகவல்	...	143

Koviloor Digital Library

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— *ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.*

Koviloor Digital Library

ஸ்ரீ நமசிவாயமூர்த்திகள்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முதற்பதிப்பின் முகவுரை

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்.

— சேக்கிழார் புராணம்.

கணபதி இன்று எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்திருக்கிருர். நம் நாட்டில் தெய்வவழிபாடு கணபதியிலிருந்து தான் தொடங்குகிறது. ஆகவே சமயப் பயிற்சியாகிய கடவுள்வணக்கம் கணபதி வணக்கத்தை அடிநிலையாகக் கொண்டது.

உள்ளம் ஒன்றி நிற்க உருவம் வேண்டும். மனம் ஒன்றைப் பற்றிநின்றே உயரும். மனோதத்துவத்தை நன்ருக உணர்ந்த தென்னிந்தியப் பெருமக்கள், மனத்தின் 'ஒன்றை விட்டு ஒன்றைப்பற்றி உயருந்தன்மையை உணர்ந்து' அறிவு உருவத்தையுடைய இறைவன் நம்முடைய பரிபாக நிலைகட்கு ஏற்ப உருவங்கொண்டு தாமே எழுந்தருளினலன்றி உள்ளம் ஒன்றி ஒருமைப்படாது என்று இறைவனை வேண்டிக்கொண்டார்கள். இறைவன் அவரவர்களுடைய பரிபாக நிலைகளுக்கு ஏற்ப உருமேனி தாங்கி எழுந்தருளினர், உருமேனியைக் குரு உபதேச வழியினின்று சிந்தித்து உயர்ந்த முனிபுங்கவர்கள், தத்தம் சிந்தனையை அனைவரும் அடைந்து ஈடேறத் தியான சுலோகங்களாகத் திரட்டித்தந்தனர். அவர்கள் அவ்வண்ணம் திரட்டித்தரச் சிவாகமங்கள் வழிகாட்டின. சிவாகமங்கள் சிவபெருமானுடைய திருவாக்குகளே என்பது முடிந்த முடிபு.

இந்தச் சிவாகமங்களையும், தியான சுலோகங்களையுங் கொண்டு கடவுளைக் காட்டும் கலைத்திறனுகிய சிற்பம்

Koviloor Digital Library

செழித்தது. சிந்தனையில் எழுந்த தியானத்திருவுரு செய்திறனுகச் செம்பிலும், கல்லிலும், மரத்திலுமாக உருவாயிற்று. உருவங்கள் சிந்தனையாளனுடைய சித்தத்தின் ஈடுபாட்டைத் தெரிவிக்கும் அழகுக் கருவூலங்கள் ஆயின. அழகிலே கண் பதிந்தது. ஐந்து பேரறிவும் கண்களே கொண்டன. அழகுத் தெய்வம் அருள்சுரந்தது. ஆகவே கலையின் வழியாகக் கடவுளைக்கண்டு கருணையைப் பெற்றனர் மக்கள்.

இத்தகைய கடவுளுருவங்கள் கணபதி, முருகன், வீர பத்திரக் கடவுள், வயிரவக் கடவுள், இருபத்தைந்து மாகேசுர வடிவங்கள், அறுபத்துநான்கு மூர்த்திபேதங்கள், ஊர் காவல் தெய்வங்கள், புராணகாலத் தெய்வங்கள், இதிகாசத் தெய்வங்கள், காலதேவதைகள், கிரகதேவதைகள், அடியார் திருவுருவங்கள் முதலாகப் பலவாம். அவற்றுள் அந்தந்தத் தலங்களின் சிறப்பியல்புகளுக்கு ஏற்ப ஒரேமூர்த்தியில் பல வேறுவகையான திருவுருவ அமைப்புக்கள் உளவாயின. அவற்றையெல்லாம் உருவப் படங்களுடனும், வரலாற்று உண்மைகளுடனும், இலக்கிய ஆதாரங்களுடனும், ஏனைய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் எழுதி வெளியிடுவது சிறந்த தெய்வத் தமிழ்ப்பணியாகத் திகழுமோ என்ற எதிர்நோக்குப் பல ஆண்டுகளாக அடியேனுக்கு இருந்துவந்தது.

இந்தத்துறையில் முதன்முதல் வழிகாட்டிய பெருமை, திருவனந்தபுரம் கல்வெட்டாராய்ச்சியாளர் டி. ஏ. கோபிநாத ராவ் அவர்களையே சாரும். அவர்கள் இண்டியன் இக்னோகிராபி என்ற பெயருடன் அவர்களுக்குக் கிடைத்த ஆகம புராண ஆதாரங்களைக்கொண்டு ஆங்கிலத்தில் எழுதினுர்கள். ஆராய்ச்சியறிவு மிக்க இந்தக் காலத்தில் சிறந்த ஆதாரங்கள் பல கிடைக்கின்றன. அவற்றைத் துணைக்கொண்டு தமிழில் எழுதினுல் செந்தமிழ் மக்களுக்கும் பயன்படுமே என்ற சிந்தையும் எழுந்தது. முயற்சி கைகூடியவரையில் நேரில் பல இடங்களுக்குச் சென்றும், அறிஞர்கள் பலரைச் சந்தித்துக் கேட்டுத் தெரிந்துகொண்டும், பல நூல்களைப் படித்தும் தொகுத்த குறிப்புக்கள் பலவற்றையுங்கொண்டு எல்லா மூர்த்தி பேதங்களுக்கும் இத்தகையதொரு ஆராய்ச்சி வரலாற்றுக் கட்டுரையைப் பல ஆண்டுகட்குமுன்பே எழுதித் தொகுத்தேன். இப்பணி மிக விரிந்ததொருபணி. இப்பணியின் முதற்பகுதியே கணபதி என்ற இந்தக் கட்டுரை நூல்.

Koviloor Digital Library

கணபதி வழிபாட்டில் செந்தமிழ் நாட்டிற்குள்ள சிறப்பியல்பும், உலகமுழுவதிலும் போற்றப்படுகின்ற முறைகளும், அவருடைய பிறப்பு வரலாற்றின் வேறுபாடுகளும், அவற்ருல் அறியப்படுகின்ற அடிப்படைத் தத்துவங்களும், அவரை வழிபடுவதின் பயனும், நம்முடைய தென்இந்திய சமுதாய வாழ்க்கையில் கணபதி கலந்துள்ள முறைகளும், செவிவழிச் செய்திகளும் பிறவும் தக்க ஆதாரங்களுடன் இதன்கண் தொகுக்கப்பெற்றுள்ளன.

கணபதியைப்பற்றி இதுவரை எழுந்த நூல்களைப் படித்த பண்பாட்டால் எழுந்த கருத்துக்கள், இவ்வாராய்ச்சியில் ஒளியாமல் தெரிவித்துக்கொள்ளப் பெறுகின்றன. கால ஆராய்ச்சியில் வைத்துக் கணபதியைக் காண்பவர்களும், தெய்வங் கொள்கைக்கு அடிநிலையான விநாயகரை அசைத்து விட்டால் தெய்வங் கொள்கையே அசையத்தொடங்கி உலகம் சமயப்பாதையை விட்டுப் பொருளாதாரப் பாதையிலே திரும்பக்கூடும் என்று எதிர்நோக்குகின்ற அறிஞர்களும், பிறரும் மேன்மேலும் ஆய்வுண்மைகளைக் காண இந்நூல் வழிசெய்யும் என்ற எதிர்நோக்கு அடியேனுக்கு உண்டு.

சமய அன்பர்கள் பலர், தியானிக்கின்ற முறைகளோடும் உபாசன மந்திரங்களோடும் திருவுருவ அமைப்போடுங்கூடிய இச்சிறு முயற்சியை ஏற்று வளர்ச்சிக்கு வழிசெய்வார்கள் என்றும், வழிவழியாக இதேமுறையில் ஏனைய மூர்த்திகளைப் பற்றிய ஆராய்ச்சிகளும் வெளிவர ஊக்கமும் உணர்வுந்தந்து உதவுவார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

நான்கு ஆண்டுகட்கு முன்பேயே திரட்டிய இக்குறிப்புக்களைச் சரிபார்த்துக்கொள்ளப் பல புத்தகங்களை ஆராயவும், பெரியவர்களைச் சந்திக்கவும் வேண்டியிருந்தது. அப்போது இந்தப் பெருமுயற்சியைத் திருக்கண்சாத்திச் செல்லும் வாயெல்லாம் உதவிகள் பலபுரிந்து ஊக்கம் தந்தருளியவர்கள், திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆவார்கள்.

இந்த நூல் வெளிவரும் வகையில் இரண்டு பெரிய முயற்சிகள் தேவையாயிருந்தன. ஒன்று, அழகான திரு உருவப்படங்களை அமைப்பது. இரண்டு, சிறந்தமுறையில்

Koviloor Digital Library

குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவடிகளை எப்போதும் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

திருவாவடுதுறையாகிய செந்தமிழ்ப்-பண்ணையில் வளர்ந்த சிவஞானப்பயிரில் விளைந்த சிவபோக ஆய்வாகிய இந்நூலைச் சமய உலகமும் அறிஞர் உலகமும் ஏற்றுக் குற்றங்களை அடியேனுக்கு அறிவித்தும், குணங்களைப் பாராட்டியும் ஊக்கந்தருளுமாக.

இங்ஙனம்,

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்

ச. தண்டபாணிதேசிகர்,

தமிழ் விரிவுரையாளர்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திருவாவடுதுறை,
16—3—56.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

எடுத்தாண்ட நூல்கள்

அதர்வசிகோபநிஷத்	சிவஞானபோதம்
அபிதான சிந்தாமணி	சிவபுராணம்
அமரகோசம்	சிவபுராணுதி
அருணகிரிபுராணம்	தோத்திர மஞ்சரி
ஆசுவலாயன	சிவப்பிரகாசம்
கிருஹ்ய சூத்திரம்	சிவஸ்தலமஞ்சரி
இந்துசாதனம்	சுக்கிரநீதி
இராமகிருஷ்ணவிஜயம்	சுப்பிரபேதம்
இருக்வேதம்	சூடாமணி நிகண்டு
இலிங்கபுராணம்	சேக்கிழார் புராணம்
உபதேசகாண்டம்	சேந்தன் திவாகரம்
உரிச்சொல் நிகண்டு	ஞானசித்தியாகமம்
ஐதரேய பிராஹ்மணம்	ஞானுமிர்தம்
கடோபநிஷத்	தண்டியலங்காரம்
கணபதி உபநிஷத்	தமிழ்நாவலர் சரிதை
கணேசர் ஆரூடம்	தனிப்பாடல்திரட்டு
கந்தபுராணம்	திருக்குறள்
கந்தர் கணபதி	திருக்கோவையார்
தேவாரத்திரட்டு	திருமந்திரம்
கல்லாடம்	திருவருட்பயன்
கல்வெட்டு	திருவாசகம்
காஞ்சிப்புராணம்	தேவாரம்
காமிகாகமம்	தைத்ரீய ஆரண்யகம்
காரணுகமம்	தொல்காப்பியம்
சங்கரதிக்விஜயம்	நாமதீபநிகண்டு
சித்தர் நூல்கள்	நிருசிம்மதாபந்யோபநிஷத்
சித்தாந்த சாராவளி	பரிபாடல்
சிவஞான சித்தியார்	பழமொழியகராதி

Koviloor Digital Library

பார்க்கவபுராணம்
பிங்கலந்தை
பிரம கைவர்த்தபுராணம்
பிரமோத்தரகாண்டம்
புறநானூறு
புறப்பொருள்வெண்பாமாலை
பெரியபுராணம்
மகாபாரதம்
மணிமேகலை
மத்ஸ்யபுராணம்
மந்திரசமுச்சயம்
மந்திரமகார்ணவம்
மந்திரமகோததி
மனுஸ்மிருதி
மாணிக்கவாசகர்காலம்
மானவகிருஹ்ய சூத்திரம்
முண்டகோபநிஷத்
முத்கலபுராணம்
முத்தொள்ளாயிரம்
மூத்தபிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
யாக்ஞவல்கியஸ்மிருதி
விக்நேசுவர பிரதிஷ்டாவிதி
விநாயகபரத்துவம்
விநாயகபுராணம்
விநாயகர் பனுவல்திரட்டு
விநாயகர் பிரபாவம்
வீரசோழியம்
ஸ்ரீதத்வநிதி
Elements of Hindu Iconography
Hindu culture in greater India
Malabar Series-Wyanad
Tamil Culture
The Gupta Empire
War in Ancient India

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பிள்ளையார் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

— திருமந்திரம்.

உயிரோடு ஒட்டிய பழக்கம் :

நம்முடைய வாழ்வில் சில பழக்கங்கள் நம்மை அறியாமலே கலந்திருக்கின்றன. அவை எப்படிக் கலந்தன ? பழக்கத்தின் பயன் என்ன ? என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. சிந்தனையின்மையால் அந்தப் பழக்கங்களை விட்டுவிடலாமா என்றுகூடச் சில சமயங்களில் தோன்றுவது உண்டு. அங்ஙனம் விட்டுவிட்டாலோ, ஏதோ செய்யக் கூடாத தவறு செய்துவிட்டதுபோல ஓர் உணர்ச்சி உள்ளே விளைந்து உள்ளத்தை உறுத்தி வாட்டுகிறது. அதன் பயனுக விட்ட பழக்கத்தைத் தொட்டுவிட்டால் ஒரு மகிழ்ச்சி. இத்தகைய போராட்டமும், வெற்றியும் நம் அன்றாட வாழ்வில் நாடோறும் விளைந்தே வருகின்றன. இந்தப் போராட்டம், கொள்கையில் உறுதிப்பாடு உடையவர்களுக்குச் சிறிதும் உண்டாவது இல்லை. தம்மைப் பெரிய அறிவாளிகளாக எண்ணிப் புறச்சூழலில் பேசப்பெறும் சில புற்றீசற் கருத்துக்களைப் புத்தியில் ஏற்று, 'பழமை யாவும் விடத்தக்கனவே' என்ற முடிவிற்கு விரைவில் வந்துவிடுகின்ற சிலருக்கே உளதாம். இத்தகைய நிலையிலிருந்து தப்பிப் பிழைக்கவே வள்ளுவர் பெருமான் 'மெய்ப்பொருள் காண்பது அறிவு'* என்று ஒரு குளிகையை நமக்கு வழங்கியிருக்கிறார். அங்ஙனமே

* திருக்குறள் 423.

Koviloor Digital Library

உமாபதி சிவாசாரிய சுவாமிகளும் "நடுவாந்தன்மையினர் பழமை யழகு ஆராய்ந்து தரிப்பர்" [1] என்றருளினர். அல்லாமல், பலர் பாராட்டுவதால் மட்டும் எத்தகைய பழக்கமும் உயர்ந்துவிடாது; பலர் தாழ்த்துவதாலும் தாழ்ந்து விடாது. அங்ஙனம் பன்மைபற்றி உயர்ந்த கருத்துக்களை - பழக்கங்களை இகழ்வது தாழ்ந்தோர் செயல் என்றும் உமாபதிசிவம் திருவுள்ளம்பற்றுகிறது[2]. ஆதலால் நம்மிடையே தொன்றுதொட்டு வருகின்ற பழக்கங்களை விடுதல் அத்துணைச் சிறந்தசெயலன்று.

பழக்கங்களுட் சிறந்த பழக்கம் – உயிரோடொன்றிய பழக்கம் தெய்வவழிபாட்டுப் பழக்கம். இவற்றுள் ஒன்று விநாயக வழிபாடு. பழக்கம் முற்றின் கடமை. அங்ஙனமே விநாயக வழிபாடு முற்றிக் கடமையுமாகிவிட்டது.

எதைச் செய்தாலும் பிள்ளையார் வழிபாடு:

தெய்வ நம்பிக்கை உடையவர்களாகிய நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்காமல் தொடங்குவதில்லை. நம் பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பினால் பிள்ளையார் வணக்கம்; காது குத்தினால் பிள்ளையார்; நன்மையிற் பிள்ளையார்; தீமையிற் பிள்ளையார். இவ்வண்ணம் நமது வாழ்வில் என்றும் - எங்கும் பிள்ளையார் கலந்திருக்கிறார்.

இவ்வளவு நம்பிக்கை எங்ஙனம் உண்டாயிற்று?

எடுத்த காரியம் எளிதாக - இன்பமயமாக முடிய வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அந்த ஆசையை நிறைவேற்றிவைக்குங்கடவுள் விநாயகரே என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைத்திருக்கிறது.

உலகவாழ்வில் விருப்பம் என்ற ஊன்றுகோலைக் கொண்டு இன்பத் தோணியை இயக்கக் கருதும் மக்கள், முதற்கண் பொன்னையும் மணியையுமே விரும்புகிறார்கள். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்" [3] என்பது முற்றத்துறந்த முனிபுங்கவராகிய வாதவூரடிகளின்

1, 2 சிவப்பிரகாசம் அவையடக்கம். 3 திருக்கோவையார் பா, 332.

Koviloor Digital Library

மாணிக்கவாசகம். இந்த மக்கள் மனநிலையைத் திருவுளங் கொண்ட கபிலதேவர் "திருவாக்கும்"[1] என்று தேன் சொட்டச் சொல்லுகிறார்.

அடுத்து, செல்வம் உண்டானால் செயல்திறம் பெருகு மல்லவா? அதனைச் சொல்லுகிறார் "செய்கருமம் கைகூட்டும்" என்று. செல்வமும், காரிய சித்தியும், செல்வாக்கும் உண்டானவிடத்து அவர்களிடத்தில் அனைவருக்கும் அன்பு கலந்த அச்சம் உண்டாவது இயற்கை. இதனையே "உரு ஆக்கும்" என்ற சிறு தொடரால் தெரிவிக்கிறார் கபிலதேவ நாயனார். "உரு உட்காகும்"[2]. உட்காவது பெரியோரிடத்து உண்டாகும் அன்புடன் கூடிய அச்சம். இதனையும் உண்டாக்கும் விநாயக வணக்கம். ஆகவே விநாயகரை வணங்கினால் எடுத்தகாரியம் இனிது முடியும்; வணங்காவிடின், இடையிடையே ஏதாயினும் தடைகள் ஏற்பட்டுத் துன்பம் விளையும்.

சிவபெருமான் விநாயகர் தந்தைதான். தம் மூத்த பிள்ளையை முன்னிட்டுக்கொள்ளாமல் திரிபுரசங்காரத்திற்குப் புறப்பட்டுவிட்டார். தேர் அச்சு முறிந்தது. இதனை வேடிக்கை யாகவும் விநயமாகவும் மணிவாசகப் பெருந்தகை "தச்சு விடுத்தலும் தாமடியிட்டலும், அச்சு முறிந்தது என்று உந்திபற[3]" என்று அருளிச்செய்கிறார். இங்ஙனம் யார் எதைச் செய்யினும் அதற்கு உதவியும் தடுத்தும் ஊக்குவது பிள்ளையாரின் இயற்கை என்ற உறுதியான எண்ணம் உண்டாகிவிட்டது. இதுவே பிள்ளையார் வணக்கத்தில் நம்பிக்கை பிறந்தமைக்கு உரிய காரணங்கள்.

இந்த நம்பிக்கை நாளாவட்டத்தில் முதிர்ந்தது. ஏதாவது காரியம் தொடங்கினாலே 'ஆச்சு, பிள்ளையார் குட்டியாச்சு' என்ற சொற்பழக்கத்தை உண்டாக்கிவிட்டது. அதுமட்டுமா? ஏதாவது எழுதத் தொடங்கினாலும் 'பிள்ளையார் சுழி போட்டாயிற்று' என்ற வழக்கத்தையும் பிறப்பித்துவிட்டது.

---

1 மூத்த - இரட்டை பா. 1.

2 தொல். சொல். சூ. 300. 3 திருவாசகம். பா. 296.

Koviloor Digital Library

பிள்ளையார் சுழி

எழுத்தில் பிள்ளையார் :

ஏடுகளில் எழுதத் தொடங்கினாலும், கல்லில் எழுத்துக்களை வெட்டத் தொடங்கினாலும், காகிதங்களில் எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார்சுழியை முன்னர் இட்டே தொடங்குவது மரபு. மறந்தாவது பிள்ளையார்சுழி போடாமல் விட்டால் போதும்; பெரியவர்களுக்குக் கோபம் பொங்கி வந்துவிடும். நாமாகத் தவற்றினை அறிந்து திருந்தும்வரை அவர்கள் மறக்கருணை காட்டியே தீருவார்கள்.

பிள்ளையார்சுழி பிறந்தது எப்படி ?

இது இக்காலத்தில் பலருடைய கருத்துக்களைக் கவர்ந்திருக்கின்றது. அவரவர்களும் தங்கள் அறிவு அநுபவங்களுக்கு ஏற்பக் காரணம் காட்டி வருகின்றார்கள். அவைகளை எல்லாம் தொகுத்து உணர்வதுகூட உண்மையை அறிந்து கொள்ள உறுதுணையாகும்.

சிலர், நம்முடைய எழுத்து வட்ட வடிவமானது. வட்டம் இயற்கையான வடிவம். குழந்தைகள் வட்டம் வட்டமாக எழுதுவதைப் பார்க்கின்றோம். அதுபோல, எழுதத் தொடங்குபவனும் வட்டம் இட்டான். விரைந்து எழுதும்போது வட்டத்தின் முடிவு நீளக்கோட்டில் முடியும். இதற்குப் 'பிள்ளையார் சுழி' என்று பெயர் சூட்டினர் சமயத்துறை சார்ந்த தக்கோர் என்பர்.

சிலர், ஏட்டிலும், தாளிலும் எழுதும்போது எழுதுகோலின் நேர்மையை ஆராயச் சுழித்து இழுத்தார்கள். வட்டமும், கோடுமான இருவடிவத்தையும் எழுத இந்த எழுதுகோல் பயன்படுமா என்று பார்க்கச் சுழித்து இழுத்தார்கள். தொடங்கிய எதனையும் பிள்ளையாரோடு சேர்த்துவிடும் பெருந்தகையாளர்கள் இதனைப் பிள்ளையார்சுழி என்றனர் என்பர்.

சிலர், ஓம் என்பது முதல் எழுத்து. இதனை விரைந்து எழுதும்போது உ இப்படி எழுதினர் நன்றி மறவாத தமிழ்

Koviloor Digital Library

சத்தி கணபதி,

திருவாவடுதுறை ஆதீனம்,

Koviloor Digital Library

Koviloor Digital Library

மக்கள். எழுத்துக்களுக்கெல்லாம் தாயாகிய பிரணவத்தை முன்னெழுதியே, ஏனையவற்றைப் பின் எழுதினர். இந்தப் பிரணவம் பிள்ளையார் வடிவம். பிரணவத்தின் திரிந்த வடிவம் பிள்ளையார்சுழி என்பர்.

பிரணவமும் — பிள்ளையார் சுழியும் :

ஓங்காரம் பரம்பொருளை உணர்த்தும் சொல். இதற்கு உயர்த்துவது என்றும் பொருள் உண்டு. ஒருமுறை விதிப்படி உச்சரித்தால் உச்சரித்தவனை உயர்வற உயர்ந்த கதியிற் சேர்ப்பது என்பது கருத்து. [1] உபதேசம் பெற்ற ஆன்மா இதனை உச்சரித்த அளவில். பருவுடல் நுண்ணுடல் காரண வுடல் என்ற மூன்றுடலையும் அகற்றிப் பிரகிருதி மண்டலத்திற்கு மேலே உயர்வன் என்பது விளக்கமாம். [2]

இந்தப் பிரணவமே வேதமூலம். இதனைத் தியானித்து அநுபூதி யடைந்தவன் சாவா மூவாப் பேரின்பநிலையை எய்துகிருன். இந்தப் பிரணவம் உயிர்க்குற்றங்கள் அனைத்தையும் அகற்றி, அரனடிக்கீழ்ச் சேர்ப்பிக்கின்றது. இதுவே எல்லா ஒலிகட்கும் மூலகாரணம்; எல்லாத் தேவர்கட்கும் பிறப்பிடம். [3]

இதன் ஒலிவடிவில் அகாரம், உகாரம், மகாரம், இவை ஒவ்வொன்றின் பின்னரும் மனனுணர்ச்சியாலே (பைசந்தி வாக்காக) தியானிக்கப்பெறும் அரைமாத்திரையொலி இவை நான்கும் கூடியுள்ளன. இங்ஙனம் கூடியுள்ள நிலை சமட்டிப் பிரணவம். இதன் வரிவடிவத்தை விளக்க உபநிடதங்களும், ஆகமங்களும் பல உவமைகளை எடுத்துக்காட்டின. அவற்றுள்

---

[1] ஸக்ருதுச்சாரிதமாத்ர ஊர்த்வமுந்நாமயதீத்யோங்கார: ||
— அதர்வசிகோபநிஷத்.

[2] அத கஸ்மாதுச்யத ஓங்கார: யஸ்மாதுச்சார்யமாணோ
ஸர்வம் ஶரீரம் ஊர்த்வமுந்நாமயதி தஸ்மா
துச்யத ஓங்கார: |
— அதர்வசிகோபநிஷத்.

[3] ப்ராணாந் ஸர்வாந் பரமாத்மநி ப்ரணாமயதீதி
ப்ரணவ: |
— முண்டகோபநிஷத்.

Koviloor Digital Library

முண்டகோபநிஷத் ' பிரணவம் வில் வடிவானது '[1] என்றது. சர்ப்ப வடிவான குண்டலினி இது. மூலநாடி அன்னத்தின் குரல்போன்ற ஒலியுடையது என்கின்றது ஞானசித்தி யாகமம்.[2]

பிரணவம் ஐந்தெழுத்துக்களுடைய கூட்டம். முதல் உரு நட்சத்திர வடிவு. அதாவது வட்டப்புள்ளி ●. இரண்டாம் வடிவு தண்டம்போலப் படுக்கையிற் கிடக்கும் நேர்கோடு —. மூன்றும் உரு வட்டம் ○. நான்காம் உரு பிறைமதி ‿. ஐந்தாம் உருவாகிய பிந்து • புள்ளி வடிவு.[3] இவற்றுள் வட்டப் புள்ளியும் நேர்கோடும் சேர்ந்து உ பிள்ளையார்சுழி ஆகிறது. இந்தச் சுழியை இட்டாலே போதும். பிள்ளையார் வணக்கம் ஆகிவிடுகிறது.

முன்னர்க் காட்டியவண்ணம் ஒலிவடிவிலும் வரி வடிவிலும் ஐந்தன் கூட்டாகிய பிரணவத்தில் அகரம் சிவம்; உகரம் சத்தி; மகரம் மலம்; நாதம் மாயை; பிந்து உயிர்.[4] இவற்றுள் அகர உகர வடிவாக உள்ள (உ) பிள்ளையார்சுழி சிவசத்திகளின் சேர்க்கையாகும்.

மற்றோரிடத்தில், திருமூலர் அகாரம் உயிர், உகாரம் இறை, மகாரம் மலம் என்று அருளினர்.[5] இக் கருத்தையும் ஊன்றி அநுபவித்து, அகர உகரக் கூறாக இணைந்த பிள்ளையார் சுழியையும் உற்றுநோக்குவோம். இறையுடன் நாம் ஒன்றி

---

[1] 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃 ।
— முண்டகோபநிஷத்.

[2] 𑌨𑌾𑌡𑌿𑌂 𑌭𑌿𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌵𑍍𑌰𑌜𑌤𑍍𑌯𑌾𑌶𑍁 𑌕𑌣𑍍𑌠𑍇 𑌹𑌂𑌸𑌨𑌿𑌸𑍍𑌵𑌨𑌾𑌃 ।
— ஞானசித்தி.

[3] 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌤𑌾𑌰𑌕𑌾𑌕𑌾𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌦𑌣𑍍𑌡𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌕𑌾𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌂 𑌹𑍍𑌯𑌰𑍍𑌧𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌪𑌞𑍍𑌚𑌮𑌂 𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌵𑌂 𑌪𑌞𑍍𑌚𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥
— காமிகம்.

4 " இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள் "- — திருவருட்பயன் பா. 82.

" ஆமே சிவங்கள் அகார உகாரங்கள் " — திருமந்திரம். பா. 891.

5 " அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் மலமாய் வருமுப் பதத்தில் " — திருமந்திரம். பா. 975.

Koviloor Digital Library

யிருக்கும் நிலையைக் காண்போம். தாடலைபோல அகாரமாகிய உயிர், உகாரமாகிய இறைவனோடு இயைந்து, அகாரமாகிய உயிர் வடிவம் அற்று, உகார வடிவே வடிவாய் - பிள்ளையார் சுழியாய் - அத்துவிதமாய் நிற்கும் சுத்தாத்துவித சித்தாந்த முத்தி நிலையைத் தெரிவிக்கும் குறியீடாகும். இந்த இயைபு நம்மையறியாமலே நம்வாழ்க்கையில் சித்தாந்தச் செந்நெறி கலந்திருப்பதைக் காட்டும் சிறந்த சான்றாகும்.

பிரணவத்தின் ஐந்து கூறுகளுக்கும் உரிய அதிதேவதைகள் இன்னார் இன்னார் என்று கூறவந்த சிவஞானபோதம் அகரத்திற்குப் பிரமனையும், உகரத்திற்குத் திருமாலையும், மகரத்திற்கு உருத்திரனையும், விந்துவிற்கு மகேசனையும், நாதத்திற்குச் சதாசிவனையும் கூறிற்று.[1] இதனையும் நம் மனத்துட்கொண்டு பிள்ளையார்சுழியைப் பார்ப்போம். எழுதத் தொடங்குவது என்பது இலக்கிய சிருஷ்டி. அதற்கு முன் பிரமனை அதிதெய்வமாகக் கொண்ட அகரத்தின் கூறாகிய ௦ இதனையும், தோன்றிய இலக்கியம் நின்று நிலவுதற் பொருட்டுத் திருமாலை அதிதெய்வமாகக்கொண்ட உகரத்தின் கூறாகிய — இதனையும் இணைத்து ௦— பிள்ளையார் சுழியாக எழுதுகிறோம். இதன் அடிப்படையுண்மை 'தோன்றிய இலக்கியமாகிய அறிவுக்கோயில், என்றும் நின்று நிலவுவதாகுக' என்ற நற்குறிப்பாக இருத்தல் நம்மனோர்க்குச் சிறந்த ஞானவிருந்தாகும். இங்ஙனம் பிரமாதிகளை அதிதெய்வங்களாகச் சொன்னது உபசாரம்.[2]

○ வட்டம் நகாரம். — படுக்கையான நேர்கோடு மகாரம். ३ இது சிகாரம். ⌣ பிறைமதி வகாரம். • பிந்து யகாரம். இவை திருவைந்தெழுத்தின் வடிவு[3]. இவற்றில்

---

1 "எண்ணில வோங்காரத் திசர் சதாசிவமாம்
நண்ணிய் விந்துவொடு நாதத்துக் - கண்ணில்
பகரயன்மா லோடு பரமனதி தெய்வம்
அகரவுக ரம்மகரத் தான்" — சிவஞா. சூ. 4, பா - 4

2 𑌅𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌂 𑌨𑌾𑌭𑍌 𑌉𑌕𑌾𑌰𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂
𑌹𑍃𑌦𑌯𑍇 ।

𑌮𑌕𑌾𑌰𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌂 𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑍇 𑌓𑌂𑌕𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌂
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑍇 ॥ —அதர்வசிகா, நிருசிம்மதாபந்யோபநிஷத்.

3 இந்துசாதனம் ஜய ஆடி 29உ இதழ்.

Koviloor Digital Library

வட்ட வடிவாகிய நகாரமும் கோட்டு வடிவாகிய மகாரமும் சேர்ந்த பிள்ளையார்சுழி ந ம என்றதன் வடிவாகும். இதற்கு வணக்கம் என்பது பொருள். வணக்கமாவது ஆணவத்தின் விளைவான தற்போதமடங்கித் தான் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவன்; முற்றறிவும் முற்றுத்தொழிலும் உடைய பரம்பொருளின் உடைமை என்பதை அறிந்து அடங்கி இருத்தல். பிள்ளையார் சுழியை யிட்டால் பசுபோதம் அடங்கிப்போக, பதிபோதம் மேற்பட்டிருக்கிறது. அப்போது இயற்றப்பெறும் தொழில்கள் யாவும் சிவன்செயலே என்பதைக்காட்டும் அடையாளமாகும்.

இனி மற்றொரு முறையும் வேறு பெயரும் :

பிந்து புள்ளி வடிவம்; இது சக்தி. நாதம் சிவம்; இது தண்ட வடிவம். இவ்விரண்டின் இணைப்பு — பிள்ளையார்சுழி; நாதபிந்துக்களை ஒலிப்பது எப்படி? முடியாது. அதனுலே இது பெயர்மாத்திரையான் உணரவேண்டிய தாயிற்று. இத்தகைய அநாதி மூலப் பொருள்களாகிய சிவசத்திகளின் நினைவோடு, அவற்றின் வேருகாத - இணைந்து உண்டான பிள்ளையாரை நினைவூட்டப் பிள்ளையார்சுழி இடப் பெறுகின்றது. ஒலிக்க முடியாமையால் இதனை ‘ஊமை எழுத்து’ என்றழைப்பர் பெரியோர். சாத்திர நூல்கள் இதனை மௌனுக்கரம், மூலமனு, மௌனக்குறி என்ற பெயர் களால் வழங்குகின்றன.

இதுகாறும் கூறியவாற்ருல், பிள்ளையார்சுழி மூலமனு வாகிய பிரணவத்தின் சிதைந்தவடிவே என்பதும், உயிரும் இறையும், சிவமும் சக்தியும். ஒன்ருகக் கலந்துள்ள நிலையைக் காட்டும் அடையாளமாம் என்பதும், இதனை எழுதுவதன் வாயிலாக ஆன்மாக்கள் தற்போதங்கெட்டுப் பதிஞானம் மேவரப் பெறுகின்றனர் என்பதும், அந்நிலையில் இயற்றப் பெறும் செயல்கள் யாவும் சிவன் செயலேயாக விளக்கம் பெறும் என்பதும் உணர்த்தப்பெற்றன.

இவ்வண்ணம், எண்ணத்திலும் எழுத்திலும் செயலிலும் கலந்து நின்று காத்துவருகின்ற பிள்ளையாரை வணங்கும் பழக்கம், வழிவழியாகப் பரவிவரப் பெரியோர்கள் என்ன என்ன முறையைக் கையாண்டனர் என்பதையும் பார்ப்போம்.

Koviloor Digital Library

ஸ்ரீ பக்தி கணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிள்ளையாரும் - பெரியோர்களும்

பிள்ளையார் வணக்கம் நிலைக்கப்
பெரியோர் கையாண்டமுறை:

நமது தாத்தாக்கள் பொழுது விடிய நான்கு நாழிகைக்கு முன்பே எழுந்துவிடுவார்கள். தங்கள் பேரன் பேத்திகளை எழுப்பி உட்காரவைத்துக் கொள்ளுவார்கள். அன்பு கனிந்த குரலால் பிள்ளையார் சிந்தனை யென்னும் 'வேழ முகத்தைப்' பாராயணம் செய்விப்பார்கள். அவர்கள் கருத்து, கம்பங்கொல்லையும் கொத்தினதாகட்டும்; தம்பிக்கும் பெண் பார்த்ததாகட்டும் என்பதுபோலப் பிள்ளையார் வணக்கத்தையும் பழக்கியதாகட்டும்; பிள்ளையுள்ளத்தில் நினைவுவன்மையையும் பெருக்கியதாகட்டும் என்பதே.

தாத்தா செய்வதைப் பார்த்திருக்கின்ற பாட்டிமார்கள் பங்கு சொத்தையா? ஒய்ந்த நேரத்தில் குழந்தைகளைக் கூப்பிட்டு உட்காரவைத்துக் கொள்ளுவாள். உள்ளம் உருக்கும் தெள்ளத் தெளிந்த பாடல்களாகிய,

"குள்ளக் குள்ளனைக் குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பனை விநாயகனைத் தொழு."

"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி யோடும் தொடரும் வினைகளே."

"கருணை வள்ளல் கணபதியைத் தொழ
அருமைப் பொருள்கள் அனைத்தும் வருமே."

"முப்பழம் வெல்லம் மோதகம் தின்னும்
தொப்பை யப்பனைத் தொழவினை இல்லை."

"வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்."

இவற்றைப் பாட்டிக்கே சொந்தமான, தழுதழுத்த குரலால் பொக்கை வாயால் பாடுவாள். குழந்தைகளுக்குப் பாட்டு

Koviloor Digital Library

என்றாலே அலாதிப் பிரியம். தாயின் தாலாட்டிலே உருவான உள்ளம்படைத்த அவைகளுக்கு ஒரே கும்மாளம். பாட்டிப் பாட்டை அப்படியே வாங்கிப் பாடும். பாட்டின் எளிமை அவர்கள் கருத்திற்கு விருந்தாகி அவர்களை ஆடவும் வைக்கும். பாடல் அநுபவத்தில் தங்களைப் பிள்ளையாராகவே எண்ணிக் கொள்வார்கள். பாட்டி நினைத்தபடியே பாலர்களுக்குப் பாடலும் வந்தது; நினைவு வன்மையும் நிலைத்தது; படிப்பும் வந்தது; பாவனையும் முற்றிற்று; பயனும் சித்தியாயிற்று. பாட்டிப் பழக்கம் இது.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

— கபிலதேவநாயனார்.

Koviloor Digital Library

பிள்ளையார் பிறப்பு

பிள்ளையார் எப்படிப் பிறந்தார்?

பிள்ளையார் பிறப்பைப்பற்றி ஆராய்வதற்குமுன், இறைவன் பிறப்பையும் அறிந்துகொள்ளுதல் அவசியம். அப்பன் பிறப்பைப் போலத்தானே இருக்கும் மகன்பிறப்பும். குமரன் இயல்பைக் கூறவந்த நகைச்சுவைக் கவிஞர் காளமேகனாரும் [1] கோத்திரத்துக் குணங்களைக் கூறுவதைப் பாருங்கள். அதுபோலத்தான் பிள்ளையார் பிறப்புப்பற்றியும் இருக்கும். பொதுவாகப் பிறத்தல் என்பது நித்தியமாகிய உயிர் செய்த வினைக்குத் தக உடலோடுகூடி உலகில் தோன்றுதல். கடவுட் பிறப்பு இத்தகையதன்று.

ஒலியுருவில் உள்ள எழுத்து எளிதில் எங்கும் யாரும் அறிந்துகொள்ள வரிவடிவாக அமைதல்போல, அறிவுருவாக அன்பரகத் தாமரையில் அவரவர் பரிபாகவிசேடத்திற்குத்தகக் காட்சி வழங்கும் இறைவன், உருமேனியைத் தாங்குகிறார். அவர்கொள்ளும் மேனி நம்மேனிபோல மாயையின் காரிய மன்று. உயிர்மேல்வைத்த கருணையால் அவரே தாங்கிக் கொண்டவை. அவ்வுருவால் அவரியற்றும் தொழில்கள் யாவும் உயிர்களாகிய நமக்காகவே. ஆதலால் அவருரு உலகினைக் கடந்தது. உலகெலாம் அவர்வடிவு. உலகிற் கெல்லாம் அவரே உயிர். இங்ஙனமாகிய அவர் திருமேனி நமது கருமேனி கழிக்கவந்த கருணையின்வடிவு. [2] இங்ஙன மாக, சமயத்துறைக்கும் - தங்கள் அறிவுத்துறைக்கும் ஏணி யிட்டு இயைபு காட்டும் நுண்ணறிவாளர் சிலர் உண்மை கூறுவார்போல 'இறைவன் வடிவெல்லாம் என்ன? நம் கற்பனையால் படைத்திட்டுக்கொண்டவைதாமே!' என்பர்.

நம் கற்பனை, கண்டதைக்கொண்டு, அறிந்த ஆற்றலை அதனிடத்து அமைந்ததாகக் கருதச் செய்யுமேயன்றிக் கடந்த நிலையை அதனிடத்துக் கற்பிக்கச் செய்யாது; ஆற்றலின்மை யான். அம்மட்டோ! நம் அறிவுக்கு எட்டாத அதிகமான

1 தனிப்பாடல் 'அப்பன் இரந்துண்ணி' 2 சித்தியார், சுபக். சூ. 1, பா-55

Koviloor Digital Library

பயனையும் அளியாது. இதனாலேயே, இறைவன் தானே கொள்ளுந் திருமேனியன் ஆதலின் [1] "வேண்டத்தக்கது அறிவோய் நீ" என்றும், நாம் வேண்டத்தகுவனவற்றை அவரறிந்து நமக்கு அறிவிக்க நாம் அறிந்து வேண்டுவோமாயின் முழுதும் தருவர் ஆதலின் [2] "வேண்ட முழுதும் தருவோய் நீ" என்றும் போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

இவ்வண்ணம், அருளே காரணமாக அவர் கொள்ளுந் திருமேனி எப்படிப் பிறந்தது? எப்போது பிறந்தது? என்று ஆய்தல் முடியுமா? இவர் தந்தைநிலை இப்படியாக இவர் நிலையும் அத்தகையதுதானே.

சிவகுடும்பம் :

சிவன் பெரிய குடித்தனக்காரர்போலிருக்கிறதே. அவருக்கு மலையரசன் மகள் மனைவி. பிள்ளைகளோ நாலுபேர். அவர்களில் இருவர் மிக விளக்கம் அடைந்தவர்கள். ஒருவர் விநாயகர். மற்றவர் முருகன். இந்தப் பிள்ளைகளைப் பெற்றும் சிவன் பிரமசாரியாம்; உமை கன்னியாம்; இது எப்படி? என்று வினவலாம். மகன் என்றது, உலகியலில் ஒரு தந்தைக்குத் தாயிடத்து ஒருயிர் மகவாகப் பிறத்தல் போன்றதன்று சிவ குடும்பத்தில் உள்ள தந்தை மகன்முறை. தேவர்களாகிய உயிர்கள், செய்த தீவினையைச் சூரபன்மன் ஆட்சியென்னும் துன்பத்தால் நுகர்ந்து கழித்தபிறகு, அவர்களைக் காப்பாற்ற - துன்பக்காரணனாகிய அவனைத் தொலைக்கத் தானே ஆறுமுகந்தாங்கி, தன்னாற்றலாகிய ஆறு பொறிகளை உண்டாக்கினார். அவை உருவாயின; ஓடின; ஆடின. உமையம்மை ஒன்றுகூட்டக் கந்தனாயினர்; தேவர் தலைவராயினர். இதனால் இறைவனின் வேறல்லன் முருகன். அதுபோலவே பிள்ளையாரும், தன்னின் வேறாகாத தனது ஆற்றலை அதுவும் ஒலியின் வன்மையைத் தன்னின் வேறாக்கித் தந்தார். அதுவே உலகப் படைப்பின் முதல் தோற்றம். இதனை 'ஓங்காரத்தில் விளங்கும் முதல்வன் படைப்புக்கு முந்திய தோற்றமுடையனாய், விந்து நாதச் சேர்க்கையால் விளைந்த முதலோசையில் முளைந்து நிற்பவனாதலின் அவன் விந்து

1, 2 திருவாசகம், பா. 499, 499.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

நாதங்களை இயக்கி நிற்கும் அம்மையப்பருக்கு மூத்தபிள்ளை போல்வன்' என்ற மறைமலையடிகளின் எழுத்தும் நன்கு விளக்கும். [1]

இங்ஙனம் உள்ள உண்மைநிலையை அறிந்துகொள்ளும் அறிவாற்றலை இயற்கையே பெற்றிருந்தும் நம்மவரிற் சிலர், பிள்ளையார் மகனுனதைப்பற்றி என்னென்னவோ கூற, நமது பண்பாட்டை எழுத்து மூலமாகப் பயின்ற மேனுட்டறிஞர் ஒருவர் [2] 'பரம்பொருள் தனக்குள்ளே தானே, ஆற்றலை அதாவது ஞானசத்தியை உலகம் தொழிற்படுவதற்காகப் படைத்துக் கொண்டது. அம் முதற் படைப்பு வாக்கு. அதன் முதல்நிலை பிரணவம். அது பெற்ற காட்சியுரு கணபதி வடிவம்' என்று எழுதுகிறுர். இவர் தம் கருத்துக்குத் துணையாக, 'தேவர்கள் பிறப்பதற்கு முன்பே பிரமத்தினின்றும் வாக்குத் தோன்றியது; அதன் முதனிலையே பிரணவம்' என்ற [3] கடோபநிஷத்தைக் கையாளுகிறுர். இவ்வண்ணம், சிவகுடும்பம் வாக்கு வடிவாக ஒரு பிள்ளையும், ஆற்றல் வடிவாக ஒரு பிள்ளையுமாக விரிந்தது.

உண்மை இவ்வாருக, பிள்ளையார் எங்கே பிறந்தார்? எப்படிப் பிறந்தார்? என்ற ஆராய்ச்சி எங்கும் தலைமுட்டி நிற்கிறது. எல்லோர்க்கும் இதில் பிடித்தமாகச் சிலவற்றைத் தெரிவித்துவிட்டு நன்மதிப்பைப் பெறுவாரும் சிலர் உளர். இவர்கள் முடிவையே முடிவாகக்கொண்டு, நாட்டின் அறியாமையை விரட்டிவிட்டதாக எண்ணும் அறிவுதயங்கள் சில. புராணங்கள் யாவும் பொய் என்பவர்களும் பிள்ளையார் பிறப்பைப்பற்றி ஆராய, புராண வரலாறுகளையே ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். ஆதலால், பிள்ளையார் பிறப்பைப் பற்றிய உண்மையைக் காண, புராணங்களைப்பற்றிய சில பொதுக் கருத்துக்களை அறிந்துகொள்ளுதல் அவசியம்.

புராணங்கள் கதைகளின் வாயிலாக மக்களைச் சிவ வழிபாட்டிற் செலுத்தும் கருவிகள். இறைவனுடைய

---

1 'மாணிக்கவாசகர் காலம்' பக். 279,

2 Tamil culture Vol. III, No, 2. Page 154-155,
Reverend. H. Herass. S. J.

3 கடோபநிஷத் II. 4 - 6.

Koviloor Digital Library

பொதுவியல்பு, சிறப்பியல்புகளைச் சாத்திரவாயிலாக நுண்ணி தின் அறிந்துகொள்ளும் ஆற்றலில்லாத மக்களைத் தெளிவிப் பதற்காக இயற்றப்பட்ட சாதனங்கள். இவற்றின் வாயிலாக அறிந்துகொள்ள வேண்டிய தத்துவக் கருத்துக்களை விடுத்து, கரும்பிருக்க இரும்பு கடித்து இளைத்தவர்களைப்போல, கனியிருப்பக் காய்தின்று வாய் புளித்தவர்களைப் போல, கருப்பஞ்சாற்றை ஒழுகவிட்டுச் சக்கையைச் சுவைத்து அலுத்தவர்களைப்போல, புராணவரலாறுகளை, இறையியல்பு களைக் குறைக்கும் கருவிகளாகக் கொண்டனர் பலர். எடுத்துக்காட்டாக, உயிர்கள் இன்பநிலை எய்துதற்கு மும்மலங்கள் தடையாகவுள்ளன. அம்மலங்கள் மூன்றும் தன்மையாலும் வன்மையாலும் பொன் வெள்ளி இரும்பு மூன்றாலும் இயன்ற கோட்டைகள். அவற்றை ஒருசேர இறைவன் சிரித்து எரித்து, உயிர்களை உய்யக்கொள்கிறார். [1] அங்ஙனம் உய்ந்தவர்களை தம் அணுக்கத் தொண்டராகவும், அன்பராகவும் அமைத்துக்கொள்கிறார் [2] என்ற உண்மையை உணர்த்த, முப்புரங்களிருந்தன ; அவை பறக்குந் தன்மையன ; ஊர் ஊராக அமுக்கிவிடும் ஆற்றல் உடையன ; அவற்றை இறைவன் சிரித்து எரித்தார் என்று வரலாறு கூறுகின்றன புராணங்கள். [3] பரிபாடல் முதலிய சங்க நூல்களும் இவ் வரலாற்றை இப்படியே ஓதுகின்றன. இதனைவிட்டு எங்கே யாவது கோட்டை பறக்குமா ? அவற்றைச் சிரித்து எரித்தார் என்பது எப்படி அறிவுக்குப் பொருந்தும் ? என்று வினவுவதா ஏற்புடையது.

---

1 " அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரம் என்பது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யார் அறிவாரே. " — திருமந்திரம், பா-343.

2 " மூவெயில் செற்றஞான்று உய்ந்த மூவரில் இருவர் நின்
திருக்கோயிலின்வாய்தல்
காவலாளர்என் றேவியபின்னை ஒருவ நீ கரிகாடரங்காக
மானைநோக்கியோர் மாநடமகிழ மணிமுழாமுழக்க அருள்செய்த
தேவதேவ நின்திருவடி யடைந்தேன் செழும்பொழில்
திருப்புன்கூருளானே "
— சுந்தரர், திருப்புன்கூர், 8.

3 பரிபாடல் 5: 22 - 26. புறம் 55.

Koviloor Digital Library

அவ்வண்ணமே, விநாயகப்பெருமான் தோற்றத்தையும் விளக்க, பல புராணங்கள் பல வரலாறுகளைப் பகர்ந்தன. புராணங்களிற் சில சைவ புராணங்கள். சில வைணவ புராணங்கள், சில அக்கினி, சூரியன் இவர்களைப் பற்றியன. இங்ஙனம் சமயச்சார்புடைய புராணங்கள், வரலாற்றைப் பலவிதமாகக் கூறுதல் இயல்பு. அன்றியும் கேட்கும் பக்குவர்களுக்கு ஏற்பவும் அவர்கள் சூழ்நிலை - வாழ்வியல்களுக்கு ஏற்பவும் வரலாறுகளை வகுக்கும் பொறுப்பு புராணங்களுக்கு அமைவதாயிற்று. அதனாலும் வரலாறுகள் பலதிறப்படுவன ஆயின. அவற்றையெல்லாம் கிடைத்தவரை தொகுத்து எழுதுவாம்.

சிவபுராணம் :

ஒருக்கால், உலகமாதாவாகிய உமாதேவி, ஒரு பிள்ளையைப் பெற்றுத் தாமும் கொஞ்சிக் குலாவவேண்டும் என்று எண்ணினார். மண்ணால் உருச் சமைத்தார்; உயிர் கொடுத்தார்; தன் மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தார். இதனைத் திருக்கண்ணோக்கிய சிவபெருமான் எல்லாத் தேவர்களுக்கும் அறிவித்துப் புதல்வர்ப்பேற்றைக் கொண்டாடத் திருவுளம் பற்றினார்; தூதுபோக்கினார். தேவர்கள் அனைவரும் திருக்கயிலை வந்தனர். அவர்களோடு சனியனும் வந்தான். அவன் பார்வை அந்த அழகிய குழந்தையின்மேல் விழுந்தது. அதனால் அதன் தலை அறுபட்டுப்போயிற்று. அற்ற தலையும் மறைந்தது. அம்மை வருந்தினர். வருங்காலக் குறிப்புணர்ந்த வள்ளல் சிவபெருமான் பூதகணங்களைப் பார்த்து இவ்வனத்தில் வடக்கே தலைவைத்துறங்கும் விலங்கொன்றின் தலையையாவது கொணர்க என்று ஆணைதந்தனர். அவர்களும் அங்ஙனமே சென்றார்கள்; ஓர் யானைத் தலையைக் கொணர்ந்தார்கள். சிவபெருமான் அதனைப் பொருத்திக் குழந்தையை உயிர்ப்பித்துக் கொடுத்தனர். திருவுளக் குறிப்பறிந்த உமையம்மை உள்ளம் மகிழ்ந்தார். இறைவன் யானைமுகப் புதல்வரைக் கணநாதராக்கினார்,

மத்ஸ்யபுராணம் :

உமாதேவியார் தன் தோழியரான ஜயை விஜயைகளுடன் அந்தப்புரத்திலுள்ள திருமஞ்சன அறைக்கு நீராடச் சென்றனர்.

Koviloor Digital Library

அப்போது ஐயை என்பாள் 'சிவகணத்தவர்களான நந்தி பிருங்கிகளைத்தானே, யாமும் காவலாக வைத்திருக்கிறோம்; நமக்கென்று தனியாளைப் பெருமாட்டி ஏன் படைத்து வைத்துக்கொள்ளக்கூடாது' என்று வேண்டிக்கொண்டாள். உமையம்மை தன் திருமேனியின் அழுக்கை உருட்டி உருவாக்கி உயிர்கொடுத்துக் காவல் வைத்துச் சென்றனர். அக்காலை, சிவபெருமான் உமையம்மையாரைக் காண உள்ளே வந்தார். புதுக்காவலன் தடுத்தான். முடிவில் தரமறியா அவனது தலையைப் பரசினால் வெட்டினர். செய்தியறிந்த பிராட்டி வருந்தினர். சிவபெருமான் யானைத் தலையைப் பொருத்தி உயிர்ப்பித்தனர்.

சுப்பிரபேதம் :

உமையும் சிவபிரானும் உய்யானவனத்திற்குச் சென்றனர். அங்கே பிடியுங் களிறும் தம்முட்கலந்து நின்றன. அவற்றைக் கண்ட இவர்களும் பிடியுங் களிறும் ஆயினர். பிள்ளையார் பிறந்தார். இந்த வரலாறு திருஞானசம்பந்த சுவாமிகளது 'பந்தத்தால்' என்னும் கழுமலப்பதிகத்திலும் 'பிடியதனுரு' என்ற வலிவலம் திருப்பாடலிலும் குறிக்கப்பெறுகின்றது.

(விக்னேசுர பிரதிஷ்டாவிதி சுலோகம் 1-6.)

காஞ்சிப்புராணம் :

சிவபெருமானும் உமாதேவியும் உய்யானம் சென்றனர். அங்கே உள்ள 'மந்திரசாலா' என்ற மண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது. இருவரும் அதனையே உற்று நோக்கினர். சமஷ்டிப் பிரணவமாகிய அது பிரிந்து, இறைவன் எழுத்தாகிய அகரம் களிறாகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பிடியாகவும் ஆயிற்று. அவை இரண்டும் கூடின. விநாயகர் தோன்றினர்.

கந்தபுராணம் :

உய்யானத்திருந்த சித்திரமண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் உற்று நோக்கினர். பிரணவம், பிடியும் களிறுமாகிப் புணர்ந்தன. விநாயகர் அவதரித்தார்.

Koviloor Digital Library

"அக்கணத் தாயிடை ஐங்கரத் தவன்அருள்
முக்கணுல் வாயினுன் மும்மதத் தாறுபாய்
மைக்கருங் களிறெனும் மாமுகத் தவன்மதிச்
செக்கர்வார் சடையனேர் சிறுவன்வந் தருளினுன்"

(கயமுகன் உற்பத்திப் படலம்.)

விநாயகபுராணம்:

பரசிவம் உலகைப் புனருற்பத்திசெய்யத் திருவுள்ளங் கொண்டு விநாயகராக உருவுகொண்டனர். முக்குணங்களையும் பிரம விஷ்ணு ருத்திரர்களாகப் படைத்தனர். அவர்கள் மூவரும் தத்தம் தொழில் கைவரவேண்டும் என்று விநாயகரை நோக்கித் தவஞ்செய்தனர். முன்போலவே விநாயகர் காட்சி வழங்கினர். முத்தொழிலாற்றலையும் அவரவர்களுக்கு அளித் தனர்.

(மூவர் உபாசித்த படலம்.)

கபிலர் அரிய தவஞ்செய்து பெற்ற சிந்தாமணியைக் கணன் என்னும் அரசன் கவர்ந்து கொண்டான். அதனைத் திரும்பப்பெறுவதற்குப் பெரிதும் தவஞ்செய்தார். அவருடைய தவஅனல் அனைத்துலகையும் பொசுக்கிற்று. விஷ்ணுவின் மாயையாகிய சாருகாசினி வெளிப்பட்டு 'இழந்த பொருளைத் திரும்பப்பெற்று உன்கவலை தீரவேண்டுமாஞல் விநாயகரை நோக்கித் தவஞ்செய்க; சிவனே விநாயகர்' என்று கூறி மறைந்தனள். கபிலர் அவ்வண்ணமே தவஞ் செய்ய விநாயகர் தோன்றினர்.

(சிந்தாமணி விநாயகர் அவதாரப் படலம்)

பாரசுவ முனிவர்க்கும் அவர் மனைவிக்கும் திருக்குமாரராகத் தானே குழந்தையாக மடுக்கரையில் தோன்றினுர். முனிவரும் பன்னியரும் எடுத்து வளர்த்தனர். தங்கள் தவச்சிறப்பை அறிந்து மகிழ்ந்தனர்.

(விக்னராசர் அவதாரம்.)

கமலாசுரன் என்பவன் வேதங்களைத் திருடிக் கடலில் போய் ஒளித்துக்கொண்டான், அதனைப் பெறுவதற்காகப்

Koviloor Digital Library

பிரமன் பன்னுள் தவஞ்செய்தான். விநாயகர் பத்துக் கைகளோடும், யானைமுகத்தோடும் தோன்றி அவனை அடக்கி வேதங்களை மீட்டுக் கொடுத்தார். மல்லாளன் என்னும் அந்தணச் சிறுவனாகவும் தோன்றி வேதங்களைப் பயிற்று வித்தார்.

(மயூரேசர் அவதாரப் படலம்.)

உமாதேவியார் சிவபெருமானிடம் விநாயக மந்திரமாகிய ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசங்கேட்டார். கணபதியை உபாசித்து வந்தார். விநாயகர் ஆறு கரங்களோடும். ஆனை முகத்தோடும் வெண்ணிறமான குழந்தையாகப் பாலசந்திர விநாயகர் என்னும் திருநாமத்துடன் உமாதேவிக்கு மகனாகத் தோன்றினார். அங்ஙனம் அவர் அவதரித்த நாள் ஆவணி மாசத்துப் பூர்வபட்ச சதுர்த்தியும் விசாக நட்சத்திரமும் கூடிய சோமவாரத்தில் சிங்க லக்னமாகும்.

இவ்வண்ணம் விநாயகர் பிறப்பைப்பற்றிய வரலாறுகள் பலவுள்ளன. இவற்றுட் சிலவரலாறுகள், விநாயகர் சிவனே யென்பதைத் தெரிவிப்பன. சில வரலாறுகள் அன்பர்களுக்கு அருள்வழங்க அவரவர்கள் தியானித்தவண்ணம் விநாயகர் தோன்றிய நிலையையே அறிவிப்பன.

இங்ஙனம் பலபடக் கூறுவானேன் :

ஆன்மாக்களாகிய நம்மைப்போல ஒரு தாய் வயிற்றிலே ஒரு காலத்து, குறிப்பிட்ட அங்க அடையாளங்களோடு பிறந்திருப்பின், குறிப்பிட்டு இதுதான் விநாயகர் பிறப்பு; இன்ன ஆண்டிற் பிறந்தார் ; இத்தனையடி உயரம் ; இவ்வளவு பருமன் ; இவ்வளவு எடையிருந்தார் என்று கூற இயலும். அங்ஙனமன்றி, அவரவர்களும் தத்தமக்குப் புலனானவரை கூறினர். இது ஒன்றே இறைவன் பிறப்பு இல்லாதவன்; பிறந்தார் எனப்படுதல் உபசாரவழக்கு ; திருமேனிகொண்டு எழுந்தருளியதை அறிவார் யாரும் இல்லை என்பதைக் காட்டும் சிறந்த சான்றாகும். இங்ஙனம் கூறப்படும் கதைகள் பலவும், விநாயகர் திருமேனி, தாமே மேற்கொள்ளப்பெற்ற-மாயா காரியமல்லாத—ஞானமேயான – நம்முடைய கருமேனிகழிக்க ந்தது என்பதை விளக்கும். இதனை உமாபதிசிவம் 'ஒளியான

Koviloor Digital Library

திருமேனி' என்று அருளிற்று. உண்மை இவ்வாறாகச் சமயம்பழுத்த தமிழர்களில் சிலரும், ஏனையோரும் ' அழுக்குருண்டை ' ' விலங்குப் பிள்ளை ' என்றெல்லாம் கூறிவருகின்றனர். Dr. H. Herass S. J. போன்ற புறச் சமயத்தவர்களும் தத்துவமறிந்து போற்ற, இவர்கள்மட்டும் தூற்றக் காரணம் என்ன? அறிந்து உய்யும் புண்ணியஞ் செய்யாக்குறையே!

பிறப்பு வரலாறுகளின் உண்மை :

உலகப்பொருள்களின் இயல்பை விளக்கப்புகுந்த ஆசிரியர் மலையைக்காட்டி - பாறையைக்காட்டி - கல்லைக்காட்டி - மண்ணைக்காட்டி - அணுவைக்காட்டி - பரமாணுவைக் காட்டுவது போல நாம் கோயில்களிற் காணும் பிள்ளையார், சீகண்டருத்திரகுமார விநாயகராகப் பிரகிருதிபுவனவாசிகளாகிய நம்போன்ற சகலாதியான்மாக்களுக்கு அருள் வழங்குபவர். இவரை அதிட்டித்து நிற்பவர் சுத்தவித்யா தத்துவத்திலுள்ள விநாயகர். இவர் சுத்தவித்யா புவனவாசிகளுக்கு அருள்வழங்கி, ஈசுரதத்துவத்திலுள்ள விநாயகரால் அதிட்டிக்கப்பெறுவர். ஈசுரதத்துவபுவனவாசிகளுக்கு அருள் வழங்கும் விநாயகர் பரநாத வடிவினராகப் பரசிவத்தின் வேறுகாதவராக இருப்பவர். இந்நிலைகள் யாவும் அவனருளே கண்ணுகக் காணவேண்டிய அநுபவத் திறங்கள். இவ் வண்ணம் அறிவினுக்கறிவாகி விளங்கும் விநாயகர் பிறந்தார் என்பதும் சில உண்மைகளை விளக்கிநிற்றல் தெளிவு.

சிவனும் பார்வதியுங்கூடிப் பிள்ளையாரைப் பெற்றனர் என்பது அகார உகாரங்களாகிய சிவமும் சக்தியுங்கூடியே சுத்தமாயாகாரியமாகிய நாதப் பிரணவமாயிற்று என்பதை விளக்க எழுந்ததாம். அதற்குமேல் சக்தி உன்முகமான பரசிவம் பரநாதப் பிரணவத்தை ஈன்றது என்பதும் அங்ஙனம் உபசாரமே. இந்நுணுக்கத்தை எங்ஙனம் அனைவருக்கும் உணர்த்த இயலும். மலையைக்காட்டி விளக்கும் உலகியல் ஆசிரியரைப்போலவே புராண ஆசிரியர்கள் சிவனும் பார்வதியும் நடைமலையாகிய ஆனையும் பிடியும் ஆயினர்; விநாயகர் பிறந்தார் என்றனர். அரசன் நாட்டில் எதனையும் செய்யலாமாயினும் ஊர்காவலையும் - கள்ளனைக் கண்டுபிடித்தலையும்

Koviloor Digital Library

வீரனைக்கொண்டே இயற்றல் நேர்மையாதல்போல ஆக்கலாதி ஐந்தொழிலையும் ஒருசேர ஒரேகாலத்து ஆற்றும் வன்மை இறைவர்க்கு உளதாயினும் பிரமனாதியரைக்கொண்டே இயற்றுவிப்பர். அதிலும் சிருட்டி முதலானவற்றிற்கு முதற் காரணமான மாயையைக்கொண்டே இயற்றுவர். ஆதலால் இறைவனது நீங்காத வன்மையாகிய பராசக்தி தன் அழுக்கைக்கொண்டு உருவாக்கினாள்; மண்ணைக்கொண்டு உருவாக்கினாள் என்றது (அழுக்கு[1] - மாயை. மண்[2] - மாயை.) மாயையைக்கொண்டு முதற்படைப்பைத் தொடங்கினாள் என்பதாகும். 'ஐங்கலப்பாரம் சுமத்தல் சாத்தற்கு விளையாட்டு' என்றாற்போல, சிருட்டியாதி தொழில்களும் இறைவற்கு ஓர் விளையாட்டு. மூட்டை தூக்கலால் வேர்த்தல், இளைத்தல் முதலிய விகாரங்களும் பிறவும் நமக்கு உண்டாதல்போல, படைத்தலாதி தொழிலியற்றலால் இறைவன் விகாரியாகான் என்பதை உணர்த்தவே மண்ணாலே பொம்மைசெய்து உயிர் கொடுத்து வைத்துக்கொண்டு உமைவிளையாடினாள் என்றது. மேலும் ஒன்றாத இரண்டை (தேவ உடலையும் - விலங்குத் தலையையும்) ஒன்றவைத்தார் என்பது இறைவனுடைய (எல்லாம்வல்ல தன்மைக்கு) அளவிலாற்றலுக்கு அமைந்த எடுத்துக்காட்டு அம்மையின் காவலனை வெட்டிக்கொன்றார்: தலைகொடுத்துக் காத்தார் என்பது 'ஆக்கலும் அழித்தல்தானும் அவனருட்செயலேயாகும்' என்பதைக் காட்டுகிறது.

---

1 சித்தியார் சு 2. பா-52. 2 சித்தியார் சு. 1. பா-18.

Koviloor Digital Library



தருண கணபதி,
திருவாவடு துறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

திருவுருவத் தத்துவம்

விநாயகர் திருமேனி ஞானமே வடிவானது என்பது முன்னரே கூறப்பெற்றது. அவருடைய கரசரணுதி அவயவங்களும் அங்ஙனமே என்பதை விளக்குவாம்.

திருவடி: ஆன்மாவைப் பொருந்தி நின்று மலகன்ம மாயைகளைத் தொழிற்படுத்தி இருமையின்பத்தையும் அளிப்பது ஞானம். இத்தகைய ஞானம்பொருந்த உயிர்கள் விளக்கம் பெறுகின்றன. அந்த ஞானமே விநாயகப்பெருமானுடைய திருவடிகள். சிவபெருமானை ஞானத் திருவுருவாகக்காட்டும் குமரகுருபர அடிகள் 'ஞானம் திருவடியா' என்றது இதற்குப் பிரமாணம். இந்த ஞானத்திருவடி அன்பரகத் தாமரையிற் பொருந்த உயிர்கள் பிராரத்தவினையால் விளையும் இன்னலும் வலிகுன்றிப் போக, வருவினையும் செய்வினையும் சேரா தொழிய என்றும் இன்பம் பெருக உதவுகின்றன.

பெருவயிறு: ஆகாசம் எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும், உண்டாகவும் இடந்தந்து இருப்பதுபோலப் பெருவயிருகிய ஆகாசமும் எல்லா உலகங்களும் உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிடுவது.

ஸர்வம் ஜகதிதம் த்வத்தஸ்த, திஷ்டதி

என்பது சுருதி. விநாயகர் விஸ்வரூபராகையால் அவரிடம் எல்லாம் அடங்கல் இயல்பேயாம். தான் எல்லாவற்றிலும் வியாபகமாய், அவைகளை வியாப்பியமாக அடக்கிவிளங்கும் சர்வகாரணத்துவ சக்தியாயுள்ளது பேழை வயிறு என்பது கருத்து.

ஐங்கரம்: கரம் கன்மேந்திரியமாகிய தொழில்புரிகருவி. விநாயகருக்கு ஐந்து கரங்கள்; அவற்றில், ஒருகரத்தில் பாசம் ஏந்தியிருக்கிருர். பாசம் பற்றுள்ளத்தைப் பிறப்பித்துப் பிணித்து நிற்பது. பிணிப்பு பிறத்தற்கேது. அப்பாசத்தைத் தரித்த கரம் அவரது படைத்தற்ருெழிலைக் குறிப்பது. ஒரு கரம் அங்குசம் தரித்தது. அங்குசம் அழிக்குந்தன்மையது. அதனை ஏந்திய கை அவரது அழித்தற்ருெழிலை அறிவிப்பது. அமைத்த கரமாகிய அபயகரம் பிறவிக்கடலில் வினைச்சுழலில்

Koviloor Digital Library

துன்ப இன்பச்சுருவால் தூரத்தப்பெற்று ஓடிவருகின்ற உயிர்களுக்கு அஞ்சாமையளித்துக் காப்பது. ஆதலால் இது 'திதி'வன்மையை யறிவிப்பது. வரதமும் மோதகம் ஏந்தியது மாகிய கரம் அங்ஙனம் அபயம்பெற்ற உயிர்களின் பரிபாகத் திற்கு ஏற்ப அருளலைச் செய்வதாம். இக்கரம் கீழ்நோக்கி யிருப்பது சிறந்த ஞானக்குறி. பிறவிக்கு அஞ்சிவந்தடைந்த ஆன்மாக்கள் அடையுமிடம் திருவடியாகிய முத்திப் பேறு என்பதைக் குறிப்பிப்பது. இவ்வண்ணம் உணர்த்தியும் உலக இன்பத்தையே உயிர்கள் விரும்புமாயின் அவற்றையும் வேண்டியவாறு எய்துக என அள்ளிவீசும் அடையாளமுமாம். துதிக்கை ஊறு உணர்ச்சியும், மணம் அறிதலும், உணவை எடுத்தலும் ஆகிய முத்திறங்களையுடையது. இக்கரம் மோதகத்தை ஏந்தியிருக்கிறது. வரதகரத்தையும் அடுத்துச் சுட்டாமல் சுட்டிக் காட்டுகிறது. இது காட்டியும் மறைத்தும் நிற்கும் திரோதானமாகிய மறைப்புத்தொழிலை அறிவிப்பதாம். இங்ஙனம் ஐந்து திருக்கரங்களும் ஐந்தொழிலை யறிவிப்பன.

கொம்புகள்: ஒடிந்தகொம்பு, துணை உறுப்பினுள் ஒன்ருகவும் இருந்து, ஆயுதமாகவும் பயன்படும். இது அபரஞானமாகிய விந்து. மற்ற ஒற்றைக்கொம்பு நிலைத்த இறைவனை யுணர்தற்கு வாயிலான பரஞானம். கொம்புகளைப் பதிஞானமும் பாசஞானமும் எனக் கூறுதலும் உண்டு. பாசஞானம் வலதுகொம்பாகிய ஒடிக்கப்பெற்ற கொம்பு. பாசஞானம் கலைஞானமாகச் சிவஞானத்திற்கு வாயிலாக இருப்பது. அதனுலேயே இது பாரதம் எழுதத் துணையான எழுத்தாணியாக இருந்தது. பாரதம் மன்னர் வரலாற்றைக் குறிக்கும் பாசஞானநூல். அது பலவிடங்களிற் சிவ பரத்துவங்கூறி, சிவஞானத்திற்கு வாயிலாகிறது. அதனுலேயே இக்கொம்பு பின் ஒருகால் மாயையுருவினனுகிய கஜமுகன்மேல் ஏவப்பெற்றது. அவனுடைய மலமாயைகளின் வன்மையை விரட்டி ஆட்கொண்டது. இங்ஙனம் இல்லையானுல் ஞான வடிவினராகிய விநாயகரின் உபாங்கமாகிய ஞானத்தந்தம் மாயேய உருவினனுன அவனைப் பொருந்தாது. இடதுகொம்பு பதிஞானம். அதனுலேயே பெருமானைப் பொருந்திப் பிரிவின்றி இருக்கிறது. இங்ஙனம் தந்தத்தை ஞானமாக உருவகித்தே*

* அருணகிரிபுராணம் காப்புச்செய்யுள்.

Koviloor Digital Library

"கரணம், மாபுலன் ஆணவ கான்மியம். மரணமாகத் திகழ்ந்த மருப்புடன்" என்பர் பெரியோர்.

தாழ்செவி: திருச்செவிகள் இரண்டும் உயிர்களுக்கு மலவாதனை தாக்காமல் காத்து, வினை வெப்பம் போக்கி யருள்வன. இது எல்லாமறியும் தன்மையைக் குறிப்பது.

முக்கண்: உள்ளீடு பெருக்குதலும், வளர்ச்சியும், பதஞ் செய்தலுமாகிய முத்தொழிலைச் செய்யும் சோம சூரிய அக்கினிகள். 'இறைவற்குச் சுண்மூன்றும் முச்சுடர்' என்ற இலக்கண நூல் எடுத்துக்காட்டும் இதனை வலியுறக்கும்.

பிறைமுடி: உடல், தேய்ந்துபோனாலும், களங்கம் அகன்றது பிறை. அதுபோலத் தவ விரதங்களான் அறியாமை தேய்ந்து உண்மைஞானம் பெற்ற உயிர்களே சிரத்தானம் எய்துதற்குரியவை என்பதைக் காட்டும் அடையாளமாம்.

மும்மதம்: உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், திருப்பெருகு சிவஞானமுமாகிய மூன்று மதங்கள். *"ஞான மதம்" என்று உமாபதிசிவம் குறிப்பிக்கின்றது.

சர்ப்பாபரணர்; உதரபந்தம் பாம்பு, அணி பாம்பு, பூணூல் பாம்பு, பாம்பு குண்டலி சக்தியின் வடிவம். மூலாதாரத்தில் குண்டலியே விநாயகர் விளங்கும் இடம். அச்சக்தி சுருண்ட நிலையிலிருந்து நிமிரின் பாம்பு படம் விரித்து எழுந்து நின்றாற் போல மூலாதாரத்தினின்று சகஸ்திராரம் வரையில் வியாபித்து ஆன்மாவினிடமாகச் சிவம் பிரகாசிக்கச் செய்யும் என்பதைக் குறிப்பதாகும். உந்தியிலும், மார்பிலும், கழுத்திலும், நெற்றி யிலும், உச்சியிலும் பாம்பு படம்விரித்து இருப்பது ஆறுதார நிலையில் அங்கங்கே அநுபவிகளுக்குக் கிடைக்கும் குண்டலி தரிசனத்தைக் குறிப்பிடுகிறது.

யானை முகம்; விநாயகப்பெருமான் யானைமுகங்கொண்ட மைக்குப் பல காரணங்கள் உள்ளன. யானை விலங்கினங் களுக்குள் மிகப்பெரியது; ஆற்றல் மிக்கது; எதனையும் வருத்தமின்றியே சுமப்பது; எத்துணைப்பெரிய படையாயினும்

* சேக்கிழார் புராணம். பா-1.

Koviloor Digital Library

அஞ்சாது அழித்து வெற்றிகாணும் பெற்றியுடையது: படைக்கெல்லாம் படையாயிருப்பது; காலம் வருந்துணையும் காத்திருந்து எதிரியை அழிக்கும் பண்புடையது: இதனை 'ஒளித்த துப்பு' என்பர் புறநானூற்றில். மும்மதம் உடையது. ஏழுமுழம் உயர்ந்தது. ஐந்துறப்பு உறத்தாழ்ந்தது. வனசரம், கிரிசரம், நதிசரம் என்ற மூன்று பகுப்புடையது. உணவு கொடுத்து அன்புடன் பாதுகாக்கும் பாகர் தன்காலில் அடிவைத்தால் முடிமேல் வைத்து உயர்த்துவது. அவர்களுக்கு இடுக்கண் வராமல் பாதுகாப்பது. அவர்கள் கட்ட விரும்பினால் விரும்புமிடத்திற்குச் சங்கிலியையும் தானே கொண்டுபோய்க் கொடுத்து, அவர்கள் கட்டிலகப்பட்டு நிற்பது. இசைக்கு வயப்படுவது. இத்தனை குணங்களும் விநாயகருக்கும் உண்டு.

விநாயகர் தனக்குத் தலைவன் தானேயாய், வேறு தலைவ னின்றி விளங்குபவர். தேவர்கள் யாருக்குமில்லாத அளவிலாத ஆற்றல் வாய்ந்தவர். இவ்வுலகம் எல்லாவற்றையும் தனது வயிற்றகத்தடக்கி இடையூறு புகுதாமே சுமப்பவர். மாயப் படைகளும் இன்னற்படைகளும் எத்துணை திரண்டுவரினும் அடியார்களுக்காக ஒருசேரத் தாக்கி வெற்றிகாணும் வீர கணபதி கணங்கட்கெல்லாம் பதியாயிருப்பவர். ஆன்மாக் களுக்குப் பக்குவம் வருந்துணையும் பார்த்திருந்து அவர்கள் பரிபாகந்தெரிந்து வினை எதிரியை வேரறத்தொலைப்பவர். குண்டலியில் விளங்கி மூலாதாரம் முதல் ஆஞ்ஞை சக்கரம் வரையில் வளர்ந்து, அதனையுங்கடந்த துவாதசாந்தமாகிய ஏழாம் இடத்திலும் உயர்ந்து விளங்குபவர். திருவடிகளும் அபய வரத கரங்களும் திரோதானத்தைச் செய்யும் துதிக்கையு மாகிய ஐந்து உறுப்புக்களும் மிக நீண்டு எங்கிருந்தாலும் அன்பரைத் தேடிக்காக்கும் சிறப்பினையுடையவர். பிரகிருதி தத்துவம், சுத்தவித்தியாதத்துவம், ஈசுவர தத்துவம் என்ற இடங்களிலும் விளங்கி பிரகிருதி, தெய்வம், பரஞானம் என்ற மூன்று நிலையில் அவரவர்களுக்குத்தகத் தோற்றம் தருபவர். பூவும் நீருங்கொண்டு தொழுது வழுவாமல் பூசிக்கும் அன்பர் கள், தோய்ந்த அன்போடு திருவடியைத் தொழுதால் அவர் களைத் தலையாய இன்பவுலகில் ஏற்றியிருத்துபவர். தன்னாலும் பிறவுயிர்களாலும் தெய்வங்களாலும் துன்பம் வாராமற் பாதுகாப்பவர். தன்னைக் கட்ட அன்பாகிய தொடரைத்

Koviloor Digital Library

துவிஜ கணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமே கொடுத்து, அவர்களது உள்ளமெனுங் கூடத்தில், ஊக்கம் என்னும் கட்டுத்தறியில் கட்டுண்டு நிற்பவர். அவர்கள் அளிக்கும் வினைகளும், பசு போதமுமாகிய உணவையுட்கொண்டு அவர்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கூறும் கனிந்த தோத்திரப் பாடலுக்கு வயப்பெற்று அவர்கள் விருப்பப்படி நடப்பவர். இவ்வண்ணம் யானைக்குள்ள குணநலங்களனைத்தும் தமக்கும் இருப்பதாலே யானை முகத்தைக் கொண்டருளினர். அதிலும் தாம், உயர்திணை அஃறிணையென்ற திணைப்பாகுபாடு. ஆண் பெண் என்ற பாற்பாகுபாடு இவற்றைக்கடந்து விளங்கும் நிலையைத் தெரிவிக்க ஒற்றைக்கொம்பும் யானைமுகமும் தேவ உடலும் கொண்டு திகழ்கிறார்.

நச்சினார்க்கினியர், யானை நாதத்திற்றோன்றியது என்பர். இதனாலும் விநாயகர் பரநாத வடிவினராதலாலும் யானைமுகத்தோராயினர் என்னலாம். அதுவும் ஈண்டு இணைத்துச் சிந்தித்தற்குரியது.

மேலும் தெய்வ வணக்கம் நமது நாட்டில் பிள்ளைமைப் பருவத்திலேயே பிள்ளையார் வணக்கத்திலிருந்துதான் தோன்றுகின்றது என்று முன்னர்க் கூறினோம். குழந்தைகளுக்கு யானையைப் பார்ப்பதில் தனி ஆவல். அதிலும் ஒருமுறை இருமுறையல்ல; பலகாலும் பார்க்க ஆசை. விநாயகரையும் ஒருமுறை இருமுறையல்ல பலகாலும் பார்க்க நமக்கு விருப்பம் உளதாகும். யானையின் உருவம் பார்த்தால் மனத்தை விட்டகலாது. அதுபோலவே விநாயகரை ஒருமுறை வணங்கினாற்போதும். உருவம் நெஞ்சைவிட்டு அகலாது. இத்துணை ஏதுக்களால் விநாயகர் யானையின் முகத்தை ஏற்றார் என்பது அறிந்து இன்புறற்குரியது.

கோவிலூர் ஆதீனம்
Acc.No: 1189
கோவிலூர்-630 307

Koviloor Digital Library

கணபதி பழமையானவர்

தொன்மை :

கடவுள் தொன்மையானவர்தாம் என்ற ஆராய்ச்சி அறிவுலகிற்குப் பெருநகைப்பையே விளைவிப்பதாகும். அறிவுலகில், அறிவு என்றும் உள்ளது என்பதில் எள்ளளவும் ஐயம் இருக்கமுடியாது. அதுபோலவே அறிவுருவினராகிய கடவுளும் என்றும் உள்ளவர் என்பதில் ஐயமிருக்கவேண்டியதில்லை. ஆனால் அவர் உருமேனிதாங்கியநிலை ஒருகாலத்தை ஒட்டியே எழுந்ததாகலின் அந்தக்காலம் எது என்ற ஆராய்ச்சியை இக்காலத்தவர் மேற்கொள்ளுகின்றனர். அவர் கொள்ளும் திருமேனி அவர் திருவுள்ளக்குறிப்பால், அவர் விரும்பியவண்ணம் எய்தப்பெறுவது ஆதலின் அவர் எந்தக் காலத்தில் நினைத்தார்? எவ்வடிவங் கொண்டார்? என்பதைச் சொல்ல இயலாது. ஆனாலும் சாத்திர தோத்திரங்களில்-இதிகாச புராணங்களில் இலக்கியங்களில் கடவுளர்கொண்ட திருவுருவப் பெயர்கள்-அமைப்புக்கள் எங்ஙனம் கூறப்பெற்றுள்ளன என்பவற்றைக்கொண்டு ஒருவாறு கால ஏணியில் அடிவைத்து ஏறிப்பார்த்தால் அவ்வேணிப்படி துணை செய்யும்வரை சென்று பார்க்கலாம்.

வேதகால வழக்கு : வேதத்தில் பிள்ளையாரைப்பற்றியவெளிப் படையான குறிப்பு ஒன்றுமில்லை. ஆனாலும் 'கணபதி' என்ற சொல்லாட்சி ரிக் வேதத்திற் காணப்படுகிறது;[1] வேதத்தில் பெயர் கூறப்பட்டுள்ளதே தவிர அது இன்னாரை - இன்ன இன்ன உருவ அமைப்புடையாரைக் குறிக்கும் எனக் கூறப் படவில்லையாதலால் தேவகணங்களுக்கு எல்லாம் தலைவனாகிய இந்திரனையும் குறிப்பதாகலாம் என்பர் ஹிராஸ் பாதிரியார்.[2] தேவர்கள் அனைவரும் அடைமொழியின்றிக் 'கணம்' என்ற பெயரால் அழைக்கப்பெறுவதில்லை. ஆனால் தேவர்களுக்குள்

---

[1] 𑌗𑌣𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾 𑌗𑌣𑌪𑌤𑌿𑌂 — இருக்வேதம், II. 23.

[2] "In the same way Indra is also called Ganapathi among the Ganesa" Tamil Culture Vol. III No. 2. Page 172.

Koviloor Digital Library

பதினெட்டுவகையான கணங்கள்உண்டு. இதனைப் "பதினெண் கணனும் ஏத்தவும் பெறுமே" என்ற புறநானூற்றுக் காப்புச் செய்யுள்கொண்டும் துணியலாம் ஆயினும் இந்திரன் கணபதி என்ற பெயரால் வழங்கப்பெறுவதில்லை. ஆதலால் வேறு யாரையோ குறிக்கும் பெயராதல் வேண்டும். இங்ஙனமே ஐதரேய பிராமணத்தில், 'கணபதி பிரமா, பிரமணஸ்பதி, பிருஹஸ்பதி என்று பண்டைய தத்துவநூல்களில் குறிக்கப் பெறுகின்றார்' என்று கூறப்பெற்றுள்ளது; கணங்களைக் குறிக்கும் சொற்கள் இதே எண்ணத்தில் நன்கு தொகுக்கப் பெற்றுள்ளன. கணங்களுக்குத் தலைவர் கணபதி; இவர் 'பிரமண:ஸ்பதி' என்றும் அழைக்கப்பெறுவார்; இவ்வழக்கு நாளாவட்டத்தில் அறிவின் தலைவருக்கும் ஆயிற்று; இவரே பிரமம், இவரே வேதம் என்று கூறுவதாக கோபிநாதராவ் அவர்கள் குறித்துள்ளார்கள். [1]

இவை பிரமா முதலிய ஏனைய தெய்வங்களையும் குறிக்கும் பெயராதலால் பிள்ளையாருக்கே பொருந்துவதாகாது என்பர் ஹிராஸ். [2]

தைத்திரீய ஆரண்யகத்தில் இறைவனைத் "தந்தின்" என்று அழைக்கின்றது. இதற்குத் தந்தத்தையுடையவர் என்பதே பொருள். ஆகவே இச்சொல் பிள்ளையாரைக் குறிப்பதே என்று துணியலாம். கணபதி காயத்திரியிலும் "தந்நோ தந்திந் பிரசோதயாத்" என்று 'தந்திந்' என்ற பெயர் குறிப்பிடப் பெற்றுள்ளமை[3] இக்கருத்தை வலியுறுப்பதாகும், இப் பெயரும் ஏனைய கடவுளரைக் குறிப்பதாகும். ஆதலின் பிள்ளையாரையே குறிக்கும் பெயரன்று என்பர் ஹிராஸ்.

---

1 In the earliest known reference to him, in the AITAREYA-BRAHMANA, 1-21. Ganapathi is identified with BRAHMA, BRAHMANASPATI or BRIHASPATI "The art of writing was usefully employed" says MUIR. "in the early ages of philosophy. Lists of words apparently submitting to a general principle of classification, or having the same sense, were drawn up. These lists formed GANAS which were appreciated. Ganapathi, the lord of the GANAS, was the name of Brahmanaspati. It was gradually recognised as knowledge itself. it was Brahma. It was the VEDA. (Elements of Hindu Iconography - Page 45)

2 Tamil Culture Vol. III No. 2. age 178

3 சுப்பிரபேதம்; விக்னேஸ்வர பிரதிஷ்டாவிதி. சுலோகம் 8.

Koviloor Digital Library

கொம்புள்ள கடவுள் வேறு இன்மையின் அவரையேகுறிக்கும் என்பது முன்னரே காட்டப்பெற்றது.

யாக்ஞவல்கிய ஸ்மிருதி, தேவர்களின் முறைகளைப் பேசுகிறது. அதில் யானைமுகத்தோடு ஒரு கடவுள் இருந்த தாகச் சொல்லவில்லை.

வேதங்களில் விதிக்கப்பெற்றவைகளைச் செயல்முறையிற் கையாளும் முறைகளைக் காண்பிப்பன கல்ப சூத்திரங்கள். அவற்றில் ஒன்று மானவ கிருஹ்யசூத்ரம். இது யஜுர்வேதத் தொடர்புடையது. இதில் நான்கு விநாயகர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளனர். அவர்கள் சாலகடங்கர், கூஷ்மாண்டராஜ புத்திரர், உஸ்மிதர், தேவயஜனர் என்பவர்கள்.

புராணங்களில் :

பிரம கைவர்த்த புராணத்தில் விநாயகர் கிருஷ்ணனுடைய அவதாரம் என்று கூறப்பெற்றுள்ளது. வராக புராணம், வாமனம், மகாஸ்காந்தம் அக்கினிபுராணம், பத்மபுராணம், கருடபுராணம் இவைகளில் விநாயகர் அவதார வரலாறு விரிவாகக் கூறப்பெற்றுள்ளது. இந்தப் புராணங்கள் யாவும் கி. பி. 11-ம் நூற்றாண்டுக்கு முந்தியவை என்பது வடமொழி இலக்கிய வரலாற்று நூலாசிரியர்கள் துணிபு.

மனு, தாமியற்றிய ஸ்மிருதியில் சிவனைப் பிராமணர்கள் வழிபட்ட காலத்தில் அதாவது கி. பி 6-ஆம் நூற்றாண்டுவரை கல்வி அறிவில்லாத ருத்திரர்கள் கணபதியைத் தெய்வமாகக் கொண்டாடினார்கள் என்று Miss Gatty கூறுகிறார். [1]

வியாசர் மகாபாரதம் இயற்றிய காலத்தில் விநாயகர் எழுதினார் என்பது வரலாறு. விநாயகர் எழுதிய பாரதம் எண்ணாயிரத்து எண்ணூறு சுலோகங்களைக்கொண்டது. [2]

---

1 Tamil Culture Vol. III No 2 Page. 179.

2 [illegible] ।

[illegible]

[illegible] ॥

—மகாபாரதம் 1: 115-7.

Koviloor Digital Library

வியாசர் விநாயகரை எழுத்தாளராக வரும்வண்ணம் வேண்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய ஆசையை எண்ணிப் பார்த்து 'வியாசரே! நீர் விரும்பியவண்ணம் நாம் எழுத்தாளராக வருவோம், ஆனால் என் கை ஓயாதவண்ணம் நீர் சொல்லிக்கொண்டே வருதல்வேண்டும்' என்றார். வியாசர் அவ்வண்ணமேயாகுக என்றனர். பொருணிறைந்ததும் ஆழ்ந் துணரக் கூடியதுமான செய்யுட்களை யாத்தனர். அவையே 8800 சுலோகங்கள் என்றும் வரலாறு கூறுகிறது பாரதம். இதனால் வியாசர் காலத்து விநாயகர் இருந்தமை புலனும், வியாசர் பாரதகாலத்துக் கதையுறுப்பினருள் ஒருவராகவும் இருந்தனர் என்பது ஆதிபர்வவரலாறுகளால் அறியக்கிடப்பது ஒன்று. பாணினீய வியாகரணம் மகாபாரதம், யுதிஷ்டிரர், விதுரர் என்ற சொற்களை எடுத்தாண்டு இலக்கணமும் கூறுகின்றது. ஆச்வலாயன கிருஹ்யசூத்திரம் வைசம்பாயனரைப் பாரத தர்மாசாரியர் என்று குறிப்பிடுகிறது. வைசம்பாயனரே ஜனமேஜயனுக்குப் பாரதக் கதையைச் சொன்னதாக வரலாறு தொடங்குகிறது. வியாசர் பாரதம் நடைபெற்ற காலத்திலேயே இருந்தவர். பாணினிபோன்ற முனிவர்கட் கெல்லாம் முந்தியவர் என்பது தெளிவாயிற்று. இந்த வியாசருடைய வழிபடுதெய்வம் விநாயகர். முரஞ்சியூர் முடிநாகராயர் செய்த புறப்பாட்டு, பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் பாரதப்போரில் இருதிறத்தாருக்கும் பெருஞ்சோறிட்டான் என்று தெரிவிக்கிறது. இச்சேரலாதன் காலம் கி. மு. 5-ஆம் நூற்றாண்டு. ஆதலால் விநாயகர் அக்கால மக்களாலேயே அறியப்பெற்ற தெய்வம் என்பது தெளிவு.

தமிழ்நூல்களில் :

சங்ககால இலக்கியங்களில் விநாயகரைப்பற்றிய பேச்சே இல்லை. உரைத்தந்தையின் ஒருவராகிய இளம்பூரணர் தொல்காப்பியச் செய்யுளியலுரையில் "தன்தோள் நான்கில்" * என்ற அகவலை எடுத்தாளுகின்றார். அடுத்துப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் செய்யுளியல் 149–ஆம் சூத்திரவுரையில் "தடந்

---

* "தன்தோள் நான்கில் ஒன்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங்கா டாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியவென் னெஞ்சே"

Koviloor Digital Library

தாட்கொத்த'' என்ற செய்யுளை எடுத்துக்காட்டுகிறார்கள். இது கூத்தாடும் விநாயகரைக் குறிப்பதாகும். 'எண்ணிய எண்ணியாங்கு' என்ற செய்யுள் முத்தொள்ளாயிரக் காப்புச் செய்யுளாகக் கருதப்பெற்று வந்தது. ''மதிபாய் சடை முடித்து'' என்ற வெண்பா தொல்காப்பியவுரையிலும், தமிழ் நாவலர் சரிதையிலும் வந்துள்ளது. ஞானமிர்த முகப்பிலும் இருக்கிறது. ''மானமருங் கண்ணாள்.'' ''அம்பொற் பணை முடித்து'' என்ற இருவெண்பாக்களும் தண்டியலங்காரப் பழையவுரையில் மேற்கோளாக ஆளப்பெற்றுள்ளன. 'தேனக் கலர் கொன்றை'' என்ற செய்யுள் வீரசோழிய அலங்காரப் படல உரை மேற்கோள். 'நடையூறு சொன்மடந்தை' என்பது புறப்பொருள் வெண்பாமாலைக் காப்புச்செய்யுள். 'தந்திமுகத்து எந்தை'' என்பது சேந்தன் திவாகரக் காப்பு. எடுத்துக் காட்டப்பெற்றவற்றுள் பேராசிரியர் கி. பி. 1118 - 1132 வரை இருந்தவர். ஒட்டக்கூத்தர் உலாவை அரங்கேற்றியபோது பேராசிரியர் பட்டோலை வாசித்தார். இவரைப் பாதுகாத்தவன் நுளம்பன் விக்கிரமன். இவன்காலம் 1118 - 1132 வரை. ஆதலால் பேராசிரியர் காலமும் அதுவே என்று துணிவர் வரலாற்றாசிரியர்கள். நச்சினார்க்கினியர் 12-ம் நூற்றாண்டினர். சேந்தன் மிகப்பழைமையானவர். நன்னூலார் ''பிங்கல முதலா நல்லோருரிச்சொலின் நயந்தனர் கொளினே'' என்று எடுத்துக்காட்டுகிறார். நன்னூலார் சியகங்கன் காலத்தவர். சியகங்கன் கி. பி. 12-ம் நூற்றாண்டு பிற்பகுதியில் 1180-ல் வாழ்ந்தவன். இந்தப் பிங்கலந்தையின் முதனூல் திவாகரம்[2] ஆதலால் திவாகரம் சற்றேறக்குறைய 9-ம் நூற்றாண்டிற்கு மேலதாகலாம். இங்ஙனம் 12-ம் நூற்றாண்டு முதல் கி. பி. 9-ம் நூற்றாண்டுவரை உள்ள நூல்களில் விநாயக வணக்கச் செய்யுட்கள் பரவியுள்ளன.

பரகேசரியான முதற்பராந்தகன் ஆட்சி 13-ம் யாண்டில் பழுவேட்டரையனை சுந்தரச்சோழனிடத்து அநுமதிபெற்று

---

1 '' தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படர்தாழ் கச்சைப் பாம்பொடு மிளிர
வென்றுடு திருத்தாதை வியந்துகை துடிகொட்ட
நின்றுடு மழகளிற்றை நினைவாரோ வினையிலரே.''

2 ''செங்கதிர் வரத்திற் றோன்றும் திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கலர் உரைநூற் பாவில் பேணினர் செய்தார் ''
—சூடாமணி சிறப்புப்பாயிரம் பா. 3.

Koviloor Digital Library

நாவலூருடையான் கண்டன் என்பான் கணபதிப் படிமத்தைச் செய்வித்து, பழுவூர் அகத்தீசர் கோயிலுக்கு அளித்தான் என்ற செய்தி சோழீஸ்வரர்கோயில் தெற்குப் பிரகாரத்துச்சுவரிலுள்ள கல்வெட்டால் அறியப்பெறுகின்றது. இதிற் கண்ட அரசன் கி. பி 907 முதல் 953 வரையில் அரசாண்டவன். *

ஆய்வும் - ஐயமும் - சான்றுகளும் :

இவ்வண்ணம் தமிழ் நூல்களிலும் கல்வெட்டிலுமாக ஏழாம் நூற்றாண்டிற்குமேல் ஏறிப்பார்க்க இயலாதவண்ணம் இருப்பதால் விநாயகர் 7-ம் நூற்றாண்டில் நரசிங்கவர்ம பல்லவனோடு சேனைத்தலைவராகச் சென்று, வாதாபிப்போரில், புலிகேசியை வென்றுவந்த சிறுத்தொண்டராலேயே தென் தமிழ் நாட்டு வியாபகத்தைப் பெற்றார் என்ற முடிவு ஏற்படுவதாயிற்று. கணபதி என்ற பெயரும் தென்னாட்டில் 'கணபதீச்சரம்' என்ற கோயிற் பெயரோடு இணைத்தே முதலிற் கேட்கப் பெறுகின்றது கணபதீச்சரம் சிறுத்தொண்டர் கட்டிய கோயில். அதில் விநாயகரை முதன்முதல் வைத்திருக்கவேண்டும். (அவர் அன்புடன் கொணர்ந்த புதுத்தெய்வத் திருவுரு விநாயகர்.) ஆதலால் அதன் பெயரோடிணைத்துத் திருக்கோயிலுக்குப் பெயர் சூட்டினார். மாராட்டிர மக்களாலேயே பெரிதும் போற்றப்பெறும் விநாயகர் இங்குக் குடியேறி, அரசமரம் ஆலமரம் இலந்தைமரம் வன்னிமரம் இவற்றின் அடியிலும், ஆற்றங்கரை குளத்தங்கரை தெருக்கோடி கோயிலின் முகப்பு ஏன் வீட்டு மாடங்களிலுங்கூட விளங்கத் தொடங்கினர். இதனைப்பற்றிய சில ஐயங்கள் எழுகின்றன. அவற்றையும் ஈண்டு எழுதுதல் ஆய்வாளர்க்கு மேலுங்கிளர்ச்சியை விளைவித்து வளர்ச்சிக்கு வழிசெய்யும் என்று எண்ணுகிறேன். அவையாவன :-

1. சேக்கிழார் சிறுத்தொண்டர் கொணர்ந்த பொருள்களில் ஒன்றாகப் பிள்ளையாரைக் குறியாமை.
2. சிறுத்தொண்டர் காலத்துக்கு முந்திய இலக்கியம் கல்லாடமாயின் அதில் விநாயக வணக்கம் காணப்படுகிறதே ?

---

* A. R. 381/1924.

Koviloor Digital Library

3. முந்திய கல்வெட்டுக்களில் இல்லாத காரணம்.

4. சங்க நூல்களில் இல்லாமையால் பிற்காலத்தது எனலாமா ?

5. பிள்ளையார் உருவஅமைப்பு தமிழர்க்கே தனிச் சொந்தம்.

6. கணபதீச்சரம் சிறுத்தொண்டர் திருப்பணியா ?

7. திருச்செங்காட்டங்குடிக்குப் போகுமுன்பே ஞான சம்பந்தர் தேவாரத்தில் கணபதி வரலாறு காணப் படுகிறதா ?

என்பனவாம். இவற்றை முறையே எடுத்து ஆராய்வோம்.

1. திருவாரூர், திருச்செங்காட்டங்குடி முதலிய இடங் களில் உள்ள விநாயகர் வாதாபி விநாயகர் என்றழைக்கப் பெறுகிறார். சிறுத்தொண்டர் கொணர்ந்தமையாலேயே இப் பெயர் வழங்குவதாயிற்று என்பது அறிஞரின் கொள்கை. முதல் அமைச்சராக இருந்து அறியவேண்டுவன அறிந்து ஆய்ந்து அருளோடு கலந்து அடியார் வரலாறு எழுதிய சேக்கிழார் பெருமான் - எதனையும் சிறந்த ஆதாரங்கண்டன்றி உரையாத ஆசிரியர் சேக்கிழார், வாதாபிப் போரில் வென்று சிறுத்தொண்டர் கொணர்ந்த பொருள்களுக்கு ஒரு பட்டியல் தருகின்றார். அதில் விநாயகர் பெயர் குறிக்கப் பெறவில்லை. * சிறுத்தொண்டர் தன்னுயிரினும் மேலாக மதித்து வழிபடு தெய்வமாகக் கொணர்ந்த விநாயகரைவிட்டுவிட்டு, மணியை யும், பொன்னையும், யானையையும் குதிரையையும்மட்டும் விரித்துரைப்பாரா ? என்பது ஆழ்ந்து சிந்தித்தற்கு உரியது. வென்ற அரசன் தோற்ற நாட்டிலிருந்து தெய்வத் திருவுருவங் களையும் கொண்டுவருவது வழக்கம். விஜயராசேந்திரன் கல்யாணிநகரை வென்றபோது துவாரபாலகர் திருவுருவத்தைக் கொணர்ந்த செய்தியைக் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. அதைப்போலவே விநாயகரையும் கொணர்ந்திருப்பாராயின் உண்மைவரலாற்றினைக் கூறவந்த சேக்கிழார் இச்சிறந்த

---

* "பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"
—சிறுத்தொண்டர் புராணம், பா - 6.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

நிகழ்ச்சியைச் சொல்லாமல்விட நியாயம் இல்லை. மேலும் விஜயராசேந்திரன் துவாரபாலகரைக் கொண்டுவருவதற்குமுன் துவாரபாலகர் இங்கு இல்லை என்பதும் முடிவு ஆகாது.

2. கல்லாடம், திருக்கோவையாரிற் சிறந்த நூறு செய்யுட்களின் கருத்தை அமைத்து ஆக்கப்பெற்ற நூறு அகவற்பாக்களை உடையது. இந்நூல் எழுந்த காலம் கி. பி. 5-ம் நூற்றாண்டின் இறுதி அல்லது 6-ம் நூற்றாண்டின் துவக்கம் என்பதைப் பல தடை விடைகளைக்கொண்டு மறைமலையடிகள் நிறுவியுள்ளார்கள்.[1] கல்லாடத்தில் கணபதி வணக்கச் செய்யுள் காணப்படுகின்றது. ஆதலால் கணபதி 6-ம் நூற்றாண்டின் துவக்கம் வரையில் அறியும் தெய்வ மாயினர். கல்லாடத்து 'எட்டெட்டு இயற்றிய கட்டமர் சடையோன்'[2] என அறுபத்துநான்கு திருவிளையாடல்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவற்றுள் சமணர் கழுவேறிய திருவிளையாடலும் காணப்பெறுவதால் சம்பந்தர் காலமாகிய 7-ம் நூற்றாண்டிற்குப் பிந்தியதே கல்லாடம் என்பர் சிலர். மறைமலையடிகளார், திருவிளையாடல் இறைவன் திருவிளை யாடலைக் கூறவந்த நூல்; அது அடியார்கள் அற்புதச்செயலை யும் இறைவன் திருவிளையாடலாகக்கூறக் காரணம் இல்லை; ஆதலால் வேறு இறைவன் திருவிளையாடலே ஒன்று அமைந் திருக்கவேண்டும்; அது எப்படியோ நழுவிப்போயிற்று என மறுத்துக் கல்லாடம் ஐந்து அல்லது ஆறும் நூற்றாண்டினதே என்பார்கள்.[3] இவற்றைக்கொண்டு விநாயகரைக் கால ஏணியில் 5-ம் நூற்றாண்டின் இறுதிவரை எடுத்துச் செல்லலாம்.

3. கல்வெட்டுக்கள் அசோகர்காலத்து, அருமையாக நீதியும் போதனையும் அறிவிக்கத் தோன்றியன: பின்னர், பல்லவர் காலத்துப் புகழ்காக்குந் துணையாகப் பரவின; பின்னர், ஆட்சிமுறைகள் சிதறுண்ட காலத்து அறக்கட்டளை களும், அரசர் வரலாறுகளும் பாதுகாக்கத் துணைசெய்தன. இவையே கல்வெட்டுத்தோன்றிய காரணங்கள் என மறைமலை யடிகளார் வகுத்தனர்.[4] முற்காலச் சோழமன்னர் பெயர்கள் அக் கல்வெட்டிற் காணப்படுகின்றனவா? இல்லையே! அதுகொண்டு அந்த அரசர்களையே இல்லையென்று சொல்லி

1 'மாணிக்கவாசகர் காலம்'. பக்கம் 700.

2 கல்லாடம். பா. 1.

3, 4 'மாணிக்கவாசகர் காலம்'. பிற்சேர்க்கை. பக்கம், 13, 648.

Koviloor Digital Library

விடலாமா? அதுபோலவே கணபதியின் பெயர்கள் முந்திய கல்வெட்டுக்களில் இல்லாமையால் இல்லை என்று கூறவும் முடியாது.

4. தொல்காப்பியத்தில் திணைக்கடவுளர் பெயர்களை 'மாயோன் மேய' என்ற சூத்திரம் விதிக்கின்றது. பலராமன் பெயர்கூடச் சங்க இலக்கியங்களில் வருகின்றது. அங்ஙன மிருக்க 'நுதல்விழி நாட்டத்து இறை' முதலிய குறிப்புப் பெயரான் உணர்த்தும் சங்கநூல்கள், சிறப்புப்பெயரான 'சிவன்' என்ற பெயராற் காட்டவில்லை. அதனால் சிவனில்லை யென்று நாம் சொல்லிவிட முடியுமா? அதுபோலவே சங்க இலக்கியங்களிலும் விநாயகரைப்பற்றிய குறிப்பேனும், அவர் பெயரேனும் வராமையால் இல்லையென்று கூற இயலாது என்பது ஊன்றி ஆராயத்தக்கது. மணிமேகலையில் "கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை" என்ற ஒரு அடி காணப்பெறு கின்றது. இதிலடங்கியுள்ள வரலாறு விநாயகர் காகவடிவங் கொண்டு கமண்டலத்தைக் கவிழ்த்ததேயன்றி வேறு எதனைக் கூற இயலும்? இதனாலும் கணபதி சங்க இலக்கியத்திலும் இடம்பெறுகின்றார்.

5 பிள்ளையார் முகத்தோற்றம் பிரணவவடிவம் என்பது முன்னரே துணியப்பெற்றது. தமிழ் ஓங்காரமே பிள்ளையார் வடிவிற்கு முழுதும் ஒத்துள்ளது. வேற்றுமொழி ஓங்காரங்கள் ஒன்றும் இதற்கு ஒத்ததாக இல்லையென்பது துணிவு. ஆதலால் எழுத்துக்களுக்கே முந்தியதாயும், அவற்றின் தந்தையாயும், ஒலியுலகப் படைப்பிற்கு மூலமாயும் உள்ள பிரணவமும், அதன் வரிவடிவாகிய 'ஓம்' என்பதும், அதன் உருவாகிய முதற்றெய்வத் தோற்றமும் மிகமிகத் தொன்மையானவை என்பதில் ஐயம் உண்டோ? அங்ஙனமாகப் பிள்ளையாரை வேற்றுநிலக்கடவுளாகக் கொள்ளுவான் ஏன்?

6. கணபதீச்சரம்பற்றிய குறிப்புக்கள் :- திருச்செங்காட் டங்குடியில் முதலாம் இராஜராஜன் காலத்திய கல்வெட்டுக் கள்தாம் பழைமையானவை. அங்குள்ள கல்வெட்டுக்களுள் ஒன்றுவது கணபதீச்சரம் கட்டியவர் சிறுத்தொண்டர் என்ற குறிப்பையும் காட்டவில்லை. சிறுத்தொண்டர் வேண்டிக் கொள்ள செங்காட்டங்குடி சென்று வழிபட்ட நிகழ்ச்சியை அமைத்துப் பாடிய திருஞானசம்பந்த சுவாமிகளும் சிறுத்

Koviloor Digital Library

தொண்டர் கட்டிய கோயில், அதனால் அவர் வேண்டினார், நான் சென்று வழிபட்டேன் என்ற பொருள்படக் கூறவில்லை என்பதை,

"பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சுரத்தானே"

"செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வேந்தநீ றணிமார்பின் சிறுத்தொண்டன் அவன்வேண்ட
அந்நண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவும்
சந்தங்கொள் சம்பந்தன் தமிழுரைப்போர் தக்கோரே"

என்ற திருப்பாடல்கள் நன்கு விளக்கும்.

சிறுத்தொண்டர் வேண்டிக்கொண்டதாலேயே திருஞான சம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு வந்துசேர்ந்தார்; அவர் அப்படி அழைத்து வருவதற்குக் காரணம் தான் கட்டிய கோயிலாக இருப்பதாலேயே என்பர் சிலர். தேவாரங் களுக்கு உரைகாணும் வகையில், அருள்வழிநின்று செய்யுள் இயற்றிய சேக்கிழார்பெருமானைத் துணைக்கொள்வது மிகப் பொருத்தமாகும். சிறுத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பெருமான், 'மருகல் நகரில்வந்து வலிய பாசம் செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்ட, மீண்டுஞ் செங்காட்டங்குடிக்குப் போகத் திருவுளம்பற்றித் திருமருகல் கோயிலுக்கு அவர் எழுந்தருளினார்; அங்கே செங்காட்டங்குடிக் காட்சியைக் கண்டார்; திருப்பதிகம் பாடினார்; சிறுத்தொண்டர் வேண்டு கோளின் வண்ணம் செங்காட்டங்குடி சென்றடைந்தார்' என்று விளக்கியருளினார்கள். இந்தச் செங்காட்டங்குடி யாத்திரை திருஞானசம்பந்தப்பெருமானுடைய இரண்டாவது யாத்திரையாகும். முதலாவது வழிபாடு, நாகை கீழ்வேளூர் முதலான பல தலங்களை வழிபட்டுக்கொண்டு, செங்காட்டங் குடிக்கு அருகில் எழுந்தருளுவதைக் கேள்வியுற்ற சிறுத் தொண்டர், புறநகர்க்குச் சென்று எல்லா மரியாதைகளுடனும் வரவேற்று வந்தார்; சம்பந்தப்பெருமான் நேரே கணபதீச்சரத் திற்கு எழுந்தருளினார் என்றே விளங்கச் சித்திரித்துள்ளார்கள். ஆகவே சிறுத்தொண்டர் வரவேற்கவந்த முதன்முறையிலேயே கணபதீச்சரத்தைக் குறிப்பிடுவதால் கணபதீச்சரம் என்ற பெயர் முன்னரே இருந்ததாகவும் ஊகிக்க இடந்தருகின்றது.

Koviloor Digital Library

முதன்முறை செங்காட்டங்குடியை வழிபட்ட பிள்ளையார் அடுத்துத் திருமருகலை அடைந்தார்; அங்கிருந்தும் சிறுத் தொண்டர் மீளவும் அழைத்துவந்தார் என்பனவே அவர்கள் காட்டும் வரலாற்றுப்போக்கு. இவற்றைக்கொண்டு ஆராயின், சிறுத்தொண்டர் வேறு எந்த அடியாரும் செய்ய இயலாத பெருந்தொண்டினைச் செய்தமையால் அதனைக் குறிப்பாக உணர்த்தத் திருவுளம்பற்றிய பிள்ளையார் 'கணபதிச்சரத்தான் சிறுத்தொண்டர்க்கு அருள்வழங்கும் பொருட்டாகக் கடிநக ராய் வீற்றிருந்தார்' என்கின்றாரேயன்றிக் கோயில்கட்டிய நிகழ்ச்சியை அறிவிப்பதாகுமா என்பது ஊன்றி ஆராய்தற் குரியது.

'செந்தண்பூம்' என்ற திருப்பாடலில், 'சிறுத்தொண்டன் வேண்ட காழியடிகளையே அடிபரவும் சம்பந்தன்' என்று தன்னைக் குறிப்பிடுவது ஒருபோதும் 'அவர் கட்டிய கோயில்' என்ற பொருளைத் தருவதாகாது. மீண்டும் வந்து வழிபட வேண்டும் என்று சிறுத்தொண்டர் வேண்டினார்; தான் அங்குச் சென்று கண்டகாட்சி காழிக்காட்சி; காழிக்காட்சி யாவது அடியாராகிய சங்கமத் திருமேனி கொண்டு பைரவக் கோலத்துடன் சிறுத்தொண்டர் பெருந்தொண்டை நாடறியச் செய்த உத்திராபதியார் காட்சி என்று குறிப்பிடுகின்றாரேயன்றி வேறன்று.

சேக்கிழார், சிறுத்தொண்டர்புராணத்தில் முதலிலேயே, 'வாதாபியில் வென்றுவந்த சிறுத்தொண்டரின் பெருமையை யுணர்ந்து அரசன் விடுதியளிக்கிறான்; அவர் செங்காட்டங்குடி வந்து கணபதிச்சரத்தை வணங்கி வதிகின்றார்' என்ற அள விற்றான் அறிவிக்கின்றார்கள். திருக்கோயிற் பணியைச் செய் திருப்பின் ஒருபோதும் குறியாது விட்டிருக்கமாட்டார்கள் என்பது துணிவு. அம்பர்க்கோயிலை அறிவிக்கும்போது கோச் செங்கணான் செய்தகோயில் என்று அறிவிக்கின்றவர்களா, செயற்கருஞ்செய்கை செய்த சிறுத்தொண்டர் செய்பணியை மறைப்பார்கள். ஆதலால் சிறுத்தொண்டருக்கு முன்பே யுள்ள தொன்மையான ஆலயம் கணபதிச்சரம் என்பது துணிவு.

7. சம்பந்தர் தேவாரத்தில் விநாயகரைப்பற்றிய குறிப் புக்கள் ஐந்தே இடங்களில் வந்துள்ளன, அவை, சீகாழிப்

Koviloor Digital Library



KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Koviloor Digital Library

Koviloor Digital Library

பதிகமாகிய 'பொங்குவெண்' என்னும் பதிகத்தின் மூன்றும் பாடலும். பிரமபுரப் பதிகமாகிய 'காடதணி' என்பதின் எட்டாம் பாடலும், கழுமலப் பதிகமாகிய 'பந்தத்தால்' என்பதின் ஆறும் பாடலும். இராமனதீச்சரப் பதிகமாகிய 'சங்கொளிர்' என்பதின் இரண்டாம் பாடலும், வலிவலப்பதிகத்தின் எட்டாம் பாடலாகிய 'பிடியதனுரு' என்பதுமாகும்.

இவற்றுள் சம்பந்தர் செங்காட்டங்குடிச் செல்வதற்கு முன்பே - சிறுத்தொண்டர் இவருக்கு அடியாராதற்குமுன்பே. திருவரத்துறை முதலிய தலங்களுக்குச்சென்று வழிபட்டுக் கொண்டு திருப்புகலிக்கு இரண்டாமுறையாக எழுந்தருளுகின்றார்கள். அப்போது சீகாழித்தலத்தின் பல திருநாமங்களையும் குறித்துச் செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களைப் பாடியருளினார்கள்.* அதில் ஒருபதிகம் 'பந்தத்தால்' என்பது. அதில் ஆறும் பாட்டு, பிள்ளையார் பிறப்பைப்பற்றியது. திருவலிவல வழிபாடு இப்போது நடந்தது என்று சேக்கிழார் குறிக்கவில்லையாயினும் நாகை, கீழ்வேளூர் யாத்திரையின் போதுதான் நடந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கலாம். இவற்றால் செங்காட்டங்குடிக்குச் சேர்வதற்கு முன்பே அருளப்பெற்ற சீகாழி, பிரமபுரப் பதிகங்களில் பிள்ளையார் குறிப்பு பேசப்பெறுவதால் பலநாட்களுக்கு முன்னமேயே அவ்வழிபாடு தென்னாட்டில் பரவியிருந்திருக்கவேண்டும். அங்ஙனமின்றி அவர்கள் காலத்திலேயேவந்த புதுக் கொள் முதலாக இருந்திருப்பின் சம்பந்தர்பெருமானுக்கு, சிவத்துதியாகிய தேவாரத்தில் சேர்த்தமைக்கத் திருவுள்ளம் வராது.

எல்லாவசதிகளும், போற்றுதலும், தூற்றுதலும் நிறைந்த இந்தக் காலத்திலேயே புதிய செய்தி அல்லது புதிய பொருள் பரவி அது எங்கும் நிலைபெற ஒரு நூற்றாண்டு ஆகிறது. அதுவும் புதுப்பொருள், கண்டவர்கள்காலத்துப் போற்றப் பெறுவதேயில்லை என்பது உறுதி. அங்ஙனமிருக்க, சிறுத்தொண்டர் கொணர்ந்த படிமம், சிறுத்தொண்டர் காலத்திலே எங்கும் பரவி, புராண வரலாறுகளும் முளைத்து, தனிமனிதனுடைய விருப்பு வெறுப்பை மதியாத அக்காலத்து வதிந்த அருட்கவிஞர் ஞானசம்பந்தர் வாக்கிலேயே இடம் பெற்றது என்பது எங்ஙனம் இயலுவதாகும். ?

---

* திருஞானசம்பந்தர் புராணம், பா, 276.

Koviloor Digital Library

வடநாட்டுக் கடவுளா ? தமிழ்நாட்டுக் கடவுளா ?

கடவுள் எல்லாநாட்டிற்கும், எல்லா மக்களுக்கும் பொதுவானவரே. அப்படியிருக்க அவரைத் தமிழரா வடவரா என்று ஆராய்வது ஒரு விந்தையான ஆய்வுதான். ஆனாலும் இன்று பெரும்பான்மையான மக்களால் ஆடம்பரமாக வழிபடப்படுவதுபற்றி மராட்டியக்கடவுள், தமிழ்நாட்டில் வந்து குடியேறிவிட்டார் என்ற துணிவு பரவிவருகிறது. ஆதலால் இக்கருத்தைப்பற்றிய குறிப்புக்களையும் தெரிவித்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது.

விநாயகர் ஓங்கார வடிவினர் என்பது முன்னரே கூறப் பெற்றது. 'ஓ' என்னும் இவ்வெழுத்து முதன்மையாகிய வட்டெழுத்தில் 'உ' என்று காணப்படுகின்றது. பின்பு அசோகர், பல்லவர், சோழர், பாண்டியர்காலக் கல்லெழுத் துக்களில் வளர்ந்து 'ஓ' என்ற இவ்வுருவை அடைந்திருக் கிறது. இத்தகைய வடிவு தமிழுக்கு அன்றி வேறெந்த மொழிக்கும் இல்லாமை தெளிவு. அங்ஙனமாக இந்த எழுத்தை உருப்படுத்த வந்த கடவுள்மட்டும் வேற்று நாட்டினராக - வேற்று மொழியினராக ஆகிவிடமுடியுமா ?

யானை தமிழ்நாட்டு விலங்கு. தமிழ்நாட்டில் படைமுதல், அலங்காரப் பொருள்வரையில் பரவியுள்ளது. அதனை மங்கலப் பொருள்களில் ஒன்ருகத் தமிழர் போற்றுகின்றனர். 'வேழ முடைத்து மலைநாடு' என்ற சிறப்பு வேறு எந்நாட்டிற்கு உண்டு? முற்கூறியவண்ணம் பல சிறப்புக்களோடு அதன் முகத்தைக் கடவுள்முகமாக அமைத்து வழிபடத் தொடங்கிய வழக்கம் எங்குத் தோன்றியிருக்கக்கூடும் ?

பிள்ளையாருக்குப் பிடித்த நைவேத்தியம் மோதகம். மோதகம் என்ற பணியாரம் செய்யும்வகையும் தமிழ்நாட்டி னர்க்கன்றி வேறு யாருக்கும் இன்றும் தெரியாது. பழந்தமிழ் இலக்கியங்களில் இது 'கவவு' என்ற பெயரால் குறிக்கப் பெற்றுள்ளது. இதனாலும் பிள்ளையார் தமிழ்நாட்டுக் கடவுள் என்பது துணியக்கூடுமே.

பிரமம், சிவம் ஒன்றே உயர்குடி மக்கள் வணங்கக் கூடியது. கணபதி சூத்திரர்தெய்வம் என்று மனுவிற்

Koviloor Digital Library

கூறியிருப்பதாக மிஸ் கெட்டி கூறுகிறார் என்பது முன்னரே காட்டப்பெற்றது. இது உண்மையாயின் கணபதி வடநாட்டுத் தெய்வமல்லவே.

'பழங்கால இந்தியப் போர்முறை' என்ற நூலிலும் விநாயகர் வெற்றிக்கு அடையாளமான தெய்வம்: சமயப்பற்றுடைய இந்து எவனும் வெற்றிக்காகவும் இடையூறு விலகவும் இதனைப் போற்றுவான்; கீழான தெய்வங்களுக்கெல்லாம் இவர் தலைவர் என்று கூறப்பெற்றுள்ளது.*

இதுகாறும் கூறியவாற்றால், விநாயகர் படிமம் இந்நாட்டிற்குத் தொன்மையானது. இங்கிருந்தே பல நாடுகளுக்கும் பரவிற்று என்பது வெளிப்படும். மேலும், வாதாபி விநாயகர் என்ற பெயருண்மையால் திருச்செங்காட்டங்குடியிலுள்ள அந்த விநாயகரைமட்டும் அவர் கொண்டுவந்திருக்கலாம். அதற்கு முன்பும் இங்கு விநாயகர் உண்மைக்கு இது இடையூறாக ஆகாது. காலம் அருவமானது; என்றும் உள்ளது. அதனை இப்பொழுது கடிகாரம்கொண்டளக்கிறோம். நேற்று நாழிகை வட்டிலைக்கொண்டு அளந்தோம். முந்தியநாள் துரும்பு நிழல், விண்மீன் இவற்றைக்கொண்டு அளந்தோம். அளவுகருவி உண்டானகாலமா காலதத்துவம் தோன்றிய காலம். இவையெல்லாம் சார்த்தியளக்கும் கருவிகள்தாமே. அதுபோல் பிரணவம் அநாதி. அதனை அறிவிக்கும் திருவுரு அமைப்பும் என்றோ தோன்றியது. அதனை இலக்கியங்களும், கல்வெட்டுக்களுமாகிய கருவிகளைக்கொண்டா அளக்க இயலும். அளக்க முடிந்தவரை அறிந்து அப்பாலும் உண்டென்று அமைவதே அழகு.

---

*In the same way, the Elephant Head of Ganesa is a symbolical representation of victory. Hence at the commencement of every undertaking the Orthodox Hindu offers prayers to this God to bless him with success. He is the Lord again of the Ganesa or troops of inferior deities. - 'War in Ancient India' - Page 146-148.

பெயர்களும் காரணமும்

மனிதனைப் பல பெயரிட்டு அழைப்பது வழக்கமில்லை. ஒரு மனிதன் ஊருக்கு ஒரு பெயராக வைத்துக்கொண்டு அலைவானாயின் அவனை நேர்மையான மனிதன் என்று சொல்ல மாட்டோம். அங்ஙனமிருக்கக் கடவுளுக்கு மட்டும் பற்பல பெயரிட்டு அழைக்கிறோம். ஒன்றைமட்டும் சிந்திக்கவேண்டும். மனிதன் ஏமாற்று வித்தைக்காரனானால் ஊருக்கு ஒரு பெயரைத்தானே வைத்துக்கொண்டு திரிவான். கடவுள் எந்தப் பெயரையும் தனக்குத்தானே எங்கும் - என்றும் வைத்துக் கொள்வதில்லை. கடவுள் பெயர்கள் அனைத்தும் அவரிடம் அன்புகொண்ட மனிதன் அவர் அருள்வழங்கும் நிலையை அகத்து எண்ணி, அவருக்கு இட்டு அழைத்து, தன் நன்றியறிதலைத் தெரிவித்து ஆனந்திக்க வகுத்துக்கொண்டவை. இவன் வைக்கும் ஒரு பெயர்கூட அவர் தன்மையை முழுதும் அறிவிப்பன அல்ல. பொதுவாகப் பொருள்களுக்குப் பெயரிடுவது அப்பொருளின் குணம், வடிவு முதலிய காரணம் பற்றியும் இடுகுறியாகவும் என்பதை உலகம் நன்கு அறியும். குணக்கோட்டையிலும், வடிவு வரம்பிலும், சிறச்சூழலிலும் அகப்படாத - அவற்றைக் கடந்துள்ள இறைவனுக்கு ஒரு பெயரமைவது இயலுமா? வழிபடுன்ற அன்பர்கள் எந்தெந்தக் குணங்களில் எவ்வெப்போது ஈடுபடுகிறார்களோ அந்தந்தப் பெயர்களை அமைத்துத் தாமே வழங்குவர். அதனாலே அவருக்கு ஆயிரம் திருநாமங்கள் உள்ளவாயின. [1]

இறைவனுடைய அருட்டன்மை எல்லையற்றது. மக்கள் அதனோடு ஒன்றிநின்று உணருவதென்பதும், உணர்ந்ததை அநுபவத்திற்குக் கொண்டுவருவது என்பதும், அதற்கேற்ப இறைவற்குப் பல பெயர்களையிட்டழைப்பதும் அரியவற்றுள்

---

1 "ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லார்க் காயிரம்
திருநாமம் படிநாம் தெள்ளேணம் கொட்டாமோ"
—திருவாசகம். பா. 235.

"பேராயிரம் பரவி வானோரேத்தும் பெம்மானை"
—அப்பர் புள்ளிருக்குவேளூர். 8.

Koviloor Digital Library



விக்னகணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

அரியசெயல்.[1] அவ்வண்ணம் சூட்டப்பெற்ற பல பெயர்களி லும் கலந்து அவற்றையுங்கடந்து நிற்கும் குணநலத்தை உடையவர் இறைவர். இங்ஙனமே விநாயகப் பெருமானுக்கும் பல திருநாமங்கள் அமைந்துள்ளன. அவை யாவும் அவரு டைய வீரம், கருணை, தோற்றம் முதலாகிய வரலாறுகளைப் பற்றி வந்த பெயர்கள். அவற்றுள் சிறந்தன சிலவற்றைப் பொருளுடன் தெரிவிப்போம்.

கணபதி: 'க' – போதல்[2]: அதாவது ஞானநெறியில் எழுதல் என்பது பொருள். 'ந' – மோட்சம். பதி – பரம் பொருள். அதாவது ஞானநெறியில் நின்று எய்தப்பெறும் பரம்பொருள் என்பது பொருள். கணேசர் என்பதும் இப் பொருளதே.

ஏரம்பர் – இளைத்தவர்களை இடையூறு நீக்கிப் பாதுகாப் பவர். லம்போதரர்–எல்லா உலகங்களும் இடையூறு எய்தாமே பாதுகாக்கும் சரிந்த தொந்தியர். கஜானனர். சூர்ப்பகர்ணர் என்பன அன்பர்களின் இடையூறுகளை நீக்கி, கருணைக் காற்றை அளித்து, மேனோக்கும் உண்மைஞானத்தை உதவு பவர் என்னும் பொருளன. குகாக்கிரசர், ஸ்கந்தபூர்வசர் என்பன முருகனுக்கு முன்பிறந்தவர் என்ற காரணத்தால் வந்த நாமங்கள். விநாயகர் தனக்கு ஒரு தலைவனின்றித் தானே தலைவனாக விளங்குபவர் என்று வாமன புராணமும், அன்பர் களின் தீமைகளை விலக்கி நன்னெறியிற் செலுத்துபவர் என்று பவிஷ்யோத்தர புராணமும் கூறுகின்றன. விகடர் என்பது அவர் ஆடிய விகடக்கூத்துக் காரணமாக விளைந்த பெயர். விக்கினராசர், விக்கின விநாயகர் என்பன இடையூறுகளுக்கு எல்லாம் தலைவராக அவற்றை அடக்கி ஆள்பவர் என்னும் பொருளன. தூமகேது என்பது வரலாறுகளில் தூமன்

---

1 இறைவனைப் பல பெயரானும் அழைப்பது, மக்களறிவு இறைவ னோடு ஒற்றித்து நின்றறிய இயலாமைபற்றியேயாம். ஆகவே அம்முழுமுதற் பொருளைப் பெயர்தொடுத்தும், வழிபட்டும் அறிவு நிறைவெய்துங்கால் மக்கள் அவற்றை விடற்பாலர்.

—இராமகிருஷ்ண விஜயம். ஆடி மலர் 24,7.

2 ஶ௦. ஶஶ to go (போ)

Koviloor Digital Library

என்னும் அரக்கனைக் கேதுபோல் அடக்கியாண்டு ஞானம் நல்குதலான் வந்த பெயராகவும் வால்நட்சத்திரம்போல இடையூறுகளுக்கும் தீயோர்களுக்கும் தீமைசெய்து நல்லோரைக் காத்தலான் வந்த பெயராகவும் கொள்வர் பெரியோர். இவ்வண்ணம் பல பெயர்கள் அவருடைய அருள்வண்மையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

கைக்கும் பிணியொடு காலன்
  தலைப்படும் ஏல்வையினில்
எய்க்குங் கவலைக் கிடைந்தடைந்
  தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த
  பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கண்திரு
  வாளன் திருவடியே.

அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே! அப்பம்
இடிஅவலோ டெள்ளுண்டை கன்னல்—வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்அடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ்.

வாழைக் கனிபல வின்கனி
  மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள்
  ளுண்டைஎல் லாந்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றேடும்
  புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
  மேனி விநாயகனே.

—கபிலதேவநாயனர்.

Koviloor Digital Library

பிள்ளையார் வகைகள்

கடவுளைப் பூசிக்கும் அன்பர்களுடைய மனம். அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்பப் பலவேறு நிலைகளில் பலவேறு திருவுருவ அமைப்பில் ஈடுபடுகின்றது; ஒன்றுகிறது; உருவேற்றுகிறது; உயர்கிறது. இவ்வண்ணமாகிய இடையரு தியானம், எல்லா இன்பங்களையும் அளித்து ஈடேறச் செய்கிறது. விநாயகப் பெருமானுடைய திருவுருவமும், அன்பர்களுக்காக முப்பத்திரண்டாகப் போற்றப்பெறுகிறது.

1. பால கணபதி :

நான்கு திருக்கரங்களும், யானைமுகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர்போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.[1]

2. தருண கணபதி :

எட்டுத் திருக்கரங்களையும், யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன் கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவைகளை உடையவர். நண்பகல் தோன்று கின்ற சூரியனைப்போன்ற நல்ல சிவந்த திருமேனிபடைத்தவர்.[2]

---

[1] 𑌕𑌰𑌸𑍍𑌥𑌕𑌦𑌲𑍀 𑌚𑍂𑌤 𑌪𑌨𑌸𑍇𑌕𑍍𑌷𑍁𑌕 𑌮𑍋𑌦𑌕𑌮𑍍 ।
𑌬𑌾𑌲𑌸𑍂𑌰𑍍𑌯𑌨𑌿𑌭𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌦𑍇𑌵𑌂 𑌬𑌾𑌲𑌗𑌣𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ॥
—முத்கலபுராணம்.

[2] 𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌾𑌪𑍂𑌪𑌕𑌪𑌿𑌤𑍍𑌥 𑌜𑌂𑌬𑍂,
𑌸𑍍𑌵𑌦𑌂𑌤𑌶𑌾𑌲𑍀𑌕𑍍𑌷𑍁𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑍈𑌃 ।
𑌧𑌤𑍍𑌤𑍇𑌸𑌦𑌾𑌯𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑌾𑌰𑍁𑌣𑌾𑌭𑌃 𑌪𑌾𑌯𑌾𑌤𑍍
𑌸𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌰𑍁𑌣𑍋 𑌗𑌣𑍇𑌶𑌃 ॥

Koviloor Digital Library

3. பக்தி கணபதி :

சரத்காலத்து நிறைமதிபோன்ற வெண்ணிறம் படைத்தவராக தேங்காய், மாம்பழம், வாழைப்பழம் பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.[1]

4. வீர கணபதி :

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களையும், சிவந்த திருமேனியையும் சிறிது சிவந்த திருமுகத்தையும் உடையவர்.[2]

5. சத்தி கணபதி :

செவ்வந்திவானம்போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியனாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். ஒருவர்க்கொருவர் இடுப்பில் கைகொடுத்துத் தழுவிக்கொண்டிருப்பது தனியழகு. பாசம், பூமாலை இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன் அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.[3]

---

[1] 𑌨𑌾𑌰𑌿𑌕𑍇𑌲𑌾𑌮𑍍𑌰 𑌕𑌦𑌲𑍀 𑌗𑍁𑌡 𑌪𑌾𑌯𑌸𑌧𑌾𑌰𑌿𑌣𑌮𑍍 ।
𑌶𑌰𑌚𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌭 𑌵𑌪𑍁𑌷𑌂 𑌭𑌜𑍇 𑌭𑌕𑍍𑌤𑌗𑌣𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ॥

[2] 𑌵𑍇𑌤𑌾𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑌰𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌚𑌕𑍍𑌰𑌖𑌡𑍍𑌗
𑌖𑌟𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌗𑌦𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌨𑌾𑌗𑌪𑌾𑌶𑌾𑌨𑍍 ।
𑌶𑍂𑌲𑌂 𑌚 𑌕𑍁𑌨𑍍𑌤𑌪𑌰𑌶𑍁𑌧𑍍𑌵𑌜𑌮𑍁𑌦𑍍𑌵𑌹𑌨𑍍𑌤𑌂
𑌵𑍀𑌰𑌂 𑌗𑌣𑍇𑌶𑌮𑌰𑍁𑌣𑌂 𑌸𑌤𑌤𑌂 𑌸𑍍𑌮𑌰𑌾𑌮𑌿 ॥

[3] 𑌆𑌲𑌿𑌙𑍍𑌗𑍍𑌯 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌹𑌰𑌿𑌤𑌾𑌙𑍍𑌗𑌯𑌷𑍍𑌟𑌿𑌂
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌕𑌟𑌿𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌮𑍍 ।
𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌰𑍁𑌣𑌂 𑌪𑌾𑌶𑌸𑍃𑌣𑍀 𑌵𑌹𑌨𑍍𑌤𑌂
𑌭𑌯𑌾𑌪𑌹𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌗𑌣𑍇𑌶𑌮𑍀𑌡𑍇 ॥

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

6. துவஜ கணபதி :

நான்கு திருக்கரங்களிலும், முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற்கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர். சந்திரன்போல வெண்மையானவர். நான்கு யானைமுகங்களை உடையவர்.[1]

7. சித்தி கணபதி :

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுள்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமைநிறம் உடையவருமாக விளங்குபவர்.[2]

8. உச்சிஷ்ட கணபதி :

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை இவற்றைத் தரித்தவரும், நீலநிறத் திருமேனி உடையவருமாக விளங்குபவர்.[3]

---

[1] யஃ புஸ்தகாக்ஷகுணதண்டகமண்டலுஶ்ரீ
நிர்வர்த்யமானகரபூஷணமிந்துவர்ணம் ।
ஸ்தம்பேரமானனசதுஷ்டயஶோபமானம்
த்வாம் ஸம்ஸ்மரேத்யஜகணாதிபதேஸ்ய நஃ ॥

[2] பக்வசூதபலபுஷ்பமஞ்ஜரீஇக்ஷு
தண்டதிலமோதகைஸ்ஸஹ ।
உத்வஹந் பரஶுமஸ்து தே நமஃ
ஸ்ரீஸம்ருத்தியுததேவபிங்கலஃ ॥

[3] நீலாப்ஜம்தாடிமீவீணாஶாலீகுஞ்ஜாக்ஷஸூத்ரகம் ।
தததுச்சிஷ்டநாமாயம் கணேஶஃ பாது மேசகஃ ॥

Koviloor Digital Library

வேறுவகை :- பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக, காம மோகிதராக விளங்குபவர். நீலவர்ணம் உடையவர்.[1]

9. விக்ன கணபதி :

சங்கு, கரும்புவில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு, மாலே, பூங்கொத்து, பாணம் முதலிய வற்ருேடு கூடிய திருக்கரங்களே உடையவரும், ஆபரணங்களே நிரம்பத் தரித்தவரும், பொன் மேனியருமாக விளங்குபவர்.[2]

10. க்ஷிப்ர கணபதி :

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம் பூப்போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.[3]

11. ஏரம்ப கணபதி :

அபயம் வரதமாகிய கைகளேயுடையவர். பாசம், தந்தம், அட்சமாலே, மாலே, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்கவாகனத்தின்மீது ஏறியிருப்பவர்.

---

[1] 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 । . 𑌨𑌾𑌰𑍀𑌯𑍋𑌨𑌿𑌰𑌸𑌾𑌸𑍍𑌵𑌾𑌦𑌲𑍋𑌲𑍁𑌪𑌂
𑌕𑌾𑌮𑌮𑍋𑌹𑌿𑌤𑌮𑍍 ।

[2] 𑌶𑌂𑌖𑍇𑌕𑍍𑌷𑍁𑌚𑌾𑌪𑌕𑍁𑌸𑍁𑌮𑍇𑌷𑍁𑌕𑍁𑌠𑌾𑌰𑌪𑌾𑌶
𑌚𑌕𑍍𑌰𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌸𑍃𑌣𑌿𑌮𑌂𑌜𑌰𑌿𑌕𑌾 𑌶𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 ।
𑌪𑌾𑌣𑌿𑌶𑍍𑌰𑌿𑌤𑍈𑌃𑌪𑌰𑌿𑌸𑌮𑍀𑌹𑌿𑌤𑌭𑍂𑌷𑌣𑌶𑍍𑌰𑍀
𑌰𑍍𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑍋𑌵𑌿𑌜𑌯𑌤𑍇 𑌤𑌪𑌨𑍀𑌯𑌗𑍌𑌰𑌃 ॥

[3] 𑌦𑌨𑍍𑌤𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌾𑌪𑌾𑌶𑌰𑌤𑍍𑌨 𑌕𑍁𑌮𑍍𑌭𑌾𑌂𑌕𑍁𑌶𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍍 ।
𑌬𑌂𑌧𑍂𑌕 𑌕𑌮𑌨𑍀𑌯𑌾𑌭𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌗𑌣𑌾𑌧𑌿𑌪𑌮𑍍 ॥

Koviloor Digital Library

யானைமுகம் ஐந்துடையவர். பசுமைகலந்த கருமை நிறம் உடையவர்.[1]

12. லட்சுமி கணபதி :

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம்போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழ்பவர்.[2]

13. மஹா கணபதி :

மாதுளம்பழம், கதை. கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோற்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர். பிறைமுடியர். மடிமீது எழுந்

---

[1] 𑌅𑌭𑌯𑌵𑌰𑌦𑌹𑌸𑍍𑌤𑌃 𑌪𑌾𑌶𑌦𑌨𑍍𑌤𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌃 𑌸𑍃𑌣𑌿𑌪𑌰𑌶𑍁
𑌦𑌧𑌾𑌨𑍋 𑌮𑍁𑌦𑍍𑌗𑌰𑌂 𑌮𑍋𑌦𑌕𑌞𑍍𑌚 ॥ 𑌫𑌲𑌮𑌧𑌿𑌗𑌤𑌸𑌿𑌂𑌹𑌃
𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌤𑌙𑍍𑌗𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌃 𑌗𑌣𑌪𑌤𑌿𑌰𑌤𑌿𑌗𑍌𑌰𑌃 𑌪𑌾𑌤𑍁𑌹𑍇
𑌰𑌮𑍍𑌬𑌨𑌾𑌮𑌾 ॥

[2] 𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌶𑍍𑌶𑍁𑌕𑌬𑍀𑌜𑌪𑍂𑌰𑌕𑌮𑌿𑌲𑌨𑍍𑌮𑌾𑌣𑌿𑌕𑍍𑌯
𑌕𑍁𑌮𑍍𑌭𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌾𑌨𑍍
𑌪𑌾𑌶𑌂 𑌕𑌲𑍍𑌪𑌲𑌤𑌾𑌂 𑌚 𑌖𑌡𑍍𑌗𑌵𑌿𑌲𑌸𑌜𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌸𑍍𑌸𑍁𑌧𑌾𑌨𑌿𑌰𑍍𑌝𑌰𑌃
𑌶𑍍𑌯𑌾𑌮𑍇𑌨𑌾𑌤𑍍𑌤𑌸𑌰𑍋𑌰𑍁𑌹𑍇𑌣 𑌸𑌹𑌿𑌤𑌂
𑌦𑍇𑌵𑍀𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇
𑌗𑍌𑌰𑌾𑌙𑍍𑌗𑍋 𑌵𑌰𑌦𑌾𑌨𑌹𑌸𑍍𑌤𑌸𑌹𑌿𑌤𑍋
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌗𑌣𑍇𑌶𑍋𑌽𑌵𑌤𑌾𑌤𑍍 ॥

Koviloor Digital Library

தருளியிருக்கிற – தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்பெற்றவர்.[1]

14. விஜய கணபதி :

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர், பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிற மானவர்.[2]

15. நிருத்த கணபதி :

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப்பெறுவர். மோதிரங் கள் அணிந்த விரல்களையுடைய கைகளில் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவைகளைத் தரித்தவர். பொன் போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தின் அடியில் எழுந்தருளியிருப்பவர்.[3]

---

[1] ஹஸ்தீந்த்ராநநமிந்துசூடமருணச்சாயம் த்ரிநேத்ரம்
ரஸாதாச்லிஷ்டம் ப்ரியயா ஸபத்மகரயா
ஸ்வாங்கஸ்தயா ஸந்ததம் |
பீஜாபூரகதேக்ஷுகார்முகலஸச்சக்ராப்ஜ
பாசோத்பல
வ்ரீஹ்யக்ரஸ்வவிஷாணரத்னகலசான்
ஹஸ்தைர்வஹந்தம் பஜே ||

[2] பாசாங்குசஸ்வதந்தாம்ரபலவானாகுவாஹந: |
விக்நம் நிஹந்து ந: ஸர்வம் ரக்தவர்ணோ விநாயக: ||

[3] பாசாங்குசாபூபகுடாரதந்த
சஞ்சத்கராக்லுப்தவராங்குலீயகம் |
பீதப்ரபம் கல்பதரோரதஸ்தம் பஜாமி ந்ருத்தோபபதம்
கணேசம் ||

Koviloor Digital Library

16. ஊர்த்துவ கணபதி :

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன்வண்ண வண்ணர்; பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.[1]

17. ஏகாட்சர கணபதி :

செந்நிறமானவர். செம்பட்டாடையர். செம்மலர்மாலையர். பிறைமுடியர். முக்கண்ணர். குறுந்தாளர். குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவைதாங்கிய கரங்களையுடையவர். யானைமுகவர். பதுமாசனத்தில் இருப்பவர். பெருச்சாளிவாகனர்.[2]

---

2 கஹ்லாரஶாலிகமலேக்ஷுகசாபபாண

தந்தப்ரரோஹ கதபீ கநகோஜ்ஜ்வலாங்க: ।

ஆலிங்கநோத்யதகரோ ஹரிதாங்கயஷ்ட்யா

தேவ்யாகரோது ஶுபமூர்த்வகணாதிபோ ந: ॥

3 ரக்தோரக்தாங்க ராகாம்ஶுக குஸுமயுதஸ்துந்திலஶ்

சந்த்ரமௌலி

நேத்ரைர்யுக்தஸ்த்ரிபி: வாமநகரசரணோபீஜ

பூராந்தநாஸ: ।

ஹஸ்தாக்ராக்லுப்தபாஶாங்குஶவரதோநாக

வக்த்ரோஹிபூஷோ

தேவ: பத்மாஸநஸ்தோ பவது ஸுககரோ

பூதயேவிக்நராஜ: ॥

Koviloor Digital Library

18. வர கணபதி :

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர், பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன் நிறைந்த மண்டையையுடையவர். பிறைமுடியர்.[1]

19. திரயாக்ஷர கணபதி :

அசைகின்ற செவிகளில் சாமரை அணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.[2]

---

[1] 𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌾𑌭𑌮𑌿𑌭𑌾𑌨𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑌯𑌨𑌂 𑌹𑌸𑍍𑌤𑍇𑌚
𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑍌
𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑌂 𑌮𑌧𑍁𑌮𑌤𑍍𑌕𑌪𑌾𑌲𑌮𑌨𑌿𑌶𑌂
𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌨𑍍𑌦𑍁𑌮𑍌𑌲𑌿𑌂 𑌭𑌜𑍇 ।
𑌪𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌤𑌨𑍁𑌂 𑌧𑍍𑌵𑌜𑌾𑌗𑍍𑌰𑌕𑌰𑌯𑌾 𑌪𑌦𑍍𑌮𑍋𑌲𑍍𑌲
𑌸𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌯𑌾
𑌤𑌦𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌹𑌿𑌤𑌪𑌾𑌣𑌿𑌮𑌾𑌤𑍍𑌤𑌵𑌸𑍁𑌮𑌤𑍍 𑌪𑌾𑌤𑍍𑌰𑍋𑌲𑍍𑌲𑌸𑌤𑍍
𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥

[2] 𑌗𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌦𑌨𑌂 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌚𑌲𑌤𑍍𑌕𑌰𑍍𑌣 𑌸𑍁𑌚𑌾𑌮𑌰𑌮𑍍 ।
𑌹𑍇𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌂 𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶
𑌧𑌰𑌂 𑌵𑌰𑌮𑍍 ॥
𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇𑌹𑌸𑍍𑌤𑍇 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌮𑍍𑌰𑌫𑌲𑌂 𑌤𑌥𑌾 ।
𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑍇𑌮𑍋𑌦𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌮𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑍇𑌤𑍍 ॥

Koviloor Digital Library

20. க்ஷிப்ரப்பிரசாத கணபதி :

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை, விஷ்டரம் இவற்றைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.[1]

21. ஹரித்திரா கணபதி :

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களை உடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர்.[2]

22. ஏகதந்த கணபதி :

பேழைவயிற்றுடன் நீலமேனியர். கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.[3]

---

[1] த்ருதபாஶாங்குஶகல்பலதாஸ்வரதஶ்ச பீஜபூரயுத:।
ஶஶிஶகலகலிதமௌலி த்ரிலோசனோருணஶ்ச கஜவதன:॥
பாஸுரபூஷணதீப்தோ ப்ருஹதுதர:
பத்மவிஷ்டரோல்லஸித: ।
விக்னபயோதரபவன: கரத்ருத கமல
ஸதாஸ்துமே பூத்யை ॥

[2] ஹரித்ராபம் சதுர்பாஹும் ஹரித்ரா வதனம்
ப்ரபும் ।
பாஶாங்குஶதரம் தேவம் மோதகம் தந்தமேவ ச ॥

[3] ஹஸ்தாஸ்ய ப்ருஹதாகாரம் வந்தே விக்ன விநாஶநம் ।
லம்போதரம் ஶ்யாமதனும் கணேஶம் குடார
மக்ஷஸ்ரஜமூர்த்வகாத்ராம்
ஸலட்டுகம் தந்தமத: கராப்யாம் வாமேதராப்யாஞ்ச
ததானமீடே ॥

Koviloor Digital Library

23- சிருஷ்டி கணபதி :

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர். [1]

24. உத்தண்ட கணபதி :

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், இரத்னகலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக் கைகளை உடையவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய பச்சைமேனியளாகிய தேவியால் தழுவப்பெற்றவர். [2]

25. ரணமோசன கணபதி :

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்குபோன்ற திருமேனியர். செந்நிறப் பட்டாடையுடுத்தியவர். [3]

---

[1] 𑌪𑌾𑌶𑌾𑌂𑌕𑍁𑌶𑌸𑍍𑌵𑌦𑌂𑌤𑌾𑌮𑍍𑌰𑌫𑌲𑌵𑌾𑌨𑌾𑌖𑍁 𑌵𑌾𑌹𑌨𑌃 ।
𑌵𑌿𑌘𑍍𑌨𑌂 𑌨𑌿𑌹𑌨𑍍𑌤𑍁 𑌨𑌶𑍍𑌶𑍋𑌣𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌿𑌦𑌕𑍍𑌷𑍋 𑌵𑌿𑌨𑌾𑌯𑌕𑌃 ॥

[2] 𑌕𑌲𑍍𑌹𑌾𑌰𑌾𑌂𑌬𑍁𑌜𑌬𑍀𑌜𑌪𑍂𑌰𑌕𑌗𑌦𑌾𑌦𑌨𑍍𑌤𑍇𑌕𑍍𑌷𑍁
𑌚𑌾𑌪𑌂 𑌸𑍁𑌮𑌂
𑌬𑌿𑌭𑍍𑌰𑌾𑌣𑍋 𑌮𑌣𑌿𑌕𑍁𑌂𑌭𑌶𑌾𑌲𑌿𑌕𑌲𑌶𑍌 𑌪𑌾𑌶𑌂
𑌸𑍃𑌣𑌿𑌞𑍍𑌚𑌾𑌬𑍍𑌜𑌕𑌮𑍍 ।
𑌗𑍌𑌰𑌾𑌂𑌗𑍍𑌯𑌾 𑌰𑍁𑌚𑌿𑌰𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌕𑌰𑌯𑌾 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾
𑌸𑌮𑌾𑌲𑌿𑌂𑌗𑌿𑌤𑌶𑍍𑌶𑍋𑌣𑌾𑌂𑌗𑌃
𑌶𑍁𑌭𑌮𑌾𑌤𑌨𑍋𑌤𑍁 𑌭𑌜𑌤𑌾𑌮𑍁𑌦𑍍𑌦𑌣𑍍𑌡𑌵𑌿𑌘𑍍𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ॥

[3] 𑌪𑌾𑌶𑌾𑌂𑌕𑍁𑌶𑍌 𑌦𑌨𑍍𑌤𑌜𑌂𑌬𑍂 𑌦𑌧𑌾𑌨𑌸𑍍𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌪𑍍𑌰𑌭𑌃 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑍋 𑌗𑌣𑌪𑌤𑌿𑌰𑍍𑌮𑍁𑌦𑍇 𑌸𑍍𑌯𑌾𑌦𑍃𑌣𑌮𑍋𑌚𑌕𑌃 ॥

Koviloor Digital Library



திருவாவடுதுறை ஆதீனம். ஏரம்ப கணபதி.

Koviloor Digital Library

Koviloor Digital Library

26. துண்டி கணபதி :

அட்சமாலை, கோடரி, இரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர். [1]

27. துவிமுக கணபதி :

தந்தம், பாசம், அங்குசம், இரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீலமேனியர். செம்பட்டாடையும், இரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர். [2]

28. மும்முக கணபதி :

வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரை ஆசனத்தின் நடுப்பொகுட்டில் மூன்று திருமுகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம்பூவைப்போன்ற சிவந்த நிறம் உடையவர். [3]

---

[1] 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌂 𑌕𑍁𑌠𑌾𑌰𑌞𑍍𑌚 𑌰𑌤𑍍𑌨𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌧𑌤𑍍𑌤𑍇 𑌕𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌘𑍍𑌨𑌰𑌾𑌜𑍋 𑌢𑍁𑌣𑍍𑌢𑌿𑌨𑌾𑌮𑌾 𑌮𑍁𑌦𑍇𑌸𑍍𑌤𑍁 𑌨𑌃 ॥

[2] 𑌸𑍍𑌵𑌦𑌨𑍍𑌤𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌰𑌤𑍍𑌨𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌕𑌰𑍈𑌰𑍍𑌦𑌧𑌾𑌨𑍋
𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌗𑌾𑌤𑍍𑌰𑌃 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑍋 𑌰𑌤𑍍𑌨𑌕𑌿𑌰𑍀𑌟𑌮𑌾𑌲𑍀 𑌭𑍂𑌤𑍍𑌯𑍈 𑌸𑌦𑌾𑌮𑍇
𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌖𑍋 𑌗𑌣𑍇𑌶𑌃 ॥

[3] 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍍𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑌿𑌖𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌾𑌕𑍍𑌷𑌵𑌰𑌦𑌾𑌨𑍍 𑌦𑌕𑍍𑌷𑍇 𑌦𑌧𑌾𑌨𑌃
𑌕𑌰𑍈𑌃,
𑌪𑌾𑌶𑌞𑍍𑌚𑌾𑌮𑍃𑌤 𑌪𑍂𑌰𑍍𑌣𑌕𑍁𑌮𑍍𑌭𑌮𑌭𑌯𑌂 𑌵𑌾𑌮𑍇
𑌦𑌧𑌾𑌨𑍋 𑌮𑍁𑌦𑌾 ।
𑌪𑍀𑌠𑍇 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌮𑌯𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦 𑌵𑌿𑌲𑌸𑌤𑍍 𑌸𑌤𑍍𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾
𑌭𑌾𑌸𑍁𑌰𑍇
𑌸𑍍𑌵𑌾𑌸𑍀𑌨𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑍁𑌖𑌃 𑌪𑌲𑌾𑌶𑌰𑍁𑌚𑌿𑌰𑍋𑌨𑌾𑌗𑌾𑌨𑌨𑌃
𑌪𑌾𑌤𑍁 𑌨𑌃 ॥

Koviloor Digital Library

29. சிங்க கணபதி :

வீணை, கற்பகக்கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, இரத்தினகலசம், பூங்கொத்து, அபயம் இவை அமைந்த இடது கைகளை உடையவர். வெண்ணிறமான திருமேனியர். யானைமுகவர். சிங்க வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.[1]

30. யோக கணபதி :

யோகநிலையில் யோகபட்டம் தரித்துக்கொண்டு இளஞ்சூரியன்போன்ற நிறத்தோடு, இந்திரநீலம்போன்ற ஆடையை உடுத்திக்கொண்டு, பாசம், அக்ஷமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.[2]

31. துர்க்கா கணபதி :

சுட்ட பசும்பொன்னிறம். எட்டுக்கை. பெரிய மேனி. அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது

---

[1] வீணாம் கல்பலதாம் அரிஞ்ச வரதம் தக்ஷே விதத்தே கரை:
வாமே தாமரஸஞ்ச ரத்னகலஶம் ஸன்மஞ்ஜரீம் சாபயம் ।
ஶுண்டாதண்டலஸன் ம்ருகேந்த்ரவதன: ஶங்கேந்துகௌர:
ஶுபோ
தீவ்யத் ரத்னநிபாம்ஶுகோ கணபதி:
பாயாதபாயாத் ஸ ந: ॥

[2] யோகாரூடோ யோகபட்டாபிராமோ பாலார்காபஶ்
சேந்த்ரநீலாம்ஶுகாட்ய: ॥
பாஶேக்ஷ்வக்ஷான் யோகதண்டம் ததானோ பாயாந்நித்யம்
யோகவிக்னேஶ்வரோ ந: ॥

Koviloor Digital Library

திருக்கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற் பழம் இவைகளை இடதுகைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.[1]

32. சங்கடஹர கணபதி :

இளஞ்சூரியனைப்போன்ற நிறத்தோடு. இடப்பாகத்தின் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசிய மேனியளாக, நீலப்பூவை ஏந்தியவளாக இருப்பள். வலதுகையில் அங்குசம், வரதம் உடையவர். இடதுகையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடை அணிந்தவர்.[2]

---

[1] 𑌤𑌪𑍍𑌤𑌕𑌾𑌂𑌚𑌨𑌸𑌂𑌕𑌾𑌶𑌶𑍍𑌚𑌾𑌷𑍍𑌟𑌹𑌸𑍍𑌤𑍋 𑌮𑌹𑌤𑍍𑌤𑌨𑍁𑌃 ।
𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌂𑌕𑍁𑌶𑌂𑌶𑌰𑌂𑌚𑌾𑌕𑍍𑌷𑌂𑌦𑌨𑍍𑌤𑌂𑌦𑌕𑍍𑌷𑍇𑌵𑌹𑌨𑍍𑌕𑌰𑍈𑌃 ॥
𑌵𑌾𑌮𑍇𑌪𑌾𑌶𑌂 𑌕𑌾𑌰𑍍𑌮𑍁𑌕𑌂𑌚𑌲𑌤𑌾𑌂𑌜𑌂𑌬𑍁𑌂𑌦𑌧𑌤𑍍𑌕𑌰𑍈𑌃 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑌸𑍍𑌸𑌦𑌾𑌭𑍂𑌯𑌾𑌤𑍍 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾𑌗𑌣𑌪𑌤𑌿𑌰𑍍𑌮𑍁𑌦𑍇 ॥

[2] 𑌬𑌾𑌲𑌾𑌰𑍍𑌕𑌾𑌰𑍁𑌣𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌾𑌮𑍇𑌬𑌾𑌲𑌾𑌂𑌵𑌹𑌨𑍍𑌨𑌂𑌕𑍇 ।
𑌲𑌸𑌦𑌿𑌂𑌦𑍀𑌵𑌰𑌹𑌸𑍍𑌤𑌾𑌂𑌗𑍌𑌰𑌾𑌂𑌗𑍀𑌂𑌰𑌤𑍍𑌨𑌶𑍋𑌭𑌾𑌢𑍍𑌯𑌾𑌮𑍍 ॥
𑌦𑌕𑍍𑌷𑍇𑌂𑌕𑍁𑌶𑌵𑌰𑌦𑌾𑌨𑌂 𑌵𑌾𑌮𑍇𑌪𑌾𑌶𑌂𑌚𑌪𑌾𑌯𑌸𑌂𑌪𑌾𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌨𑍀𑌲𑌾𑌂𑌶𑍁𑌕𑌲𑌸𑌮𑌾𑌨𑌃 𑌪𑍀𑌠𑍇𑌪𑌦𑍍𑌮𑌾𑌰𑍁𑌣𑍇𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍 ॥
𑌸𑌂𑌕𑌟𑌹𑌰𑌣𑌃 𑌪𑌾𑌯𑌾𑌤𑍍 𑌸𑌂𑌕𑌟𑌪𑍂𑌗𑌾𑌦𑍍𑌗𑌜𑌾𑌨𑌨𑍋
𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 ।

Koviloor Digital Library

புராண வரலாறுகள்

திருமால் வழிபட்டது: பாலகணபதியாக விநாயகப் பெருமான் திருக்கயிலைமலைவாசலில் விளையாடிக்கொண்டிருந்தார். சிவகணங்கள் யாவும் விளையாட்டுத் துணையாக அவர் ஏவலைச் செய்துகொண்டிருந்தன. ஒருநாள் சிவகணங்களுடன் விநாயகப்பெருமான் ஒருபூஞ்சோலைக்குள் சென்றார். அங்கு ஒளிந்து விளையாடுவார். பாற்கடலைத் துதிக்கையால் முகந்து சிவகணங்கள்மீது தூவி மழைபெய்கிறது என்பார். நாகங்களை அணிவர். கோள்களையும், நட்சத்திரங்களையும் துருவசக்கரத்தோடு பிணைத்து மார்பில் அணிவர். துயிலுகின்ற திருமால் பிரமன் இவர்களோடு சேர்த்து, பாற்கடலை உறிஞ்சுவார். அனைவரையும் தமது துதிக்கையில் மறைப்பார். மீளவும்வெளியேவிடுவார். திருமால் முதலியோர்கள் இதுவரை மறைந்து இருந்தமையும், இப்போது பாற்கடலில் பழைய நிலையில் இருக்கின்றமையும் எண்ணிப்பார்த்து வியந்தனர். காரணம் என்ன என்று வினவிக்கொண்டனர். இந்நிலையில் திருமால் தன்கையில் இருந்த வலம்புரிச் சங்கைக் காணாது திகைத்தார். அப்போது ஒரு ஒலிகேட்டது. அவ்வொலி தன்னுடைய பாஞ்சசன்யத்தின் ஒலியாக இருந்தது. அவ்வொலி சிவகணநாதர் வாயிலிருந்து வருவதாக அறிந்தார். திருமால் அச்சங்கைப் பெறச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தார். சிவபெருமான் வெளிப்பட்டு, அத்திகிரியில் வலம்புரி விநாயகரைப் பூசித்தால் பாஞ்சசன்யத்தை அடையலாம் என்று ஆணைதந்தார். திருமால் அவ்வாறே வழிபட்டு விநாயகர் அருளால் சங்கை அடைந்தனர்.*

கஜமுகனை வென்றது: கஜமுகன் மாகதமுனிவருக்கும், விபூதி என்னும் அசுரப் பெண்ணிற்கும் தோன்றிய அசுரன். சுக்கிரன் உபதேசத்தின் வண்ணம் தவஞ்செய்து சிவபெருமானருளால் ஆயுதங்களாலும், யாவராலும் அழியாத வரம்பெற்றான். வரபலத்தால் அனைவரையும் வதைத்துவந்தான். தேவர்கள் இந்திரனிடம் விண்ணப்பித்துக்கொண்டனர். இந்திரன்

---

* காஞ்சிப்புராணம்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

திருக்கயிலைமலை சென்று சிவகுமாரராகிய விநாயகரிடம் விண்ணப்பித்துக்கொண்டான். விநாயகர் பூதப்படை புடைசூழப் பூமிக்கு எழுந்தருளி, கஜமுகனது இராசதானியாகிய மதங்கபுரத்தை முற்றுகையிட்டார். போர் மூண்டது. அவன்விட்ட பாணங்களையெல்லாம் விநாயகர் தம் கையிலுள்ள உலக்கையால் விலக்கி, அதனைக்கொண்டே அவன்மார்பில் அடித்தார். அவன் மயங்கி வீழ்ந்தானேயன்றி இறந்துவிட்டானல்லன். அதனைக்கண்டு இவன் ஆயுதங்களால் இறக்காத வரம்பெற்றவன் என்பதைத் திருவுளத்து எண்ணி, தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து அவன்மீது ஏவினார். அவன் இந்த உடலை விட்டுப் பெருச்சாளியாக வந்தான். விநாயகர் அதனை வாகனமாகக்கொண்டு அடக்கியாண்டார்.*

இராவணனைப் பந்தாடியது: இராவணன் தன்அரசியலும், தானும் அழியாதிருக்கச் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தான், சிவபெருமான் வெளிப்பட்டு ஒரு சிவலிங்கத்தை அவன் கையிற்கொடுத்து 'இதனை உன் ஊருக்குக் கொண்டு போய் சிவாகம விதிப்படி, பிரதிட்டை செய்து வழிபடுக; எண்ணிய எல்லாவற்றையும் எளிதல் எய்தலாம்; ஆனால் இதனை நடுவழியில் எங்கும் கீழேமட்டும் வைத்துவிடலாகாது' என்று அருளிச்செய்தார். இராவணனுக்கு ஒரேமகிழ்ச்சி. ஊருக்குப் புறப்பட்டான். இச்செய்தியறிந்த தேவர்களுடைய சூழ்ச்சியால் வருணன் இராவணன் வயிற்றிற்புகுந்து சிறுநீர் பெருகச்செய்தான். சிவலிங்கப் பெருமானைக் கையில் வைத்துக்கொண்டு சிறுநீர் கழிக்கக்கூடாது என்று எண்ணிய இராவணன் யாராவது வருவார்களா? என்று எதிர்நோக்கினான். மிக ஆசார சீலமுள்ள அந்தணச் சிறுவன் ஒருவன் வந்தான். அவனிடம் ஒப்பித்து, 'தம்பி! கீழேமட்டும் வைத்துவிடாதே' என்று சொல்லிச்சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம், வந்த சிறுவன் இராவணனை அழைத்தான். அவன் வராமையால் அச்சிவலிங்கத்தைக் கீழே வைத்துவிட்டு ஓடினான். அவ்வளவுதான், சிவலிங்கம் வேரூன்றிவிட்டது. கருமம் முடித்து நீராடிவந்த இராவணன், மலையைப்பெயர்த்த எனக்கு இந்தச் சிவலிங்கம் எம்மாத்திரம்? என்று அசைத்துப் பிடுங்க முயற்சித்தான். சிவலிங்கம் குழைந்து, பசுவின் காதுபோல நீண்டதேயன்றிப் பிடுங்க முடியவில்லை. கைக்கு எட்டியது

* கந்தபுராணம். கயமுகன் உற்பத்திப்படலம்.

Koviloor Digital Library

வாய்க்கு எட்டாமற் போனதுபோலச் சிவலிங்கம் கைநழுவி விட்டதை அறிந்த இராவணனுக்கோ கோபம்மூண்டது. சிறுவனைக் குட்டவும் அடிக்கவும் ஓடிப்பிடித்தான். சிறுவன் உண்மை வடிவாகிய — சிவகுமாரராகிய விநாயகராகித் துதிக்கையால் அவனைப் பிடித்திழுத்துப் பந்தாடினார். இராவணன் செருக்கடங்கி வழிபட்டு உய்ந்தான். இந்த வரலாறு நடந்த இடம் திருக்கோகர்ணம் என வழங்கும் மகாபலேஸ்வரம்.

விரசயை வென்றது - விநாயகப்பெருமான், காசியபர் அதிதி இருவருக்கும் அவர்கள் தவத்திற்கு இரங்கிக் குழந்தையாகி அவர்கள் வீட்டில் வளர்ந்துவந்தார். தேவர்கள் அசுரர்களால் வருந்துன்பம் தொலையும் இன்பம் பெருக வாழலாம் என்று களித்தனர். இதனை அறிந்த விரசை என்னும் அரக்கி நரமுக விநாயகராகிய குழந்தையைத் தாய்தந்தையர் இல்லாத சமயம் பார்த்து விழுங்கிவிட்டாள். கணேசர் அவள் வயிற்றுட்சென்று கைகால்களை உதைத்துக்கொண்டார். அவள் வயிறுகிழிந்தது. விநாயகர் வெளிவந்தார். காசியபரும் அதிதியும் நிகழ்ச்சியை அறிந்து மகிழ்ந்தனர்.

காவிரி கொணர்ந்தது: தென்திசையைச் சமப்படுத்த இறைவனிடம் திருமுடிக் கங்கைநீரைப் பெற்றுக் குடகுமலை வழியாகச் செல்லும் அகத்தியர் கங்கையுள்ள கமண்டலத்தை ஒரு அந்தணச் சிறுவனிடம் கொடுத்து, சிறுநீர் கழிக்கச்சென்றார். அந்தணச் சிறுவனாகவந்த விநாயகப்பெருமான் கமண்டலத்தைக் கீழே வைத்துச்சென்றார். அகத்தியர் திரும்பிவந்து பார்க்கும்போது கமண்டலம் கீழே இருந்தது. ஒரு காகம் அதன்மீது உட்கார்ந்தது. காகந்தீண்டிய நீரைப் பயன்படுத்தக்கூடாது என்று பரபரந்து அதனை ஓட்ட முயன்றார். காகம் பறந்தது. அந்த வேகத்தில் கமண்டலம் கவிழ்ந்தது. காவிரியாகப் பெருகிற்று. இதனைக் 'கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை' என்கிறது மணிமேகலை.

உதத்தன் துந்தரன் வதம்: விநாயகர் காசியபர் குழந்தையாக வளரும்போது உதத்தன் துந்தரன் என்னும் அசுரர்கள் இருவரும், கிளி வடிவெடுத்துக் குழந்தையைக் குத்திக் கொன்றுவிடுவது என்று சமயம் பார்த்திருந்தனர். விநாயகர் இதனையுணர்ந்து, அதிதியாகிய அன்னையைப் பார்த்துக் கிளிகளைப் பிடித்துத்தர வேண்டினார். அதிதி பறக்கும் கிளிகளை

Koviloor Digital Library

நான் எப்படிப் பிடித்துத்தர முடியும் என்றார். விநாயகர் பருந்து உருவம் எடுத்துப் பறந்து சென்று அவைகளைப் பிடித்துக் குத்திக்கொன்றார். அவர்கள் கிளியுருமாறி, அசுரராகி வீழ்ந்திறந்தனர்.

நக்கிராசுரன் வதம் : கந்தருவ ராசனாகிய சித்திரன் என்பவன் புதிதாக மணஞ்செய்துகொண்டான். அந்த மோகத்தால் தன் அரண்மனைக்கு வந்த பிருகுவாகிய குருவை மதிக்கவில்லை. அவர் அவனை முதலையாகச் சபித்தார். அவன் முதலையாகிச் சோமவதி தீர்த்தத்தில் கிடந்தான். நீராட வருகின்ற அனைவருக்கும் துன்பம் விளைத்துவந்தான். ஒருநாள் அதிதி தன் மகனாகிய மகோற்கட விநாயகமூர்த்தியைத் தூக்கிக்கொண்டு நீராடச்சென்றாள். குழந்தையைக் கரையில் வைத்துவிட்டு நீராடினாள். குழந்தையும் நீரில் குதித்து நீந்தி விளையாடிக்கொண்டிருந்தது. முதலை அக்குழந்தையைப் பிடித்துக்கொண்டது. அதனை உணர்ந்த முனிகுமாரர்கள் ஓடிவிட்டனர். மகோற்கட விநாயகர் அதன் வாயினின்றும் தப்பி அதன் முதுகில் ஏறிக்கொண்டார். அதன் கழுத்தை இரு காலாலும் அமுக்கினார், குளம் முழுவதும் வலம்வந்தார். உந்தினார். முதலையோடு கரையில் வந்து குதித்தார். முதலையும் இறந்தது. பிருகுமுனிவர் சாபம்நீங்கி உய்ந்த சித்திரராசன் விநாயகரை வழிபட்டு உய்ந்தான்.

கிருத்திராசுர வதம் : மயூரேச விநாயகராக உமாதேவியாரிடம் வளர்ந்து வந்த பாலகணபதியைக் கொல்லக் கருதி, கிருத்திராசுரன் கழுகுருக்கொண்டு ஆகாயத்தில் தூக்கிக்கொண்டு சென்றான். அனைவரும் வருந்தினர். விநாயகர் அந்தக் கழுகின் மூக்கிலிருந்தபடியே பெருமூச்சு விட்டுக்கொண்டே அடிவயிற்றிலுதைத்தார். அசுரன் அது பொறுக்கலாற்றாது வீழ்ந்து இறந்தான்.

க்ஷேமன் குசலன் வதம் : மயூரேச மூர்த்தியாக இருக்கும்போது இவரைக் கொல்லவந்த க்ஷேமன், குசலன் என்னும் இரு அசுரர்களும் இரண்டு பேரெலிகளாகித் தங்களுக்குள் சண்டை வளர்த்துக்கொண்டு இவர் மார்பில் வந்து விழுந்தனர். அசுரர்களுக்குத்தான் வலி அதிகமாயிற்று. அதனால் அவர்கள் இருவரும் இறந்தனர்.

Koviloor Digital Library

குரூராசுரன் வதம்: உமாதேவியார்பக்கத்தில் மஞ்சத்தில் கண்வளரும் குழந்தையாகிய விநாயகரைக் கொல்லக் கருதிய குரூரன், மஞ்சத்தோடு வானிடைத் தூக்கிச்சென்றான். விநாயகர் அவன் காதுகளைப் பிடித்துத் தொங்கிக்கொண்டே அவன் மார்பில் உதைத்தார். அவன் இறந்தான்.

பாலாசுரன் வதம்: பாலாசுரன் என்பவன் முனிகுமாரனைப்போல வேடந்தாங்கி விளையாட்டாகச் சண்டை செய்பவனைப்போல விநாயகருடன் வலுச்சண்டை செய்தான். விநாயகரும் விளையாட்டாகவே நெடுநேரம் சண்டை செய்து கொண்டேயிருந்து, அவன் இவரை வஞ்சகமாகக் கொல்ல வந்த சமயம்பார்த்து அவன் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொன்றார்.

வியோமாசுர வதம்: வியோமாசுரன் என்பவன் திருச்சந்தி என்னும் நகரில் பலர் நடமாடும் இடத்தில் ஒரு பெரிய மாமரமாகி வளர்ந்து வானளாவ நின்றான். எல்லோரும் இது என்றைக்கு எத்தனைபேரைக் கொல்ல இருக்கிறதோ என்று அஞ்சினர். விநாயகரை வேண்டினர். விநாயகர் அதனை ஆட்டி அசைத்துப் பிடுங்கியெறிந்தார். மரஉருவம் மாறிய அசுரன் வீழ்ந்து இறந்தான்.

சதமகிஷபட்சணி வதம்: வண்டிக்கணக்கான உணவையும் நூறு எருமைகளையும் ஒருவேளை உணவாக உட்கொள்ளும் அசுரப்பெண் ஒருத்தி, இந்திராணியைப்போல வடிவமெடுத்து வந்து மயூரேச விநாயகரை முத்தமிடுவாள்போலத் தூக்கி, வானில் எறிந்து கொல்ல எண்ணினாள். அதனை உணர்ந்த விநாயகப்பெருமான் அவள் காதுகளையும் மூக்கையும் கிள்ளிக் கொன்றார்.

கமடாசுர வதம்: கமடன் ஆமை வடிவுகொண்ட அசுரன். அவனை அடிவயிற்றில் குத்திக்கொன்றார்.

தர்ப்பாசுரன் வதம்: வேனில் வெப்பம் தாங்காது உமாதேவியார் ஒருநாள் மாலை உய்யானவனத்திற்குச் சென்றார். அங்கு ஒரு பாதுகாப்பான இடத்தில் கணேசரைத் தூங்க வைத்துவிட்டு உலாவச்சென்றார். அப்போது தர்ப்பாசுரன் சுழல்காற்றாகித் தூங்கும் கணேசரை மஞ்சத்துடன் வானில்

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

தூக்கியெறிந்தான். விநாயகர் அவன் பிடரி மயிரைப் பிடித்துக்கொண்டு பிடரியில் ஏறியிருந்து பிடரி ஒடிய உதைத்துக் கீழேதள்ளிக் கொன்றார். அவன் குருதிசோர இறந்தான்.

துந்துபி வதம்: துந்துபியென்னும் அசுரன் விநாயகருடன் விளையாடுபவன்போல வந்து அவரைத் தூக்கித் தன் மடிமேல் வைத்துக்கொண்டு நச்சுப்பழங்களை உண்பித்தான். அசுரனுடைய வஞ்சத்தை உணர்ந்த நஞ்சமர்கண்டன் மைந்தரான விநாயகர், விளையாட்டாகவே அவன் தலைமயிரையும், பிடரியையும் பிடித்துக்கொண்டு கூத்தாடினார். அதனால் அவன் தலை திருகப்பெற்று இறந்தான்.

சரபாசுர வதம்: ஓர் அசுரன் சரபப் பட்சிபோல் வடிவெடுத்து விநாயகரைக் கொல்ல எண்ணினான். அவன் இறகுகளை முறித்துக்கொன்றார்.

ஆசாகரன் வதம்: ஆசாகரன் என்னும் அசுரன் மலைப் பாம்பின் வடிவாகி இவரை விழுங்கினான். விழுங்கும் அளவும் சிறு குழந்தையாக இருந்த விநாயகப்பெருமான் உள்ளே சென்றதும் விசுவரூபம் எடுத்து வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியில் வந்தார். அசுரன் இறந்தான்.

அபிஜய வதம்: அபிஜயன் என்னும் அசுரன் காட்டு யானை வடிவுகொண்டு விநாயகரை எதிர்த்தான். விநாயகர் அதன் கொம்புகளை முறித்துக் கொன்றார்.

நூபுராசுரன் வதம்: சிவபெருமானைப்போலவே காலிற் சிலம்பு அணிந்துகொண்டு விநாயகப்பெருமான் நடனம் ஆடினார். அதனை அறிந்த நூபுராசுரன் அவர் காற்சிலம்பில் புகுந்து, அவரைக் கொல்லக் காலம் பார்த்திருந்தான். நடனம் ஆடி ஓய்ந்த பிள்ளையை ஆவலோடு வாரியெடுத்த உமையம்மை பிள்ளையின் கால்கள் கனமாக இருப்பதை அறிந்து ஐயுற்று வினவினாள். அப்போதுதான் கால் கனமாக இருப்பதை அறிந்துகொண்டவர்போல, விநாயகர் தமது காலை வேகமாக உதறினார். சிலம்பிற்கிடந்த அசுரன் கீழேவிழுந்து இறந்தான்.

மத்ஸ்யாசுரன் வதம்: விநாயகர் ஒருநாள் தடாகத்திற்குச் சென்று விளையாடினார். மீனுருவங்கொண்டு அதில் மறைந்

Koviloor Digital Library

திருந்த அசுரன் அவரை நீருள் இழுத்துச்சென்றான். விநாயகர் மீனுடன் நீண்டநேரம் போரிட்டு அவனைப்பிடித்துக் கரையில் போட்டுக் கொன்றார்.

கூடாசுரன் வதம்: கூடாசுரன் என்பவன் ஒரு நச்சுப் பொய்கையைப் படைத்தான். அதில் விநாயகரும், முனி குமாரர்களும் நீராட வருவார்கள்; இறந்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்து வானத்தில் மறைந்திருந்தான். அவன் எதிர் பார்த்தவண்ணமே முனிகுமாரர்கள் நீருள் மூழ்கி இறந்தனர். இதனையறிந்த விநாயகர் வானத்தைக் கோபத்துடன்பார்த்தார். கண்ணிலிருந்து உண்டான தீப்பொறியால் கூடாசுரன் சாம்பலாயினன்.

சிலாசுரன் வதம்: சிலாசுரன் பெரும்பாறை வடிவாக விநாயகரைத் தடுத்துநின்றான். புதிதாக முளைத்த பாறையைக் கண்டு மக்கள் அனைவரும் மயங்கினர். விநாயகரிடம் விண்ணப் பித்தனர். விநாயகர் பெருமூச்சுவிட்டார். பாறை சுக்கு நூறுகியது. அதன் வடிவாகநின்ற அசுரனும் மாண்டான்.

கர்த்தமாசுரன் வதம்: காசியபர் அதிதியாகிய தாய்தந்தை யர்கள் விநாயகர் செய்யும் சிறுகுறும்புகளைப் பொறுக்க முடியாது, அவருடைய இடுப்பில் ஒரு கயிற்றைக்கட்டி, முற்றத்தில் உலாவவிட்டனர். சமயம்பார்த்திருந்த கர்த்தமன், அவரை எடுத்து விழுங்கிவிட்டான். விநாயகர் விசுவரூபம் எடுத்து வெளிவந்தனர். அசுரன் இறந்தான்.

சாயாசுரன் வதம்: மக்களின் நிழலைப்பற்றி நின்று அவர்களைக் கொல்லும் வழக்கமுடைய சாயாசுரன், விநாய கரையும் அப்படிக் கொல்ல எண்ணினான். விநாயகர் சிறு கல்லால் அவன் வயிற்றிலடித்துக் கொன்றார்.

சஞ்சலாசுரன் வதம்: வஞ்சகனாகிய சஞ்சலாசுரன், விளையாடும்போதே விநாயகரைக் கொன்றுவிடலாம் என்று எண்ணிவந்தான். விநாயகர் அவனியல்பை அறியாதவர் போல, முனிகுமாரர்களோடும் அவனோடும் பந்து விளையாடி னார். சமயம் பார்த்திருந்த அசுரன் எல்லாரையும் தோளில் தூக்கிக்கொண்டு வானத்தில் பறந்தான். முனிகுமாரர்கள் பயந்து ஓலமிட்டனர். விநாயகர் இமயமலைபோலப் பெருஞ்

Koviloor Digital Library

சுமையாயினர். அசுரன் தாங்கமாட்டாது தள்ளாடினன். அவன் கழுத்தைக் காலால் இறுகப்பற்றி அடக்கினர்.

விருகாசுரன் வதம்: அசுரன் ஒருவன் செந்நாய் வடிவு கொண்டு முனிகுமாரர்களை வெருட்டினன். இதனைக் கண்ணுற்ற விநாயகர் பாசத்தால் அவனைக்கொன்று முனிகுமாரர்களைக் காப்பாற்றினர்.

கட்காசுரன் வதம்: ஒருநாள் விநாயகர் ஒரு சமவெளிப் பகுதியில், முனிகுமாரர்களை மல்யுத்தஞ் செய்ய ஏவிவிட்டுக் கண்டு களித்துக்கொண்டிருந்தார். சமயம்பார்த்திருந்த கட்காசுரன் ஒட்டக வடிவுகொண்டு முனிகுமாரர்களை மிதித்துக் கொண்டு இவரையும் கொல்லவந்தான். விநாயகப்பெருமான் அவனைக் காலால் உதைத்தார். உதை பொறுக்கமுடியாது அவன் தின்ற உணவைக் கக்கிக்கொண்டே விழுந்திறந்தான்.

தூமாட்சன் வதம்: காசிமன்னன், தன்மகனுடைய மணத்தை இடையூறின்றி முடித்துவைக்கும் வண்ணம் விநாயகரை வேண்டிக் கொண்டான். அவ்வண்ணமே உடன்பட்டு அவரும் அவனுடன் சென்றார். வழியில் ஒரு பெரிய காடு இருந்தது. அதில் தூமாட்சன் என்னும் அசுரன் எல்லாரையும் வெல்லக்கூடிய ஆயுதம் ஒன்று வேண்டும் எனச் சூரியனை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தான். சூரியன் அவன் தவத்திற்கு இரங்கித் தான் வெளிப்படாமலே வேல் ஒன்றைமட்டும் உதவினன். அவ் வேல் வானத்திலிருந்து கீழ்நோக்கி வந்துகொண்டிருந்தது. விநாயகர் அதனைக் கையில் ஏற்று, அதனாலேயே அவனைக் கொன்று அனைவரையும் காத்தனர்.

ஜகன், மநு வதம்: தமது தந்தையாகிய தூமாட்சன் இறந்தான் என்ற செய்தியைக்கேட்டதும் அவன் மக்களாகிய ஜகன் மநு இருவரும் விநாயகர்மேல் படையெடுத்து வந்தனர். விநாயகப் பெருமான் ஒரு பெருமூச்சுவிட்டார். புயலிலகப்பட்ட இலவம் பஞ்சுபோல அவர்கள் நெடுந்தூரம் பறந்து போய் விழுந்து இறந்தனர்.

ஐந்நூறு அசுரர் வதம்: நராந்தகன் என்னும் அசுரன் ஏவலால் வந்த ஐந்நூறு அசுரர்களும் விநாயகரைநோக்கிப்

Koviloor Digital Library

படையெடுத்து வந்தனர். அவர்களனைவரையும் தனது கால் பரட்டால் அழித்தார்.

தந்துரன், விகண்டன் வதம்: அசுரர்களாகிய இவர்கள் இருவரும் காசிராசனையும் விநாயகரையும் கொல்ல எண்ணிப் பிராமண வேடத்துடன், காசியரசனுடைய புரோகித குமாரர் களைப்போல வந்தனர். அவர்கள் வஞ்சத்தையுணர்ந்த விநாயகர் உபசரிப்பார்போல இருகைகளாலும் வாரியணைத்துக் கொண்டு, கசக்கிப்பிழிந்து கொன்றனர்.

பதங்கன், விதுலன் வதம்: பதங்கன் விதுலன் என்னும் இவர்கள் இருவரும் புயற்காற்ருக உருக்கொண்டு காசி நகருக்கே துன்பம் விளைத்தனர். விநாயகர் ஆதிசேடனை யழைத்து வாயுவை உண்ணச் செய்தார். காற்று உருவழிந்த அசுரர்களை விநாயகர் இருகைகளாலும் பிடித்துப் பூமியில் அடித்துக் கொன்ருர்.

நராந்தகன் வதம்: நராந்தகன் என்னும் அசுரன் சிவ பெருமான் அளித்த வரவிசேடத்தால் எல்லாரையும் வென்று விளங்கினுன். வெற்றிச் செருக்கால் எல்லாருக்குந் துன்பம் விளைவித்தான். தோற்ருேடிய காசி மன்னன் விநாயகரை உபாசித்தான். விநாயகர் வெளிப்பட்டு அசுரனை உதைத்துக் கொன்றனர். தவமேன்மையாலும் வரபலத்தாலும் மீண்டும் உயிர்பெற்ற நராந்தகன் போர்செய்தான். விநாயகர் அம்பினுல் எய்து, அவன் தலையை அறுத்தனர் மீண்டும் மீண்டும் தலை முளைத்தது. அதனைக்கண்ட விநாயகர் அவன்உடலே இல்லாத வண்ணம் திருவடியால் அவனைத் தேய்த்துக் கொன்ருர்.

கூடசிலா வதம்: கூடன் என்பவன், காசிநகர் வாயிலில் கல்லாய்க் கிடந்தான். அசுரனுகிய அவனை விநாயகர் பரசு என்னும் ஆயுதத்தால் வென்றடக்கினுர்.

காமக்குரோத வதம்: தருமதத்தர் என்னும் முனிவரின் புத்திரிகளாகிய சித்தி புத்தியென்னும் இருவரையும் மணம் புரிந்துகொள்ள மகோற்கட விநாயகர் எழுந்தருளியகாலத்து, காமன் குரோதன் என்னும் அசுரர்கள் இருவரும் கழுதை யாகவும் புலியாகவும் வந்து இடையூறு விளைத்தனர். விநாயகர் அவர்களைக் கைகளாற்பற்றிக் கறகறவெனச் சுழற்றிக் கீழே யடித்துக் கொன்றனர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

குண்டகுஞ்சர வதம்: குண்டன் என்னும் அசுரன் யானை வடிவங்கொண்டு இவரைக் கொல்லவந்தான். விநாயகர் அவன் கழுத்தை நெரித்துக் கொன்றார்.

சிரம்பாவதம்: தூமாட்சன் மனைவியாகிய சிரம்பா என்பவள் தன் கணவனைக்கொன்ற பழி தீர்த்துக் கொள்வதற்காகப் பேரழகியாக உருவெடுத்து விநாயகரை அணுகினள். விநாயகரைப் பார்த்து 'பெருமானே! பச்சிலை மூலிகைகளால் ஆன சிறந்த தைலம் கொண்டுவந்திருக்கிறேன்; நானே தேய்த்துத் தைலக்காப்பிடுவேன்; உத்தரவு தரவேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள். விநாயகர் ஒப்புக்கொண்டனர். அவள் விஷங்கலந்த தைலத்தைப் பெருமானுக்குத் தேய்த்தனள். விநாயகர் அவளது நிலையை அறிந்து தேங்காயால் அடித்துக் கொன்றனர்.

ஜ்வாலாமுகன், வியாக்ரமுகன், தாருணன் வதம்: இப்பெயருள்ள அசுரர்கள் மூவரும், விநாயகரையும், அவர் இருக்கும் காசிநகரையும் ஒருசேர அழிக்க எண்ணி, தாருணன் வாயுவாகவும், ஜ்வாலாமுகன் தீயாகவும் மாறி நகரை அழித்தனர். வியாக்ரமுகன் புலியாகிக் கோட்டைவாயிலில் நின்று கொண்டு எல்லாரையும் கொன்றும், விழுங்கியும் வந்தான். மக்கள் அஞ்சி விநாயகரிடம் விண்ணப்பித்தனர். விநாயர் பேருருக்கொண்டு புலிவாயைக் கிழித்தும், மற்றவர்களைக் கொன்றும் நகரைக் காப்பாற்றினர்.

மேகாசுரன் வதம்: மேகன் என்னும் அசுரன் அந்தண வேடங்கொண்டு, காசி அரசனையணுகி 'அரசே! இவ்விநாயகர், ஊரில் இருக்கும்வரை ஊருக்கே கெடுதி; சில நாட்களாவது அவர் காட்டில் இருக்கவேண்டும்' என்று கூறினன். அரசன் கேட்டுச் சிந்தித்துப் பார்த்து, இதில் ஏதோ சூது இருக்கிறது என்று எண்ணி, 'அந்தணப் பெருமானே! தாங்களே சென்று விநாயகரிடம் தெரிவியுங்கள்' என்றான். அவன் அங்ஙனவே செய்தான். உளம் அறிந்த விநாயகர் இதனைக்கேட்டு மன மகிழ்ந்தவர்போல தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி, அவன் கழுத்தில் அணிந்தார். மாலை நெருப்பாய் அவனைச் சுட்டெரித்தது.

கூபன், மண்டூகன் வதம்: கிணறாகவும், தவளையாகவும் வடிவுகொண்டு இரு அசுரர்கள் விநாயகரைக் கொல்லக் காத்தி

ருந்தனர். இதனை அறிந்த விநாயகர் விஷத்திற்கு விஷம் கொடுத்து நீக்குவதுபோல, வஞ்சகனை வஞ்சனையாலேயே கொல்லவேண்டும் என எண்ணிக் கிணற்றில் குதித்தார். விநாயகர் நெடுநேரம் வெளிவரவேயில்லை. மண்டூகன் விநாயகர் இறந்தார் என்று எண்ணி மகிழ்ச்சியுடன் கிணற்றைவிட்டு உண்மை வடிவுடன் வெளியேறினன். கூபனும் அசுர வடிவுடன் வெளிவந்தான். யார் விநாயகரைக்கொன்றது என்ற வகையில் அவர்களுக்குள் சண்டைமூண்டது. இருவரும் சண்டையிட்டுக்கொண்டு மடிந்தனர்.

அம்பன், அந்தகன், துங்கன் வதம்: அந்தகன் இருளாயும், அம்பன் நீராயும், துங்கன் மலையாயும் காசிநகரைக் கணபதியுடன் அழிக்கக் காத்திருந்தனர். விநாயகர் பெரிய பறவையின் வடிவுகொண்டு சிறகால் நீரைத்தடுத்தும், மூக்கினலகால் மலையைப் பிளந்தும், மேனியொளியால் இருளை ஒட்டியும் நகரைக் காத்தனர். அம்மூவரும் அழிந்தனர்.

சூரன், சபலன் வதம்: ஒருநாள் விநாயகப்பெருமான் சிவிகைமீது ஏறி உலாப்போந்தார். அவரைக் கொல்லக்கருதி, இந்த இரு அசுரர்களும் பெரிய ஒலிசெய்தனர். விநாயகப் பெருமானைச் சூழ இருந்தவர் எல்லோரும் மூர்ச்சையாயினர். விநாயகர் இவர்களைக் கரங்களாற்பற்றிச் சுழற்றினர். அவர்கள் அஞ்சி அடைக்கலம் புகுந்தனர். அருள் வழங்கினர்.

வியாக்ரன் வதம்: மயூரேசவிநாயகர் பிரமகுண்டக் கரையிலிருந்து முனிவர்களுக்கு உபதேசம் செய்கின்ற காலத்து ஜடாபின்னன் என்னும் அசுரன் புலி உருவந்தாங்கி, முனிவர்களைக் கொல்லவந்தான். கார்க்கிய முனிவருடைய வேண்டுகோளின்வண்ணம் விநாயகர் தாமும் ஒரு பெரும்புலியாகி அவனேடு பொருதுவென்றூர்.

மங்களாசுரன் வதம்: மயூரேச விநாயகருடைய பிள்ளைப் பருவத்தில் மங்களன் என்னும் அசுரன், காட்டுப்பன்றியாகி முனி குமாரர்களைத் துரத்தினன். விநாயகர் அவ்வசுரனைப் பிடித்துப் பல்லைப் பிடுங்கியும், காலால் உதைத்தும் வதைத்தனர்.

கமலாசுரன் வதம்; மயூரேச விநாயகர் மயில்வாகனத்தில் ஆரோகணித்து, சிவபெருமானேடும் பார்வதி தேவியாரோடும்

Koviloor Digital Library

வானவழியாகச் சென்றனர். அப்போது கமலன் என்னும் அசுரன் ஆயுதபாணியாய் முனிவர்களையும் தேவர்களையும் எதிர்த்துப் பொருதனன். இதனையறிந்த சிவபெருமான் சூலம் ஒன்றை விநாயகருக்கு அளித்து, அவனை வெல்லுக எனப் பணித்தனர். விநாயகர் அச்சூலத்தையேவி, அவன் தலையைப் பிளந்து வென்றனர்.

பிரமதை வதம்: பிரமதா என்னும் அசுரப்பெண் ஒருத்தி, அதிதி வடிவத்தோடு, காசி மன்னனைக்கண்டு, 'என்மகன் மகோற்கட விநாயகன் எங்கே? அவனை அழைத்துத் தருக' என வேண்டிக்கொண்டாள். அரசனும் அவ்வாறே விநாயகரை அழைத்து முன் நிறுத்தினுன். அன்னையாய்வந்த அரக்கி அவரைத் தம் மடிமீது கிடத்திக்கொண்டாள். விநாயகர் அவளை விளையாட்டாகவே உதைத்துக் கொன்ருர்.

துராசாரன் வதம்: பத்மாசுரன் மகனுகிய துராசாரன் காசியை ஆண்டுவந்தான். தேவர்கள் அவனை அழிக்கக்கருதி, கேதாரக் கட்டத்தை அடைந்து உமாதேவியாரை நோக்கித் தவஞ்செய்தனர். அம்மையின் முகத்திலிருந்து விநாயகப் பெருமான் வெளிப்பட்டார். அம்மையளித்த சிங்கவாகனத்தில் ஏறிக்கொண்டு வக்கிரதுண்டர் என்னும் பெயரோடு போருக்குச் சென்ருர். அசுரனும் பல மாயவடிவங்கொண்டு பொருதான். விநாயகரும் பல வடிவங்கொண்டு அவன் மாயத்தை அழித்தனர். அவன் தலையைப் பலமுறை யறுத்தனர். மீளமீள அவன் உயிர்பெற்று எழுவதையறிந்து விசுவரூபங்கொண்டு திருவடியால் தேய்த்துக் கொன்ருர். செருக்கிழந்த அவன் காசிநகரின் காவற்பூதமாயினன்.

தேவாந்தகன் வதம்: நராந்தகன் தம்பியான தேவாந்தகன் தன் அண்ணனை அழித்த விநாயகர்மேற் பழிதீர்த்துக் கொள்ளச் சண்டையிட வந்தான். விநாயகருடைய தேவிமார்களாகிய சித்தி புத்திகளிருவரில், சித்திதேவியார் படைகளைப்படைத்து அவன்மேல் ஏவினுர். அவைகள் யாவும் பயனற்றுப்போயின. விநாயகர் 'இறைவன் கொடுத்த வரத்தின் மேன்மை இது' என்று எண்ணி, தன் கொம்பை எடுத்து அவன்மேற் செலுத்திக் கொன்றனர்.

கணன் வதம்: அபிஜித் என்பவனுக்கும், குணவதி என்பவளுக்கும் பிறந்த பிள்ளை கணன் என்னும் அசுரன்.

Koviloor Digital Library

அவன் வேட்டையாடச்சென்றகாலத்துக் காட்டில் கபில முனிவர் சிந்தாமணியின் உதவியால் பெருவிருந்தளித்தார். அதன் பெருமையை நேரில் அறிந்துகொண்ட கணன் கபில ரிடமிருந்து அதனைப் பிடுங்கிக்கொண்டு வந்து விட்டான். கபிலர் விநாயகரை நோக்கித் தவஞ்செய்தார். விநாயகர் பாசத்தால் அவன் தலையை யறுத்து அனைவரையும் பாது காத்தனர்.

மூஷிக வாகன வரலாறு: இந்திர சபையில் வாம தேவரை அவமதித்த கிரௌஞ்சன் என்னும் கந்தருவன் அவர் சாபத்தால் பெரிய எலியாயினன். பராசரமுனிவரின் ஆச்சிர மத்தைப் பாழ்படுத்தினன். பராசரர் விநாயகரை வேண்டிக் கொண்டார். விநாயகர் ஆகுவாகிய அதனை வாகனமாக் கொண்டு அடக்கியாண்டார்.

எமனையடித்த வரலாறு: மயூரேச விநாயகர் ஒருநாள் முனிகுமாரர்களுடன் குளக்கரைக்கு விளையாடச் சென்றார். அங்கே முனிவர்கள் ஞானோபதேசம் செய்தருளும்படி வேண்டிக்கொண்டனர். விநாயகர் பர்ணசாலைக்குள் அவ் வாறே அவர்களுக்கு ஞானோபதேசம் செய்துகொண்டிருந் தனர். முனிகுமாரர்கள் வெளியே விளையாடிக்கொண்டிருந் தனர். ஒரு 'காட்டுப்பூனை அவர்களை வெருட்டியது. முனி குமாரர்கள் நெடுந்தூரம் ஓடிக் களைத்துப்போயினர். அதனால் வடக்கே தலைவைத்துக்கொண்டு உறங்கிப் போனார்கள். அதனைப் பெரிய அவமதிப்பாக எண்ணிய எமன், அவர்களைப் பிடித்துவரத் தூதர்களுக்கு ஆணையிட்டான். அவர்களும் அவ்வாறே செய்தனர். முனிவர்கள் மக்களையிழந்தமையால் வருந்தினர். விநாயகர் மயில்வாகனத்தில் ஏறிச்சென்று எமனை உதைத்து அடக்கி அவர்கள் அனைவரையும் மீட்டுக் கொடுத்தனர்.

அனலாசுரன் வதம்: யமன் மகனாகிய அனலாசுரன் அனைவரையும் விழுங்கி ஆரவாரித்தான். அதனைக்கண்டு அஞ் சிய முனிவர்கள் விநாயகப் பெருமானை வேண்டிக்கொண் டனர். விநாயகர் விசுவரூபமெடுத்து அவனை விழுங்கி, பண்டு போல் உருவர்தாங்கி நின்றார். அனைவரும் விநாயகப்பெரு மானது அளவிலாற்றலைக் கண்டு விம்மிதமுற்றனர்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

சிந்து வதம்: உக்கிரை என்னும் அசுரப் பெண்ணுக்குச் சூரியன் சேர்க்கையாற் பிறந்தவன் சிந்து என்னும் அசுரன். அவன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து வரம் பல பெற்றான். அதனால் அமரர் யாவரையும் வதைத்துவந்தான். தேவர்கள் அவனது கொடுமைக்கு ஆற்றாது விநாயகரை வேண்டிக்கொண்டனர். விநாயகர் போர்முறைப்படி அந்த அசுரனுக்குத் தூது அனுப்பித் திருந்துமாறு பணித்தார். அப் படியும் அவன் கேளாமையால், படை எடுத்துச்சென்று அவனைப் பரசினால்வென்றார். தேவர்களைச் சிறைமீட்டார்.

சிந்தூரன் வதம்: சிந்தூரன் என்னும் அசுரன் பிரம தேவனது கொட்டாவியிற் பிறந்தவன். பிரமனிடம் பெற்ற வரத்தால் எல்லாரையும் வருத்திவந்தான் முனிவர்களுடைய வேண்டுகோளின் வண்ணம் விநாயகர் விசுவரூபம் எடுத்துச் சிந்தூரனைப் பிடித்துக் கைகளாலேயே கசக்கிப் பிழிந்தார். அந்த அசுரனுடைய உதிரத்தை வெற்றிச் சின்னமாக நெற்றி யிற் பொட்டிட்டுக்கொண்டார்.

வரலாறுகளால் அறியப்பெறும் உண்மைகள் :

வரலாறுகள் பலவாக ஒன்றோடொன்று ஒவ்வாதனவாக இருப்பதால் இன்று அவற்றைப்பற்றிச் சிலர் ஐயங்கொள் கின்றனர். முன்னர் காட்டியவண்ணம் இவ்வரலாறுகளின் அடிப்படைத் தத்துவங்களை ஆராயின் ஐயம் ஒழியும் என்பது உறுதி. மக்களுக்கு வரும் இடையூறுகள், ஓடுகின்ற தேருக் குப்போட்ட முட்டுக்கட்டைகள்போல; முட்டுக்கட்டை ஓட்டத்தைத் தடுப்பதால் தேருக்கு இடையூறு செய்வன போல் தோன்றலாம். உண்மையில் அவை வேகத்தில் தேர் எங்காவது போய் வீழ்ந்து விடாதபடி ஒதுங்கிப் போகாதபடி காக்கப் பயன்படுவதை யாவரும் அறிவர். அதுபோல் வாழ்க் கையில் வரும் இடையூறுகளும் நம்முடைய ஆணவத் தடிப்பை அகற்றி நாம் செம்மைநெறியில் செல்லத் துணை செய்வன.

அத்தகைய இடையூறுகள் யாரால் — எக்காலத்து — எவ் வளவு உண்டாகும் என அறிய இயலாது. விநாயகர் இடையூறுகளுக்கெல்லாந் தலைவராக — அவற்றை அடக்கி ஆள்பவராக — அவைகள் அன்பர்களைச் சென்று பற்றாத

Koviloor Digital Library

வண்ணம் தடுப்பவராக இருந்தும், அவரையே எத்தனை வகைகளால் வந்துசேர்ந்தன என்பதை இந்த வரலாறுகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. விநாயகருடைய பகைவர் கிளியாக, செவிலித்தாயாக, நெந்நாயாக, முதலையாக, கழுகாக, கழுதையாக, எலியாக, முனிகுமாரனாக, அழகியாக, ஆமையாக, புயலாக, இடியாக எல்லாம் வந்தனர். விநாயகர் அவற்றை வென்றார் என்ற வரலாறு மக்களுக்கு வரும் இடையூறுகள் இன்னின்ன வழியில் வரும்; அவற்றை வெல்ல, அவற்றை வென்றவரையன்றி வேறு யாரையுந்துணையாகக் கொள்ளின் இயலாது என்ற உறுதியையும் நம்பிக்கையையும் உண்டாக்க வந்தன. அங்ஙனம் உண்டான நம்பிக்கையை, இராவணனைப் பந்தாடினார், அசுரர்களைவென்றார் என்ற வரலாறுகள் வேர் கொள்ளச்செய்கின்றன. அவர் அளவில்லாத ஆற்றலுடையவர் என்பதை விளக்கவந்தன. மேல்வரும் வரலாறுகள் அன்பர்கள் எத்தகைய பாவிகளாயினும் வழிபாட்டில் ஊன்றி நிற்பார்களாயின், அவர்கள் எய்தாத இன்பப்பேறு இல்லை என்பதை விளக்கவந்தன. எல்லாங்கூடி இறைவன் அளவிலாற்றல் உடையவன், பெருங் கருணைக்கடல், அவனைச் சிறுபொழுது வழிபட்டாலும் பெரும்பயன் விளையும் என்ற உண்மையைப் புலப்படுத்த வந்தனவே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் — விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

— கபிலதேவநாயனார்.

Koviloor Digital Library

வழிப்பட்டவர்களும் பெற்ற பயனும்

சோமகாந்தன் என்னும் அரசன் பிருகு முனிவர்பால் விநாயக மந்திரத்தை உபதேசங்கேட்டு, வழிபட்டுக் குட்ட நோய் நீங்கப்பெற்றான்; இறுதியில் சாருபமுத்தியையும் பெற்றான்.

வியாசர் விநாயகருடைய ஏகாக்ஷர மந்திரத்தைத் தியானித்து, உலகம் உய்யப் பதினெட்டுப்புராணங்களையும் ஆக்கித் தந்தனர். தட்சன் முத்கலமுனிவர் உபதேசப்படியே கணேசரை வழிபட்டு, சிவநிந்தைசெய்த பாவத்தையும், வீர பத்திரக்கடவுளால் அடைந்த பலதுன்பங்களையும் போக்கிக் கொண்டான்.

பிரமன், விநாயகரை வழிபடாது சிருஷ்டிக்கத் தொடங் கவே. படைத்தவையாவும் பேயும் பிசாசுமாயின. துன்பம் விளைத்தன. அதுகண்டு அஞ்சிய பிரமன் கணபதியின் ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்தான். அவர் வெளிப்பட்டுச் சித்தி புத்திகளை உபாசிக்கத் திருவாய்மலர்ந்தார். அவனும் அவ் வண்ணமே செய்து, அவர்களைத் தமது புத்திரிகளாகப் பெறும் பேறுபெற்றுப் படைப்புத்தொழில் கைவரப்பெற்றான். தமது புத்திரிகளை மணந்து கொள்ளும்வண்ணம் விநாயகரை வேண்டினான். விநாயகரும் மணந்து கொண்டனர்.

மது கைடவர்களால் வருந்திய விஷ்ணு, சிவபெருமானிடம் விநாயக சடாக்ஷரமந்திரத்தை உபதேசம் பெற்று, அவர்களை வெல்லும் ஆற்றலைப் பெற்றார்.

வல்லாளன் என்னும் செட்டி, விளையாட்டாகக் கல்லைக் கணபதியாகப் பாவித்து வழிபட்டான், ஊரவர்கள் அவனுக் குப் பல துன்பங்களைச் செய்தனர். விநாயகர் அவனைக் காத்து அருள்புரிந்தார்.

கற்கன் என்னும் அரசகுமாரன் குட்டநோயால் வருந் தினான். முத்கல முனிவரிடம் கணபதி ஏகாக்ஷரமந்திரத்தைப்

Koviloor Digital Library

பெற்றுத் தியானித்து. நோய் நீங்கி உய்ந்தான், கவுண்டின்ய நகரத்திற்குக் காவலனும் ஆனுன்.

விதர்ப்பதேசத்து மன்னனுகிய விமராசன் விநாயகரின் ஏகாக்ஷர மந்திரத்தைச் செபித்து, ருக்மாங்கதன் என்னும் பிள்ளையைப் பெற்று மகிழ்ந்தான். ருக்மாங்கதன் வேட்டையாடச் சென்றபோது கவிமுனிவனின் மனைவி முகுந்தையால் காதலிக்கப்பட்டான். அதற்கு ருக்குமாங்கதன் உடன்படாமையால் அவள் சபித்தாள். வெண்குட்டம் உண்டாயிற்று. நாரதர் உபதேசப்படி அவன் கதம்பநகரத்துக் கணேச குண்டத்தில் மூழ்கிச் சிந்தாமணிவிநாயகரை உபாசித்து நோய் நீங்கப்பெற்றுன். இறுதியில் சாலோக பதவியையும் பெற்றுன்.

இந்திரன் தனது தகாத செயலால் விளைந்த ஊன இந்திரியத்தை ஞானேந்திரியமாகப் பெற்றுன், விநாயகப் பெருமானுடைய சடாக்ஷரமந்திர செபத்தால் கவிமுனிவன் மனைவியாகிய முகுந்தையென்பவளுக்கும் இந்திரனுக்கும் பிறந்த மகனுகிய கிரிச்சிரமன் என்பவன் தன் தந்தையாகிய கவி முனிவரிடம் கணபதிமந்திரத்தை உபதேசம்பெற்றுக் கல்வியிற் சிறந்தவனுக விளங்கினுன். அத்திரி மகரிஷியை வாதத்தில்வென்றுன். வரத கணபதியை அமைத்து வழிபட்டு முத்தி பெற்றுன்.

கிரிச்சிரமன் மகனுகிய பலி என்னும் அசுரன், கணேசரை வழிபட்டுத் தன்மனத்தாலேயே வச்சிரதந்தன், வீமகாயன், காளகூடன், சண்டன், பிரசண்டன் என்ற ஐந்து பிள்ளைகளை உண்டாக்கி, எல்லா உலகங்களையும் தன் ஆட்சியின்கீழ் இருத்தினுன். திரிபுரன் என்னும் பெயரோடு வங்காளத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். தேவர்கள், கணபதி அஷ்டாக்ஷர மந்திரத்தை நாரதரிடம் உபதேசம் பெற்று, அசுரரால் இழந்த தத்தம் பதவியை மீட்டும் பெற்றனர்.

விமலர் என்பவர் கணேச மகாமந்திரத்தைப் பெற்றுத் திரிபுரனைக்கொன்று வெற்றி வீரராக விளங்கினுர். உமா தேவியார் விநாயகசதுர்த்தி விரதத்தை மேற்கொண்டு உலகுய்யச் செய்யும் தமது எண்ணங்களை ஈடேற்றிக் கொண்டார்.

Koviloor Digital Library

ஏகாட்சர கணபதி.

திருவாவடுதுறையாதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

கர்த்தமன் என்னும் அரசன் பிருகுமுனிவர் வாயிலாக, 'தான் இப்போது நுகரும் அரச போகங்களுக்குக் காரணம் முற்பிறப்பில்செய்த கணபதி உபாஸனையே' என்று அறிந்து கொண்டான். அத்துடன். நில்லாது எடுத்த இந்தப் பிறவியிலும் சதுர்த்தி விரதம் அனுட்டித்து இருமைப் பயனையும் எய்தினுன்.

நளன் கௌசிகமுனிவரிடம் பிள்ளையார் மந்திரத்தை உபதேசம் பெற்று, விநாயகசதுர்த்தி விரதத்தை அநுட்டித்து, திக்விஜயம் செய்தான். கற்பொழுக்கங்குன்றுத சந்திராங்கத மன்னனிடம், சண்டைக்குவந்த அரக்கி ஒருத்தி, அரசன் கையைத் தீண்ட முயற்சித்தாள். அரசன் கூசி மடுவிற் பாய்ந் தான். அங்கு நாககன்னிகையர்கள் அவனை வரவேற்று உபசரித்தனர். காதலித்தனர். அரசன் உடன்படவில்லை. அதனுல் அவனை நெடுநாள் சுணங்கவைத்து விட்டனர். கணவனைக் காணுது வாடிய அவன் மனைவி இந்துமதி நாரத முனிவர்பால் கணபதி மந்திர உபதேசம்பெற்று, விநாயகரை முறைப்படி வழிபட்டாள். விநாயகர் அருளால் நாககன்னிகை யர் மனம் இரங்கினர். அவனை விடுதலைசெய்தனர். கணவனை யடைந்த இந்துமதி களிகூர்ந்தாள்.

முருகன் கிருஷ்ணையாற்றின் வடகரையிலுள்ள வனத்தில் விநாயகரை வழிபட்டு. அவரருளால் மயில் வாகனத்தையும், பலவரங்களையும் பெற்றுர். அவ்வனத்தையே மயூரேசம் என்னுந்தலமாக அமைத்து இலக்ஷ விநாயகர் என்னும் மூர்த்தியைப் பிரதிட்டைசெய்து வழிபட்டுச் சூரபன்மனுதி யரை வென்றுர்.

மன்மதன், சிவபெருமானிடம் பிள்ளையாருடைய ஏகாக்ஷர மந்திர உபதேசம் பெற்று, விநாயகர் துணையால், விஷ்ணு கிருஷ்ணனுகத் தோன்றிய காலத்து, அவருக்கு மகனுகப் பிறந்து பிரத்யும்நன் என்னும் பெயரோடு உருவங்கொண்டு விளங்கினுன்.

கிருஷ்ணன் மனைவியாகிய ருக்மணிதேவி கணேச உபாஸனை யால், சம்பராசுரனை வென்று, பிரத்யும்நனை மீட்டாள். ரதிதேவி யின் அவதாரமான சம்பரன் மகளைப் பிரத்யும்நனுக்கு மணம் புரிந்தாள். தன் அநுமதியின்றித் தன்மகளைக் காதலித்துக் கலந்திருந்த அநிருத்தனைப் பாணுசுரன் சிறையிட்டான்.

Koviloor Digital Library

பிரத்யும்னன் விநாயகரை வழிபட்டுச் சதுர்த்திவிரதம் இருந்து அநிருத்தனை மீட்டான். மருமகளாகிய உஷாவையும் அழைத்து வந்தான்.

ஆதிசேஷன் நாரதரது உபதேசப்படி, சதுர்த்திவிரதம் இருந்து அவரருளால், ஐந்தலைப்பாம்பாகி அரன் முடியில் இருக்கவும், ஆயிரந்தலைப் பாம்பாக அவனியைத் தாங்கவும்; ஒருதலையோடு விநாயகருக்கு உதரபந்தனமாக இருக்கவும் வரம்பெற்றான். விப்பிரதன் என்னும் வேடன் முற்கல முனிவரிடம் கணேசமந்திர உபதேசம்பெற்று, ஆயிரவருஷம் தியானித்து, புருசுண்டி என்னும் பெயரோடு விநாயகரையே ஆசாரியராகக்கொண்டு ஞானோபதேசம் பெற்று முத்தி யடைந்தான். அவன் அநுட்டித்த விரதம் சங்கடஹர சதுர்த்தி விரதம். கிருதவீரியனும் அவ்விரதத்தை யநுட்டித்து அத்திரி முனிவரிடம் உபதேசம்பெற்று, புத்திரப்பேறு எய்தி மகிழ்ந் தான்.

கார்த்தவீரியன் என்னும் அரசன் தத்தாத்திரேய முனிவ ரிடம் கணேசமந்திர உபதேசம்பெற்று உடற்குறை நீங்கி, ஆயிரம் கைகளையும். அதற்கேற்ற வலிமையையும் பெற்றான். இவன் பிரதிட்டை செய்த மூர்த்தி பிரவாள விநாயகர். இந்த விநாயகரை வழிபட்டே, ஆதிசேடன் வலிமை வாய்க்கப் பெற்றான். இராவணன் இலங்காதிபத்யம் பெற்றான். பாண்ட வர்கள் துரியோதனாதியரை வென்றனர். அங்காரகன் நவக்கிர கங்களில் ஒன்றானான். சந்திரன் களங்கம் நீங்கப்பெற்றான். மதசூதனன் என்னும் அந்தணனும், சுலபன் என்னும் அரசனும், சுமித்திராதேவி என்னும் அரசியும் தம்முள் ஒருவரை யொருவர் சபித்துக்கொண்டு கழுதையாகவும், எருதாகவும், புலைச்சியாகவும் ஆயினர். தம்மை அறியாமலே அறுகைச் சுவைத்தும், பறித்தும் விநாயகர்மேல் வீழ்த்தினர். அதனால் மகிழ்ந்த விநாயகர் அனைவர்க்கும் அருள்பாலித்தனர்

ஜனகன் அகம்பிரமவாதியாக இருந்தமையால், நாரதரை அவமதித்தான். நாரதர்வேண்டுகோளுக்கு இரங்கி, விநாயகர் தொழுநோய் கொண்ட அந்தணனாக எழுந்தருளி, அவன் செருக்கை அடக்கினார். உண்மை யுணர்ந்து ஜீவன் முக்த னானான். திரிசகன் என்னும் ஏழைப் பிராமணன் கணபதியை உபாசித்துவந்தான். கணேசர் அவனுடைய அன்பை உலகிற்கு

Koviloor Digital Library

எடுத்துக்காட்டத் தொழுநோய்கொண்ட அந்தணனுக அவன் வீட்டிற்கு எழுந்தருளினுர். அந்தணன் மனைவியாகிய விரஜை என்பவள், தன்வீட்டில் உணவுப்பொருள் ஒன்றுமில்லாமை யால் அறுகைக் கிள்ளிக்கொடுத்து விருந்து பேணினுள். அதனை உண்டுகளித்த விநாயகப்பெருமான், தன் உண்மை வடிவத்தைக் காட்டி மறைந்தனர். கவுண்டின்ய முனிவர் தினந்தோறும் பதினுயிரம் அறுகுவீதம் தேடி அருச்சித்து வந்தனர். அதனைக் கண்ட - பசியாலும் வறுமையாலும் வாடிய ஆசிரியை என்னும் முனிவர் பத்தினி இந்த விநாயகப் பெருமான் தம்மை ஒரு அறுகுகொண்டு பூசித்தவர்க்குப் பெருஞ்செல்வம் அளிக்கின்றுரே ? பதினுயிரம் அறுகுசாத்தும் நம்மை ஏன் இப்படித் தவிக்கவிட்டிருக்கிறுர் என்று வருந் தினுள். இதனையறிந்த கவுண்டின்ய முனிவர் ஓரறுகை எடுத்துக்கொடுத்து. 'இதனைக் கொண்டுபோய் இந்திரனிடம் கொடு; வேண்டிய பொன் தருவான்' என்றுர். ஆசிரியை அவ்வாறே செய்தனள். அறுகைப்பெற்ற இந்திரனும், குபேர னும், திரிமூர்த்திகளும் தங்கள் செல்வங்களையெல்லாம் அறுகின் எடைக்கு இட்டும் ஒத்துவராமையால் தாங்களே ஏறியிருந்து அறுகின் பெருமையை உலகிற்கு எடுத்துக் காட்டினுர்கள்.

பஞ்சமா பாதகனுகிய சாம்பன் என்னும் அரசன் வேட் டைக்குப்போன இடத்தில் வரதகணபதியின் சந்நிதியில் நுழைந்தான். காட்டில் விளையாட்டாகப் பறித்துவந்த காய் கறி கனிகளைக்கொண்டு குறும்பாக நிவேதித்தான். அவன் இறந்த பிறகு மறு பிறப்பில் 'வீமன்' என்னும் வேடனுனுன். ஒருநாள் வேட்டைக்குச் சென்றவிடத்து ஒரு பிராமணனைக் கொன்று வழிப்பறிசெய்தான். அதனுல் அவனைப் பிரமஹத்தி தொடர்ந்தது. அஞ்சியோடிய அவன் ஒரு வன்னி மரத்தின் மீது ஏறினுன். தூக்கம் வராமலிருக்கத் தழைகளைப்பறித்துக் கீழே போட்டுக்கொண்டிருந்தான். அதன் அடியில் ஒரு விநாயகர் திருவுருவம் இருந்தது. அதன்மேல் வன்னிப் பத்தி ரங்கள் விழுந்தன. புத்தியொடு படாமலே விநாயகரைப் பூசித்த புண்ணியத்தால் சாலோகபதவி பெற்றுன்.

விஷ்ணு வன்னிவிநாயகரைப் பூசித்து இரணியகசிபுவை வென்றுர். வாமன கணபதியைப் பூசித்து மாபலியை வென்றுர். சீர்த்தி என்னும் அரசி விநாயக உபாஸனையால்

Koviloor Digital Library

தன் கணவனுகிய பிரியவிருதன் அன்பையும் பெற்று விநாயகரை வன்னிப் பத்திரத்தால் பூசித்து க்ஷிப்ரப்பிரசாதன் என்னும் மகனையும் பெற்ருள். ஒருமுறை பொருமைகொண்ட இவனது மாற்ருள் இக்குழந்தைக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிட்டாள். சிர்த்தி மிக வருந்தி. கிரிச்சிரம முனிவருடைய ஆணையின்வண்ணம் ஒருநாட் பூசையைத் தானம் செய்து தன் மகனுக்கு உயிருட்டிஞள். சமி என்பவள் அரவ முனிவருக்கும் சுவேதைக்கும் பிறந்த பெண். மந்தாரன் தௌமிய முனிவரின் புத்திரன். இருவருக்கும் மணமாயிற்று. மன மகிழ்ச்சியுடன் இருவரும் மணமகனில்லிற்குச் செல்கின்ருர்கள். வழியில் துதிக்கையுடனும் தொந்திவயிற்றுடனும் புருசுண்டிமுனிவர் வந்தார். அவரைக்கண்டு அவர்கள் நகைத்தார்கள். முனிவர் அவர்களிருவரையும் மரமாகச் சபித்தனர். அதனை உணர்ந்த அரவமுனிவரும் சுவேதையும் கணபதியை நோக்கித் தவஞ்செய்தனர். கணேசர் வெளிப்பட்டு அவர்கள் மரமாகவே இருந்து எல்லாச் சிறப்பையும் எய்துக; அம்மரங்களின் பத்திர புஷ்பங்களே எமக்கு விருப்பமானவை என்று அருள்செய்தனர்.

பிரமன் விநாயகரை முதலில் வழிபடாமல் காயத்ரிதேவியுடன் ஒரு யாகம்செய்தான். அதனுல் யாகம் தடைபட்டது. சிவபெருமானுல் தெரிந்துகொண்ட பிரமன் வன்னியிலையைக் கொண்டு விநாயகரை வழிபட்டான். யாகம் இடையூறின்றி நிறைவெய்தியது. க்ஷிப்ரப்பிரசாதன் என்னும் அரசன் வன்னியிலையைக்கொண்டு விநாயகரை வழிபட்டு அரசாட்சி முதலிய எல்லா நன்மைகளையும் எய்திஞன்.

சுந்தரி என்னும் அரசகுமாரி ஒருத்தி, தீயசெய்கைகளாற் புலைச்சியாயினள். விநாயக சதுர்த்தியில், அடியார்கள் உண்டெறிந்த இலைகளில் இருந்த உணவையுண்டு, விநாயக நாமத்தை ஓதக் கேட்டுக்கொண்டிருந்த புண்ணியத்தால் தெய்வவுருப் பெற்ருள். சூரசேனன் என்னும் அரசன் இந்திரன் வாயிலாகக் கேட்டு சங்கடஹர சதுர்த்தி விரதத்தை அநுட்டித்துச் சாயுச்சியமுத்தி பெற்ருன். தாய்க்கொலை செய்த புதன் என்னும் பிராமணன், தனது தகாத செயல்களால் குட்டநோயுற்று வருந்திஞன். சூரசேன மகாராசா இதனைக் கண்டு இரக்கப்பட்டு, கணபதிமந்திரத்தை உபதேசித்து,

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

சங்கடஹர சதுர்த்தி விரதத்தை அநுட்டிக்கச்செய்தார். அநுட்டித்த அவன் நோய்நீங்கிச் சிலகாலம் வாழ்ந்தான். பின் சாலோகம் பெற்றான்.

பரசுராமன் பரமசிவனைக் குருவாக அடைந்து கணேச மந்திரமாகிய ஆறெழுத்தை உபதேசம்பெற்றுப் பகைவென்று தானடைந்த அரசியலை அந்தணர்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தான். சிறந்த சிவயோகியானுன், காசியபர் விநாயகரை வழிபட்டுப் படைப்பு வன்மையுடன், அவரையே புதல்வராகவும் பெற்று மகிழ்ந்தார்.

இவ்வண்ணம் புராண வரலாறுகள் பல விநாயகபுராணத்திலும், காஞ்சிப் புராணத்திலும், கந்த புராணத்திலும், வாமன, வராக, பாத்ம புராணங்களிலும் விரிவாகக் கூறப் பெற்றுள்ளன.

கனியா நினைவொடு நாடொறும்
காதற் படும் அடியார்க்(கு)
இனியன் இனியொரு இன்னுங்
கிலம்எவ ரும்வணங்கும்
பணிவெண் பிறைநறுங் கொன்றை
சடைப்பலி நேரியற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல்
யானை முகத்தவனே.

—கபிலதேவநாயனுர்.

Koviloor Digital Library

சிறந்த தலங்கள்

இறைவன் எங்கும் விளங்கினாலும் திருக்கோயில்களில் மிக விளக்கம் பெற்றுள்ளார். பசுவின் உடம்பெங்கும் பால் பரவியிருப்பினும் முலையின் வழியாகவே வெளிப்படுகின்றது. அதுபோல விநாயகர் எங்கும் எழுந்தருளியிருந்தாலும், சில தலங்களில் அவருடைய திருவருட்பொலிவு சிறந்து தோன்றுகின்றது. அத்தலங்களையும் அவைகளிலுள்ள விநாயகர் திருநாமங்களையும் முடிந்தவரையில் வரலாற்றையும் தெரிவிப்போம்.

திருவாவடுதுறை	துணைவந்த விநாயகர். அழகிய விநாயகர். சிவப்பிரகாச விநாயகர்.
திருநறையூர்ச்சித்தீச்சரம் : திருவிடைமருதூர் :	ஆண்ட விநாயகர்.
திருவையாறு :	ஆதி விநாயகர்.
விருத்தாசலம் ;	ஆழத்துப் பிள்ளையார்.
திருச்சிராப்பள்ளி :	உச்சிப்பிள்ளையார்.
குடந்தைக் கீழ்க்கோட்டம் : நாகேஸ்வரசுவாமிகோவில்	கங்கைக்கணபதி.
திருக்காருயில் :	கடுக்காய் விநாயகர்.
திருக்கச்சூர் :	தாலமூல விநாயகர். கருக்கடி விநாயகர்.
திருக்கடவூர் :	கள்ளவாரணப்பிள்ளையார்.
கடிக்குளம் : திருக்கருகாவூர் : சிதம்பரம் :	கற்பக விநாயகர்.
திருமுருகன்பூண்டி :	கூப்பிடு பிள்ளையார்.
திருநாட்டியத்தான்குடி :	கைகாட்டி வியாயகர்.

Koviloor Digital Library

திருக்கோட்டையூர் :	கோடி விநாயகர்.
திருமறைக்காடு :	சிந்தாமணி விநாயகர். வீரகத்தி விநாயகர்.
கீழ்வேளூர் : திருமழபாடி :	சுந்தர கணபதி,
திருவுசாத்தானம் ;	சூதவனப் பிள்ளையார்.
அன்பிலாலந்துறை :	செவிசாய்த்த விநாயகர்.
திருநள்ளாறு :	சொர்ண விநாயகர்.
சிதம்பரம் :	திருமுறைசுட்டிய விநாயகர். கற்பகப் பிள்ளையார். (க்ஷேத்ரபாலப் பிள்ளையார்) முக்குறுணி விநாயகர். (முகக்கட்டண விநாயகர்.) உச்சிட்ட விநாயகர். நரமுகவிநாயகர்.
திருப்பனையூர் :	துணையிருந்த விநாயகர்.
நாகபட்டினம் :	மாவடிப் பிள்ளையார். நாகாபரணப் பிள்ளையார். பஞ்சமுக விநாயகர்.
திருஇன்னம்பர் :	நிருத்தன விநாயகர்.
திருவீழிமிழலை :	படிக்காசு விநாயகர்.
திருப்புறம்பயம் :	தேன் விநாயகர். பிரளயங்காத்த பிள்ளையார்.
திருமாகறல் :	பொய்யா விநாயகர்.
சீகாழி :	ஆபத்துக்காத்த விநாயகர்.
திருநாரையூர் : திருவெண்ணெய்நல்லூர் :	பொல்லாப் பிள்ளையார்,
அம்பல் :	சுட்டு விநாயகர்.

Koviloor Digital Library

திருவாரூர் :	மாற்றுரைத்த விநாயகர். வாதாபி விநாயகர்.
ஆலவாய் (மதுரை) சிதம்பரம் : மாயூரம் :	முக்குறுணிப் பிள்ளையார்.
வல்லம் :	வரசித்தி விநாயகர்.
திருக்களர் : காஞ்சிபுரம் : அத்திகிரி :	வலம்புரி விநாயகர் .
திருப்புகலூர் : திருச்செங்காட்டங்குடி : திருவாரூர் :	வாதாபி விநாயகர்.
காஞ்சிபுரம் .	விகடசக்கர விநாயகர்,
திருவலஞ்சுழி :	வெள்ளை விநாயகர்.
திருவேதிகுடி :	வேதப் பிள்ளையார்.
திருநல்லூர் :	சாளக்கிராம விநாயகர்.
திருந்துதேவன்குடி :	கர்க்கடக விநாயகர். (நண்டு பூசித்த விநாயகர்):
மயூரபுரம் :	மயூரேச விநாயகர்.
காசி :	துண்டி விநாயகர்.
மதுரை :	சித்தி விநாயகர்.
காளத்தி :	மஞ்சந்தி விநாயகர்.
மகாபலேஸ்வரம் (அல்லது) திருக்கோகர்ணம் :	மகாகணபதி.
செல்லக்கதிர்காமம் :	மாணிக்க விநாயகர்.

Koviloor Digital Library

திரயாக்ஷர கணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

பிற இடங்களில் :

எல்லோரா குகைகளில் உள்ள சித்திரங்களிலும் கணேசர் உருவம் காணப்படுகிறது. மேற்பரப்பில் கணேசர் ஓர் உருவை ஏந்தியிருப்பதுபோல எழுதப்பெற்றுளது. மற்ருெரு பக்கத்தில் சிவன் பார்வதி சித்திரங்கள் தீட்டப்பெற்றுள்ளன. ஜபல்பூர் பக்கம் உள்ள பீராகேட்டில் (Bhera ghat) கணேசர் பெண் வடிவம் ஒன்று உள்ளது. சுசீந்திரம் கோயிலிலும் ஒன்று உண்டு. இந்தியா முழுவதிலும் விளங்கும் பெண் வடிவம் இவை இரண்டுதாம். இது சஜானனி என வழங்கப்பெறுகிறது. திபேத்திலும் இத்தகைய வடிவம் இருப்பதாக அறியப்பெறுகின்றது *

தென்காசியில் லட்சுமி கணபதி வடிவம் ஒன்று இருக்கிறது. மிக அழகிய சிற்பம், விநாயகர் உருவம் எட்டுத் திருக்கரங்கள் உடையது. கம்போடியாவில் நிற்குங்கணபதி உருவம் ஒன்று இருக்கின்றது. அதன் மேல்நோக்கிய கரங்கள் இரண்டிலும் சங்கு சக்கரம் காணப்படுகிறது.

குஜராத்தில் குடைகோயிலில் உள்ள கணேசரை ஜைனர்களும் வணங்குகிருர்கள். பம்பாய் இந்திய வரலாற்று ஆராய்ச்சி நிலேயத்தில் செம்பாலியன்ற பிள்ளேயார் உருவங்கள் சில உள்ளன. அவை ஜைன வழிபாட்டாளரிடமிருந்து கொண்டுவரப்பெற்றவை. திருவாசியுட்பட எல்லாம் மிக அழகிய வேலேப்பாடுள்ளவை.

விநாயக வணக்கம் புத்தர்களிடமும் பரவியிருந்தது, 'கணபதி இருதயம்' என்ற மந்திரத்தை அவர்கள் உருவேற்றுவதும் உண்டு. அவர்கள் கணபதியை மூன்று கண்ணுேடு கூத்தாடும் நிலேயில் அமைத்துள்ளார்கள். புத்த கணபதிகளில் ஒன்று தலேயில் கரண்ட மகுடத்திற்குப் பதிலாகத் தலேப்பாகை கட்டியுள்ளது. இதனே மகா புருஷலட்சணம் என்று அவர்கள் பாராட்டுகிருர்கள். மகாயான புத்தர்கள் வாயிலாகப் பர்மா, ஸயாம், சம்பா (Champa) கம்போடியா, நேபால், திபேத், சைனு, துருக்கிஸ்தானம், கோடான் (Khotan), மங்கோலியா ஜப்பான்முதலிய இடங்களிலெல்லாம் பல நூற்ருண்டுகளுக்கு முன்னமேயே சித்திரமாக – சிற்பமாக

* Tamil Culture Vol. III No. 2 Page 182.

Koviloor Digital Library

விநாயகர் பரவியுள்ளனர். இந்த நூற்றுண்டிலும் அமெரிக்காவில் விவேகாநந்த அடிகள் விநாயகர் கோயிலைக்கட்டி அவர்களை வழிபடச் செய்துள்ள செய்தியை உலகம் நன்கறியும். ஜாவாத் தீவிலும். காந்தி சிங்கசாரி என்னும் இடத்தில் (Chandi Singasari) விநாயகர் உருவம் இருக்கின்றது.*

பர்மியமொழியில் கணபதி, 'மகாபிணி' என்றும், மங்கோலிய மொழியில் 'தோத்கார்' என்றும், 'அபுன்காகாம்' என்றும். திபேத்திய மொழியில் 'த்சோக்ப்ராக்' என்றும் கம்போடிய மொழியில் 'பிராஹ்கணேஷ்' என்றும், சீனமொழியில் 'க்வான்ஷிடியிக்' என்றும் ஜப்பானிய மொழியில் 'விணுயக்ஷா' என்றும் விநாயகர் வழங்கப்படுகிருர். அந்தந்த நாட்டு வழிபாட்டு முறைகளில் விநாயகர் சிவப்பு, பச்சை, வெள்ளை, செம்மஞ்சள் (orange) நிறங்களையுடையவராகவும் மூஷிகம் சிங்கம் இந்த வாகனங்களையுடையவராகவும் வர்ணிக்கப்படுகிருர். மகா நிர்வாணவேத கிரந்தத்தில் செங்குருதிபோன்ற நிறத்தையுடையவர் என்றும், துதிக்கையையுடையவர் என்றும் சொல்லப்பெற்றுள்ளது. விநாயகருடைய பிறப்பு வரலாற்றைப் பற்றிய குறிப்புக்கள் வெளிநாட்டுப் புராணங்களிலும் விசேடமாக விளக்கப்பட்டுள்ளன. பௌத்தபுராணம், விநாயகரை 'ஞானதேவன்' என்றும், 'மாயையை வென்றவன்' என்றும் சொல்லுகிறது. புத்தர், ஆனந்தன் என்ற தன்னுடைய மாணுக்கனுக்கு 'கணபதி ஹிருதயம்' என்னும் மந்திரத்தை உபதேசித்தார் என்றும் சொல்லப்பெறுகிறது. தாந்திரிக நூல்கள் இவரை முக்கண்ணராக வருணிக்கின்றன.

நாட்டுக்குநாடு விநாயகவடிவங்கள் வேறுபட்டுள்ளன. பம்பாயில் இரண்டு முகங்களோடும், ஜப்பானில் மூன்று முகங்களோடும், சீனுவில் நான்கு முகங்களோடும், நேபாளத்தில் ஐந்து முகங்களோடும் விநாயகர் வணங்கப்படுகிருர்.

உச்சிட்டகணபதி நாலு கையும் பசுமை நிறமும் உடையவராகவும், மகா கணபதியும், ஊர்த்துவ கணபதியும் ஆறுகையும் பசுமைநிறமும் உடையவராகவும்,பிங்களகணபதி ஆறுகையும் பிங்களநிறமும் உடையவராகவும், லட்சுமி கணபதி நாலு அல்லது எட்டுக் கைகளுடனும் சக்தியுடனும்

* Hindu Culture in greater India. Page 26.

Koviloor Digital Library

வெள்ளை நிறமும் உடையவராகவும் தியானிக்கப்படுகின்றார் என்று ஆனந்தவாணி என்னும் தெலுங்குப்பத்திரிகை தெரிவிக்கிறது.

இந்தியாவில் ஜான்ஸி ஜில்லாவில் 5-ம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற டேஹ்ரா கோயிலில் (Deogarh Temple) ஒரு விஷ்ணு உருவம் இருக்கிறது. அதன் இடப்பக்கம் உள்ள சுவரில் கணபதி உருவம் அமைந்துள்ளது. பூமாரா என்னும் இடத்தில் உள்ள கோயிலில் முக்கியமான இறைவன் கோயிலுக்குள்ளே தென்னந்திருவாசல்பக்கம் கணேசர், பிரமன் யமன், குபேரன், கார்த்திகேயன், காளையின்மேல் உள்ளசிவன். சூரியன், காமன், மகிஷாசுரமர்த்தனி இவர்களின் திருவுருவங்கள் செதுக்கப்பெற்றுள்ளன. இக்கோயிலும் 5 ம் நூற்றாண்டிற்கு முந்தியதே.[1]

மலையாளப் பகுதியில் 'கணபதி வட்டம்' என்ற ஒருபகுதி உண்டு. திப்பு படையெடுத்து வந்த காலத்து, கணபதி வட்டத்திலுள்ள விநாயகர் ஆலயத்தை யிடித்து விக்கிரகத்தையும் சின்னப்படுத்தினான். மக்கள் தங்கள் காவற்றெய்வத்தை இழந்துவிட்டோமே என்று மிகவருந்தினர்; திப்பு ஏதோ காரணத்தால் தன் பிழையையுணர்ந்து அக்கோயிலுக்குப் பெருவாரியான பொன்னையும், பூமியையும் தானஞ்செய்தான். இதனால் திப்புவுக்கு ஏதாவது தோல்வி முதலிய இடையூறுகள் உண்டாகியிருக்கவேண்டும் என்று எண்ணுகிறார்கள் அப்பக்கத்து மக்கள். அவர்கள் இன்றும் அதே விநாயகரையே வைத்து வழிபடுகிறார்கள். கணபதி வட்டத்தைச்சேர்ந்த நென்மேனி, கிடங்கல்நாடு, நூல்புழை முதலிய பத்துப் பன்னிரண்டுமைல் சுற்றளவிலுள்ள கிராமங்களில் அந்த விநாயகரின் அருள், இன்றும் அவர்களை நன்கு பாதுகாத்து வருவதாகவும் – அப்பெருமான் கண்கண்ட தெய்வமாக இருப்பதாகவும் மக்கள் நம்பிவருகிறார்கள்.[2]

கி. பி. 1121-ல் விஷ்ணுவர்த்தனனால் கட்டப்பெற்ற ஹொய்சலேஸ்வரர் கோயிலில் ஒரு நிருத்தகணபதி திருவுருவம் இருக்கிறது. அது மிக அழகிய வேலைப்பாடமைந்த உயிர்ச் சிற்பம்.[3]

---

1 The Gupta Empire Page 151.
2 Malabar Series – Wyanad - by C. Gopala Nair Page. 127–129.
3 Hindu Ichnography. Page 66.

Koviloor Digital Library

சிதம்பரத்தில் செங்கழுநீர்ப் பிள்ளையார் என்ற ஒன்று உண்டு. திப்புசுல்தான் காலத்தில் மகமதிய வீரர்கள் இவரது துதிக்கையை ஒடித்துவிட்டார்கள். கலகம் முடிந்ததும், ஊர்மக்கள் இவரது உருவத்தை அப்புறப்படுத்திவிட்டு வேறு உருவத்தைவைக்க முயற்சித்தனர். பிள்ளையார் அவர்கள் கனவில்தோன்றிக் 'கையொடிந்த உன் மகனை நீக்கிவிடுவாயோ? என்று கேட்டு மறைந்தனர். தங்கள் பிழையையுணர்ந்த மக்கள் அந்த எண்ணத்தைக் கைவிட்டனர் என்ற செவி வழிச் செய்தி வழங்கிவருகிறது. இவ்விநாயகரும் மிக வரத ராகப் போற்றப்பெறுகிறார். இந்தச் சந்நிதியும் கற்பக விநாயகர் சந்நிதியைப்போல மேற்குப் பார்த்திருப்பது தனிச் சிறப்பு.

யானை முகத்தான் பொருவிடையான் சேயழகார்
மான மணிவண்ணன் மாமருகன்—மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன்என்
உள்ளக் கருத்தின் உளன்.

—கபிலதேவநாயனார்.

Koviloor Digital Library

ஸ்ரீசித்திரகணபதி.

திருவாவடுதுறைஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிறந்த குறிப்புகள்

கிராம நலத்திற்காகக் கணபதி கோயில் ஒவ்வொரு கிராமத்திலும் இருப்பது இன்றியமையாதது.

சுக்கிரநீதியில் :

அபயம், வரதம், தாமரை, மோதகம் அமைந்த நான்கு திருக் கரங்களையுடைய உருவமே சாத்துவீக கணபதி என்று கூறப்பெற்றுள்ளது. யானை முகத்தினையும், மனித உடலினையும், தொங்குகின்ற செவியினையும், பருத்த வயிற்றினையும், அகன்று குறுகிப் பருத்த தோள்களையும், கைகால்களையும், பருத்த துதிக்கையினையும், முறிந்த இடதுபக்கத்தந்தத்தினையும். விருப்பமான வாகனத்தையும், இடப்பக்கத்தே சிறிது வளைந்த துதிக்கையையும், வெளிப்படாது மறைந்த அவயவசந்தி எலும்புகளையும் நரம்புகளையும் உடையதாகவும், எப்போதும் தனக்கு முன் பூசிக்கப்பெறுவது ஒன்றின்றித் தானே எல்லா வற்றிற்கும் முன்பு பூசிக்கப் பெறுவதாயும், கணபதியின் திருவுருவத்தை யமைக்க என்று தொடங்கி மிக விரிவாகவும், அழகாகவும் உருவம் அமைக்கும் முறைகளைப்பற்றி நன்கு கூறுகிறது. (பக்கம் 167 முதல் 179 முடிய).

அபிதானகோசத்தில் :

விநாயகர் பிறப்பு :- தேவர்களும், இருடிகளும் செய்யுங் காரியங்கள் இடையூறுகளால் தடைபட்டன. அவர்கள் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தனர். இவர்களுடைய இன்னலையுணர்ந்து கருணைகூர்ந்த சிவபெருமானிடமிருந்து ஓர் ஒளியுண்டாயிற்று. அதிலிருந்து ஒருபுத்திரர் தோன்றினர். அவர் மேனியின் ஒளி உமாதேவியின் கண்களையும் கூசச் செய்தது. அப்புதல்வனுக்கு யானைத்தலையும், பூதசரீரமும், தேவகரங்களும் பொருந்துக என்று அருள்வழங்கினள். அவ்வாறேயாயிற்று. சிவபெருமான் 'கணபதி' என்னும் திருநாமத்தையும், கணங்களுக்கெல்லாம் தலைமைப்பதவியையும் தந்தனர்.

முயற்சி கைகூடுதலும் கூடாமையும் ஊழின் வசத்தனவும் புத்தியின் வசத்தனவும் ஆக அமைந்துள்ளன.

Koviloor Digital Library

முயற்சி கைகூடாமையே விக்கினம் அல்லது இடையூறும். ஊழான் வரும் இடையூறு வந்தேதீரும். "ஊழின் பெருவலி யாவுள? மற்றொன்று, சூழினும் தான் முந்துறும்" என்பர் வள்ளுவர். 'எண்ணெயைத் தேய்க்கலாம் எழுத்தைத்தேய்க்க முடியுமா?' என்பது பழமொழி, ஆதலால் முற்செய் வினையால் வரும் இடையூறு வந்தே திரும். நுகர்ந்தே கழிக்கவேண்டும். புத்தியான் வரும் இடையூறுகளை, ஆன்றோர் உபதேசங்களாலும், தியானம் ஆசாரம் சிலம் இவற்றாலும் முன்னரேயறிந்து நீக்கிக்கொள்ளலாம். புத்திதத்துவத்திற்கு அதிதேவதை கணபதி, எல்லா உயிர்களிடத்தும் விளங்குகின்ற புத்திக்கெல்லாம் அவரே ஆதாரமானவர். அவரைத் தியானிக்காவிடின், புத்தி விரிதலும், உபாயந் தோன்றுதலும் இல்லையாம். ஆதலால் எடுத்த கருமம் இனிது முடியாது.

விநாயகர் தத்துவம்: யானைக்கு நினைவுவன்மை, காண்டல், கேட்டல், ஊறு, ஒன்றையும் ஒருகாலத்தும் மறவாமை, மிக்க வலிவுஉடைமை, அளப்பரும் சாந்தமுடைமை, இதஞ்செய்வார்க்கு வசமாய் உதவுவது ஆகிய இவை குணங்களாம். ஆதலால் இக்குணங்களெல்லாம் அமைந்த பெருமானுக்கும் யானைத்தலை அமைந்தது. முடிவும், அறிவும்-அதாவது சித்தியும் புத்தியும் விநாயகருக்குத் திருவடிகளாக அமைந்துள்ளன. அவருடைய தாழ்செவி சர்வஞ்ஞசத்தியையும், ஏகதந்தம் பரஞானத்தையும். ஒடிந்த தந்தம் அபயத்தையும், லம்போதரம் பொறுமையையும் அறிவிக்கும் அடையாளங்களாம். (பக்கம் 57-58.)

யோகசாத்திரங்களில்:

யோகநிலையில், ஆறாதாரங்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆஞ்ஞை என்பன. அவற்றுள் மூலாதாரம் பாலுணர்த்தும் அவயவத்திற்குக் கீழும், குதத்திற்கு மேலும் உள்ள பகுதி. அது அடுப்புக்கூட்டுப்போல முக்கோண வடிவாக இருப்பது. அதில் நான்கு இதழ்களோடுகூடிய தாமரை உள்ளது. அதன்நடுவில் அதிதெய்வமாக-குண்டலிசத்தியை நடத்துபவராக இருப்பவர் கணேசர். ஆதலால் இவர் மூலாதார கணபதி என்று வழங்கப்பெறுகின்றனர். மனித உடல் தோன்றுதொட்டது. அதன் ஆறு ஆதாரங்களும் - அவற்றின்

Koviloor Digital Library

அதிதேவதைகளும் அங்ஙனமே இயைந்து நம்மை இயக்கி நிற்பன என்பதில் ஐயமில்லை அல்லவா?

சோதிட நூல்களில் :

ஒவ்வொரு நக்ஷத்திரங்களுக்கும் அதிதெய்வங்களைச் சொல்லிக்கொண்டு வரும்போது, உத்திராட நக்ஷத்திரத்திற்கு விநாயகர் அதிதெய்வம் என்று சொல்லப்பெறுகிறது. வராகமிகிரர் இந்நக்ஷத்திரத்திற்கு விஸ்வதேவர் தெய்வம் என்கின்றார். விஸ்வதேவர் என்பது கணபதியையும் குறிக்கும் திருப்பெயராகலாம் என்பது சிலர் கருத்து.

பழமொழிகளில் :

நமது நாட்டில், மக்கள் மேற்கொள்ளும் சிலபழக்கங்கள், நடை நொடிகள், தெய்வவழிபாடுகள் எல்லாம் எவ்வளவுக்கெவ்வளவு பொது மக்கள் கருத்திற் குடிகொண்டிருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அது தொன்மையும் சிறப்பும் உடையன என்பது தெளிவு. அதிலும் மக்கள் பழமொழிகளில் கலந்துவிடுமானால் அதன் வியாபகத்தை விளம்பவும் வேண்டுமோ? அவ்வண்ணமே விநாயகரைப் பற்றிச் சில பழமொழிகள் வழங்குகின்றன, அவை:—

1. பிடித்து வைத்தால் பிள்ளையார்.
2. கணபதி பூசை கைம்மேற் பலன்.
3. அரசமரத்தைப் பிடித்த சனியன் அதனடியிலுள்ள பிள்ளையாரையும் பிடித்ததுபோல.
4. பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய்முடிந்தமாதிரி.
5. பிள்ளையார் குட்டியாயிற்று.

முதலிரண்டால், பிள்ளையார் திருவுரு எளிதிற் சமைக்குந்தன்மையது என்பதும், வழிபட்டால் பயன் இம்மையிலேயே எளிதிற் கிடைக்கும் என வழிபாட்டுச் சிறப்பும் வகுக்கப்பெறுகின்றன. மூன்றாவது முதலியவற்றால் ஒன்று நினைக்க—ஒன்றுதொடங்க அது வேறொன்றாய் விளைதற்கும், ஒன்றற்கு வரும்தீமை சார்ச்சியால் அதனை அடுத்துள்ளவற்றிற்கு வருதற்கும் எடுத்தாளப் பெறுவன. ஐந்தாவது காரியத் தொடக்கத்திற்குக் கையாளப் பெறுவது.

Koviloor Digital Library

வழிபாட்டுமுறை

திருவுருச் சமைக்க உதவும் பொருள்கள் :

கடவுள் உருவங்களைச் சமைக்கக் கல், மரம், செம்பு முதலிய உலோகப் பொருள்களையும், மண் முதலியவற்றையும் பயன்படுத்தலாம் என்று ஆகமங்கள் விதிக்கின்றன. அங்ஙனமே, விநாயகர் திருவுருவத்தை மண்ணினாலும் பசுஞ்சாணியாலும், மஞ்சள், மாக்கல், கருங்கல், வெள்ளைச் சலவைக்கல், பளிங்கு, செம்பு முதலிய பொருள்களாலும், முத்து, பவழம், யானைத்தந்தம், வெள்ளெருக்கின் வேர், அத்திமரம், பசுவெண்ணெய், அரைத்த சந்தனம், வெண்ணிறு, சர்க்கரை ஆகிய இவற்றாலும் அமைத்து வழிபட்டு வருகின்றனர். திருவலஞ்சுழி விநாயகரைக் கடல் நுரையாலான திருமேனி என்று சொல்வது வழக்கம். வீடுகளில், தைப்பொங்கல் சித்திரைப் பௌர்ணமிப் பொங்கல் இந்நாட்களில், பசுஞ்சாணிப் பிள்ளையார் வைத்து அறுகுசாத்தி வழிபடுவார்கள். சாணி இரண்டு நாளைக்குமேல் இருந்தால் புழுத்துப்போவதைப் பார்க்கிறோம். பிள்ளையாராகப் பிடித்த அதனை வெய்யிலிலோ, வெற்றிடங்களிலோ வைப்பது வழக்கமில்லை. பத்திரமாகத் தூக்கி மாடத்தில் வைத்திருப்பார்கள். அப்படியிருந்தும் அது கெட்டுப்போவதில்லை. திருமணம் முதலிய நற்காரியங்கள் செய்யத் தொடங்குமுன் அரைத்த மஞ்சளால் பிள்ளையார் செய்து வைத்துப் பூசிப்பது வழக்கம். விநாயகசதுர்த்தி அன்று புற்றுமண்ணாற் செய்வது வழக்கம். சில நாட்களில் மாவினாற்செய்த பிள்ளையாரும் வணங்கப்பெறுவர். சாளக்கிராமம் என்னும் நருமதைக் கல்லாலும் பிள்ளையார் செய்வதுண்டு. கணபதி குண்டம் என்னுமிடத்தில், பாணலிங்கம்போலக் கணபதி உருவமும் தானே விளைகின்றது எனவும், அதனைப் பூசித்தல் சிறப்பு எனவும் கூறுவர். வழிபாட்டின்போது கும்பத்திலும், கூர்ச்சத்திலும், ஓமாக்கினியிலும் விநாயகரை ஆவாகித்து வழிபடுதலும் உண்டு.

விருப்பமான பூக்களும்—இலைகளும் :

விநாயகருக்கு அறுகும், வன்னிப் பத்திரங்களும், மந்தாரைப்பூவும் மிகச் சிறந்தன. தாழம்பூ, துளசி இவைகளால்

Koviloor Digital Library



ஏகதந்தர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

விநாயகரைப் பூசித்தலாகாது. சாதாரணமாகச் சிவபூசைக்கு உகந்ததான எல்லாப் பத்திர புஷ்பங்களும் விநாயகர் வழிபாட்டுக்கும் ஏற்றவையே.

அறுகு: ஓரிடத்தில் முளைத்துக் கொடிபோல் நீண்டு ஆறிடங்களில் வேரூன்றிக் கிளைத்துக்கொண்டே போவது அறுகு. "அறுகுபோல் வேரூன்றி" என்ற உவமையும் பழமொழிகளில் வழங்கப்பெறுதல் காண்க. அங்ஙனமே மூலாதார மூர்த்தியாகிய குண்டலினியில் வசிப்பவராகிய விநாயகப்பெருமானே குண்டலினியாகிற அறுகைச் சுவாதிட்டானம் முதலிய ஏனைய ஐந்திடங்களிலும் பொருந்தச்செய்து. சகஸ்திராரத்தில் பல நுனிகளாகத் தழைக்கச் செய்கின்றுராதலின், அறுகு அவருக்கு உகந்ததாயிற்று. உயிர்கள் உடலைவிட்டுப் பிரிந்தும் வினைக்கிடாக வேற்றுடம்பை மேவப் புல்நுனியைப் பொருந்தி பசுவயிற்றிற் புகுந்து எருவின் வழியாகப் பயிர்களோடு பரவி, புருஷகர்ப்பத்தில் தங்குகிறது என்ற உபநிஷத் கருத்தின்படி, உயிர்கள் புல்நுனியிற் பொருந்துவதே முதற்படியாதலின், இறைவன் படைப்பினுள் முதற்படைப்பாகிய விநாயகப் பெருமானுக்கு அறுகம்புல் அருச்சனை மிக விருப்பந்தருவதாயிற்று.

மதுசூதனன் என்னும் மறையவனும் சுலபன் என்னும் அரசனும் அவன் மனைவி சுபத்திரையும் ஒருவருக்கொருவர் சபித்துக்கொண்டு கழுதையும், காளையும், புலிச்சியுமாயினர். ஒரு விநாயக சதுர்த்தியில் விநாயகப் பெருமான்மேல், அறிவொடு பொருந்தாமலே அறுகை வீசிய காரணத்தால் அவர்கள் தெய்வவுருப் பெற்றனர்.

வெப்பு நோயாகிய சுரநோய் கண்டவர்களுக்கு அறுகையிட்டு நீரைக் காய்ச்சிச் சுருக்கிக் கொடுத்தால் சுரநோய் நீங்கும். அறுகை மஞ்சளோடு சேர்த்து அரைத்து, சிரங்கு முதலிய தோல் நோய்களுக்கு மேற்பூச்சாகத் தடவலாம். ஆகவே இவைகளால் அறுகு வெப்பு நோய்க்கெல்லாம் கைகண்ட மருந்து என்பது வெளிப்படுகின்றது. யோகிகள் யோகப் பயிற்சியால் விளைந்த மூலாதார வெப்பத்தைத் தணித்துக்கொள்ள அறுகுக் கஷாயம் அருந்துவார்கள். இந்தக் கஷாயம் அவர்களால் "மூதண்டக் கஷாயம்" என வழங்கப் பெறுகின்றது. இவைகளை எண்ணிப் பார்க்கும்போது ஓர்

Koviloor Digital Library

உண்மை வெளிப்படுகின்றது. இதனையே விநாயகபுராண வரலாறு ஒன்றும் விளக்கிக் காட்டுகின்றது.

யமன் மகனுகிய அனலாசுரன் என்பவனை விநாயகப் பெருமான் விழுங்கினுர். அதனுல் அவர் மேனிமுழுவதும் காந்துவதாயிற்று. அவ்வெப்பத்தைத் தணிக்கச் சந்திரன் அமுதம் ஆட்டினுன். சித்தி புத்திகள் தம்முடைய குளிர்ந்த அவயவங்களைக்கொண்டு ஒற்றடங் கொடுத்தனர். விஷ்ணு தாமரைப்பூக்களை ஒற்றிவந்தனர், வருணன் குளிர்ந்த நீரைக் கொண்டு நீராட்டினன். சிவபெருமான் ஆதிசேடனைக் கொண்டு ஒற்றச்செய்தனர். என்னசெய்தும் வெப்பு நீங்க வில்லை. எண்ணுயிர முனிவர்கள் ஒவ்வொருவரும் இருபத் தொரு அறுகையிட்டு வைத்திருந்த நீரைத் தனித்தனியே சொரிந்தனர்; வெப்பு நீங்கியது என்பது அவ்வரலாறு. இதனுல் அறியப்பெறும் உண்மை வெப்பத்தை நீக்க அறுகு பயன்படு கின்றமையே. விநாயகரும், தியானத்தின் முதலிடமாகிய மூலாதாரத்தில் உண்டாகும் கனலால் விளைந்த வெப்பத்தைத் தணிக்க, அன்பர்கள் அறுகைத் தீண்டி அருச்சிக்கச் செய் கின்றுர் என்பதாம்.

வன்னி: இதன் இலை வெப்பந்தணிக்கும் மூலிகை. ஆதலாலும், சூரிய காந்தக்கல்லோடு சூரியவெப்பங்கலந்த வுடன் தீ வெளிப்படுவதுபோல வன்னிக்கட்டையினின்று நெருப்பு வெளிப்படுகையாலும் ஓமம் முதலிய நற்காரியங் களுக்குப் பயன்படும் வன்னித்தழை விநாயகருக்கு உகந்த தாயிற்று. வன்னியடி விநாயகரும் வரங்கொடுக்கும் மூர்த்தி யாக விளங்குகின்றுர். வன்னி நெருப்புவடிவாகலின் நெருப் பினைச்சார்ந்த பொருள்கள் தூய்மையுறுதல்போல, வன்னி மரத்தையும் இலையையுந்தீண்டிய அன்பர்களுடைய பாவம் அகலவேண்டும் என்ற திருவுளக்குறிப்போடு விநாயகர் வன்னி யினடியில் எழுந்தருளியிருந்து, வன்னித்தழையைத் தமக்கு உகந்த அருச்சனைப் பொருளாகவும் ஏற்றுக்கொள்கிறுர்.

விதர்ப்பநாட்டு மன்னனுக்கப்பெற்ற சாம்பன், துர்ப்புத்தி முதலிய அமைச்சர்களோடு கூடிச் செய்த பாவத்தால் அனை வரும் அரக்கர்களாகவும் வேடர்களாகவும் பிறந்தனர்; காட்டில் எதிர்பாராமல், வன்னி விருக்ஷத்திலேறி விநாயகர் மேல் தழையையுதிர்த்தனர்; பாவம் நீங்கியது: கணேசருல

Koviloor Digital Library

கத்தை யடைந்தனர் என்கின்ற இந்த வரலாறு தீமைகளேயும் அவற்றின் பயனுகிய பாவங்களேயும் ஒழிக்கும் உயர்வு வன்னிக்கு உண்டு என்பதைக் காட்டுவதாகும். வன்னிமகத்துவம் அவுரவமுனிவரின் புத்திரியாகிய சமி என்பவளும் அவள் கணவனுகிய மந்தாரனும், கணேசசாரூபம் பெற்ற புருசுண்டி முனிவரை இகழ்ந்த பாவத்தால், அவர் சாபம் பெற்று வன்னிமரமாகவும், மந்தாரமரமாகவும் ஆயினர்; பிறகு விநாயகப்பெருமான் திருவருளேப்பெற்று உய்ந்தனர் என்பது வரலாறு.

—சமி. மந்தார உற்பத்தி.

உளதள வில்லதோர் காதலென்
நெஞ்சில்வன் நஞ்சமுண்ட
வளரிள மாமணி கண்டன்வண்
டாடுவண் கோதைபங்கத்
திளவளர் மாமதிக் கண்ணிளம்
மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதஞ் சேர்களி
யானேக் கணபதியே.

— கபிலதேவநாயஞர்.

Koviloor Digital Library

பூசிக்கும்முறை

சங்கற்பம் :

எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும், இறைவன் திருவருளை முன்னிட்டு, இன்ன நன்மைக்காக, இன்னாருடைய விருப்பத்தின் பொருட்டுத் தொடங்குகின்றேன் என்று உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வண்ணம் எண்ணித் துணிதலே சங்கற்பம். 'எண்ணித் துணிக கருமம்' என்பர் வள்ளுவர். அங்ஙனமே பிள்ளையார் பூசையைத் தொடங்கும் போதும்.

"இன்னின்ன வருட, மாச, பக்ஷ, திதி, நக்ஷத்திர, யோக, கரணங்களோடுகூடிய இன்னநாளில் என் குடும்ப நன்மைக் காக—அறம் பொருள் இன்பம் வீடு இவைகளைப்பெறுதற்காக- வெற்றி, நலம், ஆயுள், வீரம் இவை வளர்தற்காக விநாயகரை விதிப்படி பூசிக்கின்றேன்"

என்று சங்கற்பம் செய்துகொள்ளுதல் வேண்டும்.

பின்னர், சந்தன மரத்தாலாகிய ஓர் வேதிகையைத் தூய்மையான - உயர்ந்த இடத்தில்வைத்து, அதன்மீது அரிசியைப்பரப்பி, பொன்னுடையை விரித்து, எள்ளளவு இடைவெளிதோன்ற நூல் சுற்றப்பட்ட கும்பத்தை அதன் மேல் வைத்தல்வேண்டும். அதில் கங்கை. காவிரி முதலிய புண்ணிய தீர்த்தத்தைப் பூரித்தல்வேண்டும். கும்பத்திற்குள், பிராணப்பிரதிட்டைக்காக, நறுமணமுள்ள சந்தனம், கஸ்தூரி கற்பூரம் முதலியவைகளையும் பொன், மரகதம், மாணிக்கம், முத்து முதலான பஞ்சரத்தினங்களையும் இடுதல் வேண்டும். கும்பத்தின்மேல் இத்தி, ஆல், அரசு, மா, நாவல் என்னும் இவற்றின் தளிர்களைப்பெய்து, குடுமித் தேங்காயை அதன் நடுவில் வைத்தல் வேண்டும். அதன்மீது ஐந்து ஏழு முதலிய ஒற்றைப்பட்ட தருப்பைகளால் விதிப்படி முடியப்பெற்ற கூர்ச்சத்தைவைத்து. சந்தனம், புட்பம், அக்ஷதை முதலிய வற்றால் அலங்கரித்துப் பூசித்தல்வேண்டும்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

பிரமா, விஷ்ணு, ருத்ரன் முதலான எல்லாத் தெய்வங்களும், கங்கை முதலிய நதிகளும் இந்தக் கும்பத்தில் உள்ள நீரைப் பற்றி நின்று அருளுக என்று பாவித்துக் கும்பத்தைப் பூசித்தல் வேண்டும்.

இந்தக் கும்பத்திற்கு மேற்கே கணபதி யந்திரத்தையிட்டு அதன்மீது மண் முதலியவற்றால் இயன்ற கணபதி வடிவை எழுந்தருளச்செய்து* அவருக்கு முன்னிலையில் வட்டகைகளாகிய அருக்கிய பாத்திரங்களை அமைத்து, அவற்றில் குங்குமப்பூ, பச்சைக்கருப்பூரம், கத்தூரி. அரிசி, பால், தருப்பைநுனி, மணமுள்ள மலர், வெண்சிறு கடுகு, நெல், எள் முதலியன இட்டு நீரைப் பூரித்தல்வேண்டும். இவற்றாலேயே விதிப்படி, அர்க்கிய பாத்திய ஆசமனங்களை அளித்தல்வேண்டும். பின்னர் புஷ்பமும் அக்ஷதையுங்கொண்டு, கிழக்கு முதலிய வாயில்களில் ஓம் துவாரஸ்ரீயை நம: என்பது முதலிய அறுபத்தேழு மந்திரங்களால், வாயிற் பீடத்தை பூசித்து, "உருக்கிய பொன்போன்ற நிறமும், பெரிய உடலும், அணிகளோடு கூடிய அங்கங்களும், தண்டம், அக்ஷமாலை. பரசு, மோதகம் இவற்றையேந்திய நான்கு கரங்களும் உடையவராகச் சித்தி விநாயகரைச் சிந்தித்து. தமது மூலாதாரத்தினின்று. உன்முகமாக இருதய கமலத்து எழுந்தருளியிருக்கின்ற கணேச மூர்த்தியைத் தன் முன்னிருக்கும் மூர்த்தியினிடத்தில் விநாயகரே வணக்கம்; என்னால் இயற்றப்பெறும் இந்தப் பூசனையை ஏற்றுக்கொள்ள இதில் விளக்கமாக எழுந்தருளுக என்று வேண்டிக்கொண்டு, 'கண நாயகம் ஆவாஹயாமி' என்று ஸ்தாபனம் செய்தல் வேண்டும். ஸ்ரீ விநாயகாய ஆஸநம் ஸமர்ப்பயாமி என்று ஆஸனம் கொடுத்து, 'ஸ்ரீ கௌரீ புத்திராய இதம் பாத்யம்' எனப் பாத்யமும் ஸ்ரீ கஜானனாய அர்க்கியமும் ஸமர்ப்பயாமி என அர்க்கியமும், ஸ்ரீ சர்வேசாய நம: என ஆசமனமும் ஸ்ரீ கஜவக்த்ராய நம: எனச் சாமான்ய நைவேத்யமும் அளித்துப் பின் அபிஷேகத்திற்குத் தொடங்குதல் வேண்டும்.

அபிஷேகம் :

சந்தனாதித்தைலம், மாப்பொடி, மஞ்சள்பொடி, திரவியப் பொடி, பஞ்சகவ்யம், ரஸபஞ்சாமிர்தம், பல பஞ்சாமிர்தம்.

---

* உபதேசகாண்டம், கலசம் யந்திரம் இவற்றிலேதான் விநாயகரை வழிபடவேண்டும் என்று கூறுகிறது.

Koviloor Digital Library

நெய். பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பழரசங்கள், இளநீர், சந்தனம், ஸ்நபனம், சங்கம் இந்தமுறையில் அபிஷேகம் செய்வித்தல்வேண்டும்.

ப்ரதமம் கந்ததைலஞ்ச த்விதீயம் பஞ்சகவ்யகம் ।
த்ருதீயம் பஞ்சாம்ருதஞ்சைவ க்ருதஸ்நாநம் சதுர்த்தகம் ॥
பஞ்சமம் பயஸா ஸ்நாநம் ததிஸ்நாநஞ்ச ஷஷ்டகம் ।
ஸப்தமம் மதுநாஸ்நாநம் இக்ஷுஸ்நாநமதாஷ்டமம் ॥
நவமம் பலஸாரஞ்ச நாரிகேளோதகம் தஶம் ।
ஏகாதஶம் கந்ததோயம் த்வாதஶம் ஸ்நபநம் பவேத் ॥
ஶங்காபிஷேக பர்யந்தம் யஜேதேவம் ஶிவம் விஶேஷத: ।

என்று காரணுகமத்தில் சொல்லப்பெற்றுள்ளது. அபிஷேகம் செய்கின்றபோது பத மந்திரங்களைத் தனக்கும் பிறர்க்கும் மனேலயம் உண்டாகத்தக்கதாக இனிய குரலில் எடுத்துச் சொல்லுதல் மரபு.

இங்ஙனம் நீராட்டியபின், இரண்டு செம்பட்டாடைகளை. ஸ்ரீ விக்நராஜாய வஸ்திரயுக்மம் ஸமர்ப்பயாமி' என்று உடுத்தி ஸ்ரீ கணநாயகாய நாகயக்ஞோபவீதாய யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி என்று பூணூல் அணிவித்து, ஸ்ரீ கணேசாய ஸர்வாபரணுநி ஸமர்ப்பயாமி' என்று அணிகளை அணிவித்து. ஸ்ரீ விக்நேசாய கந்தம் ஸமர்ப்பயாமி எனச் சந்தனமும், ஸ்ரீ ஸர்வாபீஷ்ட பிரதாயகாய அக்ஷதாநி ஸமர்ப்பயாமி என அக்ஷதையும். ஸ்ரீ விநாயகம் புஷ்பை: பூஜயாமி எனப் புஷ்பங்களும். ஸ்ரீ சிவசுனவே மால்யானி சமர்ப்பயாமி என மாலைகளும் அணிவித்தல்வேண்டும்.

பின்னர் இரண்டிரண்டாக அறுகை எடுத்துக்கொண்டு, ஓம் கஜானனுய நம: என்பது முதலிய இருபத்தொரு மந்திரங்களைச் சொல்லி, இருபத்தொருமுறை அர்ச்சித்து, அங்க பூசைக்கு ஆரம்பித்தல்வேண்டும்.

அங்கபூசை :

பாதங்களில்	ஓம் கணேசாய நம:
முழந்தாள்களில்	ஓம் விக்நராஜாய நம :

Koviloor Digital Library

தொடைகளில்	ஓம் ஆகுவாகனுய நம:
நிதம்பத்தில்	ஓம் ஏரம்பாய நம;
நாபியில்	ஓம் தேவதேவாய நம:
வயிற்றில்	ஓம் லம்போதராய நம:
இருதயத்தில்	ஓம் ஸ்தூலகண்டாய நம:
கழுத்தடியில்	ஓம் ஸ்கந்தாக்ரஜாய நம:
தோளில்	ஓம் சதுர்ப்புஜாய நம:
உள்ளங்கையில்	ஓம் பரசுஹஸ்தாய நம:
நாசி அல்லது முகத்தில்	ஓம் கஜவக்த்ராய நம:
கண்களில்	ஓம் விக்நஹந்த்ரே நம:
காதுகளில்	ஓம் சூர்ப்பகர்ணுய நம:
தந்தங்களில்	ஓம் ஏகதந்தாய நம:
சிரத்தில்	ஓம் குமாரகுருவே நம:
எல்லாவற்றிலும்	ஓம் சர்வேஸ்வராய நம:

என்று அந்தந்த அங்கங்களில் பூஜைசெய்து, பின்னர். முதல் ஆவரணத்தில் ஓம் கணுதிபாய நம: என்பதுமுதல் சங்கட நாசாய நம: என்பதுவரையுள்ள பதினுன்கு மந்திரங்களைக் கொண்டும். இரண்டாம் ஆவரணத்தில் விக்ந கணபதயே நம: என்பதுமுதல் சித்தி கணபதியே நம: என்பதுவரையுள்ள 11 மந்திரங்களைக்கொண்டும். மூன்ருவது ஆவரணத்தில் ஓம் ரமாயை நம; என்பதுமுதல் சதாசிவாயை நம: என்பதுவரையுள்ள ஒன்பது மந்திரங்களைக்கொண்டும், நான்காம் ஆவரணத்தில் ஓம் ஆதித்தாய நம: என்பது முதலிய ஒன்பது மந்திரங்களைக் கொண்டும். ஐந்தாம் ஆவரணத்தில் ஓம் த்ரத்யைநம: என்பது முதலிய ஏழு மந்திரங்களைக்சொண்டும், ஆருவது ஆவரணத்தில் இந்திராய நம: என்பது முதலிய எட்டு மந்திரங்களைக் கொண்டும், பூசைசெய்து முடித்த பின்னர், சிறுசண்பகம், கரிசலாங் கண்ணி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, துளசி, நாயுருவி, சிறுவழுதுணை, வன்னி, அலரி, மூங்கில், வெள்ளெருக்கு, மருதம், விஷ்ணு கரந்தை, மாதுளை, மந்தாரம், மரு, சாதிமல்லி, வெண்ணொச்சி என்னும் இருபத்தொரு பத்திரங்களைக்கொண்டு ஓம் கணுதிபாய நம: என்பது முதலிய இருபத்தொரு மந்திரங்களைச்சொல்லி அருச்சித்தல் வேண்டும்.

Koviloor Digital Library

சிறு சண்பகம், செவ்வந்தி, மல்லிகை, சம்பங்கி, செங்குவளை, தாதகி, மகிழ், தாமரை, புன்னை, ஊமத்தை, முல்லை, விஷ்ணுகரந்தை, வெள்ளைக் காக்கரட்டான். நாவல், மந்தாரம், குரா, கோங்கு, செவ்வரத்தம், வெள்ளெருக்கு, அகத்தி என்னும் இருபத்தொரு மலர்களைக்கொண்டு ஓம் சுமுகாய நம: என்பது முதலிய இருபத்தொரு மந்திரங்களைச்சொல்லிப் புஷ்பார்ச்சனை செய்க.*

அதன் பின்னர் ஓம் சுமுகாயநம: என்பது முதலிய பன்னிரு பெயர்களையும், ஓம் விநாயகாய நம; என்பது முதலிய அஷ்டோத்திர சத நாமங்களையும் சொல்லி அருச்சித்தல் வேண்டும்.

பின்னர், உமாசுதாய நம: என்று தூபமும், ஸ்ரீ ருத்ராப் யாம் நம: என்று தீபமும், விக்னேசாய நைவேத்யம் ஸமர்ப்ப யாமி என்று நைவேத்யமும், 'ஸ்ரீ சங்கடநாசினே பூர்ணபலம் ஸமர்ப்பயாமி' எனப்பூர்ணபலமும், அர்ப்பித்தல்வேண்டும். ஸ்ரீ விக்னேசாய நம: ஸ்வர்ணபுஷ்பம் சமர்ப்பயாமி என ஸ்வர்ணபுஷ்பம் சாத்தி, ஸ்ரீ சித்தி விநாயகாய தாம்பூலம் சமர்ப்பயாமி எனத் தாம்பூலமும் ஸ்ரீ விக்னேசாய புஷ்பம் சமர்ப்பயாமி எனப்புஷ்பமும், ஸ்ரீவர்னராஜாய புன: அர்க்கியம் ஸமர்ப்பயாமி என மீட்டும் அர்க்கியமும் அளித்து, அவரது பதினெரு மந்திரங்களைச் சொல்லி அறுகினுற்பூசித்து, இருபத்தொருதடவை "கணேசாதி - சக்தி சம்யுக்தாய" அந்தமாக உள்ள மந்திரங்களாற் பூசித்து தியானித்து, புஷ்ப நைவேத்யம் செய்து, உத்தர நீராஞ்சனம்காட்டி, பிரதட்சிணை நமஸ்காரங் களையும் இயற்றிப், பிரார்த்தித்து, அர்க்கியம் அளித்து, சந்திரனையும் பூசித்து விநாயக பூஜையை முடித்துக்கொள்ள வேண்டும்.

நிவேதனப்பொருள்கள்: மக்கள் உண்ணக்கூடிய உயர்ந்த பொருள்கள் எல்லாம் இறைவற்கும் உகந்தனவே. விநாயருக்கு உகந்த நிவேதனப் பொருள்கள் தேங்காய், வெல்லம்.

---

* மாசிப்பச்சை, கையாந்தகரை, வில்வம், ஊமத்தம், நொச்சி, நாயுருவி கத்தரி, வன்னி, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, விஷ்ணுகரந்தை, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாலி, பாதிரி, அறுகு என இருபத்தொன்று என்று புட்பவிதி "மேதரு மாசிப்பச்சை" என்ற பாடல் தெரிவிக்கும்.

Koviloor Digital Library

உத்தண்ட கணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

எள்ளுருண்டை, அப்பம், அவல், வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி முதலியன. பயறுவகைகள், கனி வகைகள், கிழங்குவகைகள் எல்லாம் விநாயகருக்கு உகந்தவையே யெனத் தக்கயாகப் பரணி கூறுகின்றது* 'கடலை பயறேடு' என்ற திருப்புகழில் அப்பம், அமுது. அவரை, அவல், இளநீர், எள்ளுருண்டை, கடலைக்காயுருண்டை, கரும்பு, கற்கண்டு, வள்ளிக்கிழங்கு, சர்க்கரைப்பொங்கல், வெண்பொங்கல், மிளகு சாதம் (சம்பா), சுகியன், தினைமா, துவரைப் புழுக்கல், தேன், நெய், பச்சரிசி, வெல்லம், மிளகு, பணியாரம், பயறு, பருப்பு, முப்பழம், பாகு, பால், பிட்டு, பொரி, மா, லட்டு, வடை, வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழம், விளாம்பழம், நாவற்பழம் முதலிய உணவு வகைகள் உகந்தனவாகக் குறிக்கப்பெறு கின்றன.

எல்லாரும் எப்போதும் செய்யக்கூடிய வழிபாடு:

கஜமுகன், தன்னாட்சியில் தேவர்களையெல்லாம் அடக்கி யாண்டு, அவர்கள் தன்னைக் கண்டபோது தலையிற் குட்டிக் கொள்ளவேண்டும் என்றும், தோப்புக்கரணம் போடவேண் டும் என்றும் வற்புறுத்திவந்தான். அவனை விநாயகர் வென் றதும் தேவர்கள் அந்த நன்றியறிதலைத் தெரிவிக்க "நாங்களும் பெருமானாகிய தங்களைக் காணும்போதெல்லாம் அந்த இரு வழிபாடுகளையும் செய்கின்றோம் விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். அது முதல் அவை அனைவரும் செய்யக்கூடிய உகந்த வழிபாடாக ஆயின. இதனை அருணகிரிநாதர் "தொப்பணி குட்டொடு வசைபரிபுர......அர்ச்சனை மதவேளே" என்றருளுகிறார்கள்.

---

* "எப்பயறும் எக்கனியும் எக்கிழங்கும் எத்தேனும்!
தொப்பையொரு பெருவயிற்றுப் பிள்ளைக்குச் சுமத்துதியே"
—தக்கயாகப்பரணி. பா. 220.

"அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடியவலோ டெள்ளுண்டை கன்னல் - வடிசுவையில்
தாழ்வானை ஆழ்வானைத் தன்னடியா ருள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ்." —மூத்த-இரட்டை, பா. 3.

"வாழைக்கனி பலவின் கனி மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை யப்பம் எள்ளுண்டை எல்லாம் துறுத்தும்
பேழைப் பெருவயிற் றேடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத்துச் செக்கர் மேனி விநாயகனே." —ஷை பா. 4

Koviloor Digital Library

விரதங்கள்

மனத்தின் ஒருமைப்பாட்டிற்கும், இடைவிடாத தியானத்திற்கும் உறுதுணையாவன விரதங்களே. விரதம் என்பது அசையாத உறுதி. விநாயகரை எண்ணி மேற்கொள்ளப் பெறும் விரதங்களில் வாரவிரதமாக உள்ளது வெள்ளிக்கிழமை விரதமாகும்.

வெள்ளிக்கிழமை விரதம் :

இது வைகாசி மாதத்துச் சுக்கிலபக்ஷத்து முதற் சுக்கிர வாரந்தொடங்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தவருது அநுட்டிக்கப்பெறுவது,* அன்று பகல்முழுதும் உணவு உண்ணுமல் இருத்தல் அவசியம். மாலையில் மறுபடியும் நீராடி, விநாயகரை வழிபட்டு ஏதாவது பழங்களை உண்ணலாம்.

இந்த விரதம் மேற்கொள்பவர்கள், வெள்ளிக்கிழமை விடியற்காலையில் ஐந்து மணிக்குமுன் புண்ணியநதியில் நீராடிப் பட்டுடுத்து, புனிதமாக ரத்னகலச ஸ்தாபனம்செய்து கும்பத்தில் விநாயகரைப் பூசித்து கரும்பு, விளாம்பழம், சர்க்கரை, பலாப்பழம் இவற்றை நிவேதித்தல் வேண்டும். விரதமுடிவில் மாகேசுரபூசை செய்து, அடியார்களுடனிருந்து உண்ணுதல் வேண்டும். இந்த விரதத்தை அநுட்டித்து அத்திரிமகரிஷி சந்திரனையும், துர்வாசரையும் பிள்ளைகளாகப் பெற்றனர். பிரமன் சிருட்டித்தொழில் கைவரப்பெற்ருன். குபேரன் சங்கநிதி பதுமநிதிகளைப் பெற்ருன்,

விநாயகசதுர்த்தி :

இது ஆவணிமாதத்துச் சுக்கிலபக்ஷத்தில் வருகிற சதுர்த்தியிலே விநாயகரை முற்கூறிய பூசனை விதிப்படி வழிபட்டு, பகலில் ஒருவேளையுண்டு, இரவில் பால் அல்லது பழம்மட்டும் சாப்பிட்டுக்கொண்டு அநுட்டிக்கப்பெறுவது. இரவில் சந்திரனைப் பார்க்கவேகூடாது. ஆனுல் விநாயகபூசையின் இறுதியில் சந்திரனைப் பூசித்தல்மட்டும் அவசியம். இவ்விரதகாலத்தில் விநாயகரை அர்ச்சிக்கவேண்டிய பத்திரங்கள் மாசிப்பச்சை,

* சித்திரை மாதத்துப் பூர்வபக்ஷத்துச் சுக்கிரவாரம் என்கிறது உபதேச காண்டம்.

Koviloor Digital Library

கையாந்தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி, வன்னி, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, விஷ்ணுகரந்தை, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாளி, பாதிரி, அறுகு என்ற இருபத்தொன்று என்று புட்பவிதி கூறுகின்றது. சதுர்த்தியன்று சந்திரனை விஷ்ணு நேரிற்பார்த்த குற்றத்தால் அவமானம் அடைந்தார். வச்சிரமாலி என்பவன் இவ்விரதத்தையனுட்டித்துப் பெருவியாதி நீங்கப்பெற்று அரச போகம் துய்த்தான்.[1]

விநாயகபுராணம், இந்த விரதத்தை ஆவணி சுக்கிலபக்ஷ சதுர்த்தி தொடங்கிப் புரட்டாசிமாதத்துச் சுக்கிலபக்ஷ சதுர்த்தி வரையில் அநுட்டிக்கவேண்டும் என்கின்றது. மேற்கூறிய ஆவணி சதுர்த்தியில் விடியல் ஐந்து நாழிகைக்கு முன்பே எழுந்து நதியில் நீராடி, பூசைக்குரிய சாதனங்களைச் சேகரித்துக்கொண்டு மூன் கூறியவாறு கலச ஸ்தாபனம் செய்து, அதன்முன்பு பொன்னாலும் மண்ணாலும் இயன்ற திருவுருவங்களை எழுந்தருளச்செய்து விதிப்படி தினந்தோறும் பூசித்தல் வேண்டும். இந்த ஒருமாதத்தில் தினமும் தவறாமல், விநாயகருடைய மந்திரமாகிய ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு, இருபத்தெட்டு என்னும் எழுத்துக்களுள்ள மந்திரங்களுள் ஏதாவது ஒன்றைச் செபித்தல் வேண்டும். ஒன்று, இரண்டு, நான்கு எழுத்துள்ள மந்திரங்களைச் செபிப்பவர்கள் இலக்ஷம் உருவும், முடியாதாயின் அரை இலட்சமும், ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு எழுத்துள்ள மந்திரங்களைச் செபிப்பவர்கள் இலட்சம் உருவும், முடியாதாயின் பதினாயிரம் உருவும், இருபத்தெட்டெழுத்து மந்திரத்தைப் பதினாயிரமும் குறையாமல் செபிக்கவேண்டும். அங்ஙனம் செபிக்கும்போது பத்துருவிற்கு ஒருகால் ஒரு தர்ப்பணமும் பத்துத் தருப்பணத்திற்கு ஒருமுறை ஒரு ஓமமும், பத்து ஓமத்திற்கு ஒருமுறை அன்னதானமும் முடிந்தவரை செய்யவேண்டும். ஒருமாதம் முடிந்ததும் பூசையை முடித்து விநாயகருக்கு வீதியுலா செய்வித்து மண்மய மூர்த்தியை நதியிலாவது மடுவிலாவது எழுந்தருளச்செய்தல்வேண்டும்.

இவ்வண்ணம் பூசை முடிகின்றவரை முப்பதுநாளும் உணவு உறக்கங்களை நீக்கி, விஷய சுகங்களையும் விரும்பாமல்

---

1 உபதேசகாண்டம் சிவவிரதம், பா. 330-381.

Koviloor Digital Library

இருந்து, முடிவில் எல்லாரோடுமிருந்து உண்ணுதல்வேண்டும். இங்ஙனம் கடும் விரதம் இருக்க இயலாதவர்கள் விரத ஆரம் பத்திலாவது இவ்வாறு இருந்து மற்ற நாட்களில் அவிசு,* பழம், பால்முதலிய சாத்துவிக உணவை உட்கொண்டுவருவது நலம். முப்பதுநாளும் அநுட்டிக்க முடியாதவர்கள் விநாயக சதுர்த்தியன்றுமட்டுமாவது விதி பிறழாமல் அநுட்டிப்பது அவசியம்.

இவ்விரதத்தை முருகன் அநுட்டித்து இடையூறின்றிப் போரில் சூரனைவென்றார். உமாதேவியும் அநுட்டித்து மகிழ்ந் தனர். கர்த்தமன் என்னும் அரசன் அநுட்டித்து அரசாட்சி யைச் செவ்வனே நடத்தி, மறுமையில் பேரின்ப நிலையையும் பெற்றான். நளன் அநுட்டித்துச் சிவஞானப்பேறெய்தினன். இவ்வண்ணமே சந்திராங்கதன் இருமையின்பத்தையும் எய்தி னன். மன்மதன், ஆதிசேடன் முதலியவர்களும் அநுட்டித்து இன்பம் எய்தினர்.

ஆவணிமாத சுக்கிலபட்ச சந்திரோதய காலத்தில் இரவு முதற்சாமத்தில் உச்சகிரக பஞ்சகயோகத்தில் பார்வதிதேவி கணபதியை ஈன்றெடுத்தாள் என்பர். அந்தப்போழ்தில் கணபதி யைப் பூசித்தால் குடும்பத்தில் சகல நன்மைகளும் கிட்டு மென்பர்.

இவ்விரதமானது வருடந்தோறும் ஆவணிமாதம் அமா வாசைகடந்த வளர்பிறை சதுர்த்தி திதி உச்சிப்போது வரையி லுள்ள தினத்தில் செய்யத்தக்கதென்பர்.

இக்கணபதியின் சதுர்த்தி விரத விதி :- "பதும புராணத் துள், அகத்தியரால் இராமபிரானுக்கும், காந்தத்துள் துர்வாச முனிவரால் கண்ணபிரானுக்கும், பவிஷ்யோத்தரத்துள், கண்ணபிரானால் தருமராசருக்கும், பிரமாண்டத்துள், நாரத ரால் பகிரத மகாராசனுக்கும்" உபதேசித்தபடி கூறப்பட் டுள்ளதாக உரைப்பர்.

குமார சஷ்டி விரதம் அல்லது பிள்ளையார் நோன்பு :

இது கார்த்திகை மாதம் கிருஷ்ணபக்ஷம் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கிலபக்ஷம் சஷ்டி திதிவரையில் இருபத்

* அவிசு – உப்பின்றிப் பொங்கப்பெற்ற உணவு.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

தொருநாள் அனுஷ்டிக்கப்பெறும் விரதமாகும். 'சட்டி தொட்டுச் சதயம்விட்டு' என்ற பழமொழியுங்கூட இவ்விரதம் தொடங்கும் காலத்தையும், முடிக்குங் காலத்தையும் அறிவிக்கிறது. நோன்பு பூண்பவர்கள் இருபத்தோரிழையாலாகிய நூலைக் காப்பாக அணிதல்வேண்டும். ஆடவர் வலது மணிக்கட்டிலும் பெண்கள் இடது மணிக்கட்டிலும் அணிவது மரபு. இந்த இருபத்தொரு நாட்களிலும் விநாயகருக்குத் திருமஞ்சனம் முதலியவைகளைச் சிறந்தமுறையில் செய்வித்து ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொருவிதமாக இருபத்தொருவகையான பணியாரங்களை நிவேதித்தல்வேண்டும். முதல் இருபது நாட்களிலும் ஒருபோது உண்டு, நியதியுடன் செய்யாதன செய்யாமல் பிள்ளையார் கதையைப் பெரியோர்கள் சொல்லக் கேட்டு, எப்போதும் தியானபரர்களாகவே நாட்களைக் கழித்தல்வேண்டும். இறுதிநாள் மட்டும் உணவொழிந்திருந்து மறுநாட் காலையில் பாரணைசெய்து விரதத்தை முடித்துக்கொள்ளுதல் மரபு. அனந்தன் இவ்விரதத்தை அநுட்டித்துத் துன்பம் நீங்கப்பெற்றான்.

சங்கடஹரசதுர்த்தி :

மாசிமாதம் தேய்பிறையில் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தி திதியில் துவங்கி, ஓராண்டு விதிப்படி அநுட்டித்தால் எல்லாத் துன்பங்களும் நீங்கப்பெற்றுச் செல்வம், செல்வாக்கு, கல்விமுதலிய எல்லா இன்பங்களையும் எய்தலாம்.

இவ்விரதத்தைத் துவங்கும்நாளில், சூரியனுதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னரே உறக்கத்தினின்று எழுந்து விதிப்படிச் சங்கற்பித்துக்கொண்டு, புண்ணியநதியில் நீராடிச் சிவசின்னங்களை அணிந்துகொண்டு விநாயகப் பெருமானைத் தியானித்து, அவருடைய ஓரெழுத்து ஆறெழுத்து மந்திரங்களில் யாதாயினும் ஒன்றை - அதுவும் தெரியாதவர்கள் அவருடைய பெயர்களையாவது இடைவிடாது அன்றுமுழுதும் செபித்தல் வேண்டும். உபவாசம் இருப்பதேமேல். அன்று இரவு உறக்கமும் கூடாது. விநாயக புராணத்தைப் பாராயணம்செய்வது நல்லது. முன் விநாயகசதுர்த்தி விரதம்போன்றே இதற்கும் பெருமானை எழுந்தருள்வித்துத் திருமஞ்சனம் முதலியவற்றை விதிப்படிச்செய்து வழிபடலாம். இவ்விரதத்தை ஓராண்டு வரை உறுதியுடன் அநுட்டித்தவர்கள், கூன் குருடு முதலியன

Koviloor Digital Library

நீங்கப்பெற்று உய்வர். உடல்பலம் பெறுவர். அறிவுசெறிவர். எல்லா இன்பமும் தானே வந்தியையும்.

இவ்விரதத்தைக் கிருதவீரியன் மேற்கொண்டு கார்த்த வீரியன் என்ற வீரனைப் பிள்ளையாகப் பெற்றுப் பேரரசை எய்தினன். சந்திரன் இந்நோன்பைப்பூண்டு, தனது க்ஷய ரோகம் நீங்கப்பெற்றான். புருசுண்டி என்னும் முனிவர் அநுட்டித்துத் தன் பிதிரு தேவதைகளைச் சுவர்க்கத்திற்கு அனுப்பினார். இன்றும் கடன்தொல்லை, நோய், பகை உடையவர்கள் இந்த நோன்பைப்பூண்டு அவை நீங்கப்பெற்று இன்பம் எய்தி வருகின்றனர்.

இதனை முதன்முதலில் செவ்வாய் அநுட்டித்துப் பேறு பெற்றான்; அதனால் இது அங்காரக சதுர்த்தியெனவும் வழங்கப்பெறும்.

பெண்கள் பூசை முறை:

நமது நாட்டில் எந்தக் கலைகளும், ஆசாரங்களும் பெண்களாலேயே பாதுகாக்கப்பெறுகின்றன எனலாம். இன்றைய உலகப்போக்கில், தானும் தொழிலுமாக அத்துவித நிலையில் கலந்திருக்கும் ஆடவர்களுக்கு, விரதங்களையும், நாள்—கிழமைகளையும் நினைவூட்டிக் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் சமய வாழ்விற்கு உயிர்த்தண்ணீர் ஊற்றிவருபவர்கள் தாய்மார்களே எனல் மிகையாகாது. அவர்கள் பரம்பரையாக இரண்டு விநாயக விரதங்களை அநுட்டித்து வருகின்றார்கள். வெள்ளிப் பிள்ளையார் கும்பிடுதல், செவ்வாய்ப் பிள்ளையார் கும்பிடுதல் என்ற பழக்கங்களே அவர்களால் மேற்கொள்ளப்பெற்றவை. அவற்றிற்கு அவர்கள் சொல்லும் வரலாறுகளும் பூசைமுறையும் செவி வழியாகவே வேதம்போல வந்துகொண்டிருக்கின்றன. வேதம் பெண்கள் கேட்கக் கூடாததுபோலச் செவ்வாய்ப் பிள்ளையார் கதையும் ஆடவர்கள் கேட்கக் கூடாது என்ற மரபு இருக்கிறது. அவற்றைத் தெரிந்தவரையில் விளக்கலாம்.

வெள்ளிப் பிள்ளையார்:

பெண்கள், வெள்ளிக்கிழமை விடியற்காலை நாலுமணிக்கே எழுந்து எண்ணெய்தேய்த்து முழுகிவிட்டு, ஆசாரமாகப்

Koviloor Digital Library

பட்டாடை அல்லது தூய்மையான பஞ்சாடை புனைந்து, செவ்வலரி, செவ்வரத்தை, அறுகு முதலிய கொண்டு பூசிப் பார்கள். ஈனுக்கன்றின் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைப்பார்கள். பூசையெல்லாம் சூரியன் உதிப்பதற்குள் முடிந்து விடவேண்டும். தாழையிலை, நெற்கதிர் இவைகளை வைத்து வழிபடுதல் வழக்கம்.

வரலாறு : ஓர் ஊரில் ஓர் அரசனிருந்தான். அவனுக்கு அருமையாக ஒரு பிள்ளை. அந்த அரசகுமாரன் ஒரு பசுங் கன்றை வளர்த்துவந்தான். அந்தக்கன்று உண்டால்தான் அவன் உண்பான். அது உறங்கினுல்தான் அவனும் உறங்கு வான். இப்படி அவனும் கன்றும் ஆசையால் பிணிப்புண்டு வளர்ந்தனர். அரசனும் தனது மகன் எண்ணப்படியே விட்டு வந்தான். ஒருநாள் அந்தப் பசுங்கன்று கட்டை அறுத்துக் கொண்டு ஊர்ப்புறமாக ஒடிவிட்டது. போனவிடத்தில், பள்ளத்தெருவில் ஒரு வீட்டு முற்றத்தில் நெல் உலர்ந்துகொண் டிருந்தது. அதனைக் கன்று தின்றுவிட்டது. வந்த வீட்டுக் காரி நெல் போய்விட்டதே! ஒருநாள் கூலி போய்விட்டதே! என்று பதறிப்போய், கோபங்கொண்டு உள்ளேயிருந்த தடியைக்கொண்டு வந்து அடித்தாள். கன்று இறந்துவிட்டது. அப்போது வந்த அவள் கணவன், ஐயோ ஐயோ அரசகுமார னுடைய ஆசைக் கன்றல்லவா? இப்படிச் செய்துவிட்டாயே என்று அரற்றினுன். அதனைக் கேட்ட பள்ளப்பெண் யான் என்ன செய்வேன்; தவறிவிட்டேனே என்று பயந்து அதனை வெட்டி அடுக்குப்பானையில் அடைத்து மறைத்துவைத்து விட்டாள்.

மாலைக்காலம். மன்னன் மகன் தனது வளர்ப்பைக் காணுமல் தவித்துப்போனுன். தந்தையிடம்போய் ‘கன்று வந்தால்தான் உண்பேன்; உறங்குவேன்’ என்று அடம்பிடித் தான். அரசனும் ஆட்களைவிட்டுத் தேடச்சொன்னுன். அவர்கள் எங்குந்தேடிக் காணுமையால் ஒவ்வொரு வீடாகப் புகுந்து தேடத்தொடங்கினுர்கள். ஊரவர்களிற் சிலர் இன்று நண்பகல் அந்தக்கன்று ஊர்ப்புறமாகத் தாழங்காட்டுக்கு எதிரில் உள்ள பிள்ளையார் கோயில்பக்கம் போயிற்று என்றுர் கள்; சிலர் ‘தாழங்காட்டுக்கு உள்ளே இருக்கும் பள்ளத்தி நெல்லைத் தின்றது பார்த்தேன்’ என்றுர்கள். இதனைக்கேட்ட ஏவலர்கள் பள்ளத்தியின் வீட்டைச் சோதனைபோடக் கிளம்பி

Koviloor Digital Library

விட்டார்கள். இதனையறிந்த பள்ளத்தி, பிள்ளையார் கோயி லுக்குப்போய் 'ஐயோ கணேசா! ஆபத்துக்காத்த பிள்ளை யாரே! தெரியாத்தனமாக ராசா வீட்டுக் கன்றைக் கொன்று விட்டேன்; ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டேன்; என்னை எப்படியாவது காப்பாற்றவேண்டும்' என்று வேண்டிக் கொண்டாள். அன்பெனும் வலையுள் அகப்படும் விநாயகப் பெருமானும் அருள்வழங்கினுர்.

அரசனுடைய ஏவலாட்கள் 'அவள்வீட்டு அறையிலே உள்ள பானைகளையெல்லாம் சோதித்தனர். பள்ளத்தி, அகப் பட்டுக்கொண்டோமே என்று தவியாகத் தவித்தாள். பிள்ளை யார் பெருங்கருணையால் பானைக்குள்ளிருந்த கன்றினிறைச்சி எல்லாம் தாமரைப்பூவாகக் காணப்பட்டது. வந்த ஏவலர் ஒன்றும் அறியாது சென்றனர். பள்ளத்தி எப்படியாவது பொழுது விடிவதற்குள்ளே கன்றை எழுப்பிக்கொடுத்து என்னைக் காப்பாற்றுங்கள் என்று கணபதியை வேண்டிக் கொண்டாள். கணபதியும் கன்று எழும்பக் கருணைபுரிந்தார். கன்று துள்ளிக்கொண்டு அரண்மனை நோக்கி ஓடிற்று. இதனை அறிந்த பள்ளத்தி, கன்றெழுந்த நேரமாகிய வெள்ளிக்கிழமை விடியல் நாலுமணிக்கே, இந்த நோன்பை அநுட்டிக்கத் தொடங்கினுள்.

தான் உழைத்த நெல்லிலிருந்து, 'நலுங்காத நாழி, குலுங் காமல் குறுணி' சேர்த்து, ஆசாரமாகக் குத்தி அரிசியாக்கினுள். மா இடித்து வெல்லத்தைக் கலந்து பிசைந்து பிடிக்கொழுக் கட்டையாகப் பிடித்தாள். கன்றை எழுப்பித்தந்து உழ வனைக்காத்த நன்றியறிதலுக்காகக் கன்றைப் போலவும், பசுவைப்போலவும், இடையன், அரசன், அரசகுமாரன், ஏர், கலப்பை, உழவன், சால், கரகம் இந்தவடிவங்களைப்போலவும் தன்னைப்போலவும் மாவினுற் பதுமைகள் செய்துவைத்து வேகவைத்தாள். விடியலுக்குள், தாழமடல் நெற்கதிர் இவற்றைச் சூழப் பரப்பினுள். இடையில் ஈனுக்கன்றின் சாணத்தால் பிள்ளையார் பிடித்துவைத்தாள்; பூசித்தாள். இதனுலே இவளுக்கு இருந்த ஆபத்து நீங்கியதோடல்லாமல் செல்வமும் வளர்ந்தது.

நம் நாட்டுப் பெண்கள் ஆடி, தை மாதங்களில் வரும் வெள்ளிக் கிழமைகளில் முற்கூறியவண்ணம் நீராடி, தாழ

Koviloor Digital Library

துண்டி விநாயகர்.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

மடல் நெற்கதிர் இவைகளைப்பரப்பி, கொழுக்கட்டை சுட்டு வைத்து வழிபடுவார்கள். அதனால் செல்வம் பெருகும்; இடையூறுகள் நீங்கும் என்பது அவர்கள் உறுதி.

செவ்வாய்ப் பிள்ளையார்:

தைச்செவ்வாய், ஆடிச்செவ்வாய் இந்தக்கிழமைகளில், தொடங்கி, இத்தனை செவ்வாய் என்று உறுதிசெய்து இந்த நோன்பைத் தொடங்குவார்கள். பெண்கள்மட்டுமே இந்த விரதம் கொண்டாடுவது வழக்கம். ஆண்களுக்குச் சத்தங் கூடக் கேட்கக்கூடாது. அவர்கள் இந்த நிவேதனத்தை உட்கொண்டாலும், நோற்கும்போது உளதாகும் உரல் உலக்கை ஒலிகேட்டாலும் கால் ஒய்ந்துவிடும்; வலி குன்றும் என்பது அவர்கள் நம்பிக்கை. ஆதலால், ஆடவர்கள் உண்டு உறங்கச் சென்றபின்போ, ஊருக்குப்போன பின்போ எல்லா வீட்டுப் பெண்களும், ஆடவரில்லாத ஒரு வீட்டில் ஒன்று கூடுவார்கள். அவரவர்கள் மிச்சமின்றி (உண்ணக்கூடிய அளவுக்கு நெல்லைக் கொணர்ந்து பங்காகக் கொடுப்பார்கள். அனைவரும் நீராடித் தூய்மையாக நெற்குற்றுவார்கள். அரிசியான பின்பு களைந்து மா இடிப்பார்கள். எல்லாம் அவர்கள் கூட்டுறவுமுறையிலேயேநடைபெறும். உப்பிடாமல் மாவைப் பிசைந்து, தேங்காயைச் சிறு சிறு துண்டுகளாக்கி, அதிற்போட்டு, அந்த இளநீரையேவிட்டு நன்றாகப் பிசைந்து அடையும் உருண்டையுமாகச் செய்து, நீராவியில் வைக் கோலைப்பரப்பி, அதன்மேல் வைத்து, மேல் ஆவி போகாத வண்ணம் மூடி வேகவைப்பார்கள். அன்று கூடியிருக்கிற பெண்களில் சிறுமிமுதல் அனைவருக்கும் அளவுக்கேற்ப ஓரடையாகத் தயார் செய்யப்பெறும். பிறகு ஈனுக்கன்றின் சாணத்தால் பிள்ளையார்செய்து, அதற்குப் புன்கஇலை, புளிய இலைகளைக்கொண்டு சூழல் அமைத்து, அதன் நடுவிலே பிள்ளை யாரை எழுந்தருளச் செய்வார்கள். தேங்காய் பழம் பாக்கு வெற்றிலைகளைத் திருத்திப் பரப்பி, கொழுக்கட்டைகளையும் பரப்பி வைத்துவிட்டுத் தூபமிட்டுக் கதைசொல்லத்தொடங்கு வார்கள். அனைவரும் ஒருங்கிருந்து அவரவர்களுக்கு உரிய அடைகளை உண்பார்கள். பொழுதுவிடிய நான்கு நாழிகைக்கு முன்பே எழுந்து இரவு கொழுக்கட்டை வேகவைத்த வைக் கோல், புன்கந்தழை, புளியந்தழை; பூசைசெய்த பூ, இலை எல்லாவற்றையும் கொண்டுபோய், ஆற்றில்விட்டுப் பிள்ளை

Koviloor Digital Library

யாரையும் வழியனுப்பிவிட்டு. வாய்பேசாமல் நிறைகுடத்தோடு புனிதமாக மஞ்சள் குங்குமம் அணிந்து வெற்றிலையும் சுவைத்து, விடு திரும்புவார்கள். அன்றுமுழுதும் யாருக்கும் காசு தானியம் முதலியன கொடுக்கமாட்டார்கள்.

கதை: ஓர் ஊரில் ஒரு வேளாளன் இருந்தான். அவனுக்கு ஏழு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். மனைவி யிறந்துவிட்டாள். மிக ஏழ்மையான குடும்பம். தந்தையும் பிள்ளைகளும் அன்றைக்கன்று கூலிவேலைசெய்து நெற்கூலி வாங்கி வருவார்கள். அந்த நெல்லை அந்தப்பெண் குற்றிப் பொங்கி இடுவாள். ஆனால் அவர்கள் அதிருஷ்டம் வறுமையின் எதிரொலி; வாங்கிவரும் கூலிநெல் அவ்வளவும் பதராகவும் உமியாகவும் ஆகும். அரிசி அரைவயிற்றுக் கஞ்சிக்குக் கூட ஆகாது. பொறுமைக்குச் சிகரமாகிய அந்தப் பெண் அதனைப் பக்குவமாக்கி உழைப்பவர்களுக்கு அளித்துவிட்டுத் தான் வடிகஞ்சியையுண்டு காலத்தைக் கழித்துவந்தாள். இவர்கள் குடித்தனம் இப்படி நடந்து வருகிறது.

ஒருநாள் ஔவைப் பாட்டிக்குக் கடுமையான பசி. இந்த விடு பார்த்து உணவுக்கு வந்தாள். வீட்டிலோ ஆடவர்கள் எல்லாரும் வேலைக்குப் போயிருந்தார்கள். ஔவை வெளித் திண்ணையில் நின்றுகொண்டே, ‘அம்மா பசி! அன்னம்போடு’ என்று இரைந்தாள். அந்தப்பெண் அரை ஆடையை உடுத்தியிருந்தமையால் வெளியில்வந்து பதில் சொல்லாமல் வெட்கி, அரைக்கதவைத் திறந்து வைத்துக்கொண்டு, ஒளிந்திருந்தபடியே ஔவையாச்சே எப்படி இல்லையென்பது என்று பயந்து தேம்பித்தேம்பி அழுதாள். ஔவை மனம் இளகியது. ‘ஏன் அம்மா அழுகிறாய்’ என்று கேட்டாள். இல்லை பாட்டி! எனக்கு ஏழு அண்ணனும் அப்பாவும் இருக்கிறார்கள். அவ்வளவு பேரும் நன்றாக வேலை செய்பவர்கள். நிறையத்தான் கூலிவாங்கி வருகின்றார்கள். ஆனால் அந்த நெல் எல்லாம் எங்கள் அதிர்ஷ்டம் குத்தக்குத்த உமியும் பதருமாகப் போகின்றது. அரை வயிற்றுக்குக்கூடப் பற்றாமற்போகின்றது. அந்த நிலையில் எப்படிப்பாட்டி பிச்சை போடுகிறது’ என்று அழுதாள். ஔவையார் மனமிளகி, ‘அப்படியா அம்மா! இந்த நிலையை ஏன் முன்னமே சொல்லவில்லை, போனாற்போகிறது, இந்தா நான் பிச்சையெடுத்த அரிசியில் கால்நாழிகை இருக்

Koviloor Digital Library

கிறது. ஒரு தேங்காய் இருக்கிறது. என்னை நினைத்துக்கொண்டு செவ்வாய்ப் பிள்ளையாரைக் கும்பிடு, அப்புறம் பாரேன் உனக்கிருக்கிற அதிர்ஷ்டத்தை' என்று சொன்னாள். பாட்டி வார்த்தையைக் குரு உபதேசமாகக்கொண்ட அந்தப் பெண் அந்த அரிசியையும் தேங்காயையும் வாங்கி வைத்துக்கொண்டு செவ்வாய்க்கிழமை என்று வரும் என எதிர்நோக்கியிருந்தாள்.

செவ்வாய்க்கிழமையும் வந்தது. அண்ணனும் தகப்பனும் உண்டு உறங்கப்போன பின்பு அவள் நீராடி நோன்பு கும்பிடத் தொடங்கினாள். அடுப்பு பற்றவைக்க நெருப்பில்லை. என்ன செய்வாள் பாவம். ஊரடங்கிவிட்டது. இவளை மதித்து அந்த அர்த்தராத்திரியில் நெருப்பளிப்பார் யார்? தெய்வமே கதி என்று, எங்கேயாவது வெளிச்சம் தெரிகிறதா? பார்ப்போம்! தெரிந்தால் அங்கேபோய் நெருப்பு எடுத்துவருவோம் என்று எண்ணினாள். ஊருக்கு வெளியே போனாள். புன்கமரமும், புளியமரமும் இணைந்து உயர்ந்து வளர்ந்திருந்தது. அதில் ஏறி புன்கங்கிளையில் ஒருகாலும், புளியங்கிளையில் ஒருகாலும் வைத்துக்கொண்டு தொலைதூரம் பார்த்தாள். அங்கே ஓரிடத்தில் வெளிச்சம் தெரிந்தது.

மிகுந்த மகிழ்ச்சி. கீழே இறங்கினாள். அந்த இடத்திற்கு ஓடினாள். அது ஒரு சுடுகாடு. பிணம் எரிந்துகொண்டே இருந்தது. இவளுடைய தளராத உறுதி எதனையும் பொருட்படுத்தவில்லை. நெருப்பெடுக்கப் பரபரந்தாள். பிணஞ்சுட்டுக் கொண்டிருந்த வெட்டியான் 'இந்த வேளையில் வந்த நீ யாரம்மா? பேயா பிசாசா? பெருமானுடைய பிறப்பா? உள்ளதைச் சொல்' என்றான். அந்தப்பெண் 'நான் பேயுமல்லள்; பிசாசுமல்லள்; பெருமானுடைய பிறப்புத்தான்; நான் ஒரு நோன்பு எடுக்கப்போகிறேன்; அதற்கு நெருப்பு வேண்டும்' என்றாள். அவன் 'அப்படியானால் இந்தா என் கையிலே கிடைத்தது கால்நாழியரிசியும் தேங்காயும்; இதனையும் கொண்டுபோய் எனக்காகவும் பிரார்த்தனைசெய்' என்று சொல்லி நெருப்பையுங் கொடுத்தான். பெண் அவ்வாறே வாங்கிக்கொண்டு வருகிறபோது தனக்கு நெருப்பு இருக்கின்ற இடத்தைக்காட்டி உதவிசெய்த புன்கந்தழையையும், புளியந்தழையையும் பறித்துக் கொணர்ந்தாள்.

நோன்பெடுக்கத் தொடங்கினாள். அப்போது அந்தப் பெண்ணுள்ளம் எண்ணியது. அந்த வெட்டியான் இல்லா

Koviloor Digital Library

விட்டால் நெருப்புக் கிடைத்திருக்குமா? அந்தப்பிணம் அந்த நேரத்தில் எரியவில்லையானால் நெருப்பு எங்கே? என்பவற்றை எண்ணினாள். அவர்கள் நினைவாக வெட்டியானைப்போலவும், பிணத்தைப்போலவும் மாவினால் செய்தாள். அவற்றையும் கொழுக்கட்டையோடு வைத்து வேகவைத்தாள். ஒளவைப் பாட்டியாகிய குருவைத் தியானித்துக்கொண்டே அவள் சொன்னபடி பிள்ளையார்பூசை பண்ணினாள், உறுதி உயர்வு அளித்தது. ஊக்கமும் விளைந்தது. நிலையும் உயர்ந்தது. நினைத்தவண்ணம் செல்வ நிலையுயர்ந்தது. குடும்பம் வலுத்தது. அண்ணன்மார்கள் அனைவருக்கும் மணமுடித்துவைத்தாள், ஏழைக் குடும்பம், எல்லோராலும் எண்ணிப் பார்க்கக்கூடிய அளவுக்கு மிகமிக உயர்ந்துவிட்டது.

அண்ணன்மார்கள் எண்ணுகிறார்கள்; நாம் மட்டும் மண முடித்துக் கொண்டோமே! நமது வீட்டுத் தெய்வம்போல விளங்கும் தங்கைக்குத் தக்க கணவனைத்தேடிக் கொடுத்து விடவேண்டாமா?என்று. காலங்கூடிற்று. கடவுள் கருணையுந் துணைசெய்தது. தக்க செல்வர் மணந்துகொண்டார். புக்க வீட்டுக்குப் போகின்ற அந்தப்பெண், தனது அண்ணிகளை அழைத்து மிக இரகசியமாக 'அம்மா அண்ணிமார்களே! நமது குடும்பம் முன்பு எப்படி இருந்தது தெரியுமா? இன்று நீங்கள் வீட்டு விளக்குகளாக வரக்கூடிய அளவுக்கு நமக்கு அருள்செய்தவர் விநாயகரே: ஒளவையார் உபதேசப்படி, செவ்வாய்க்கிழமைதோறும். தவறாமல் அவரை இவ்வண்ணம் பூசித்துவந்தேன்; நீங்களும் தவறாமல் செவ்வாய்ப்பிள்ளை யாரைக் கும்பிடுங்கள்; நீங்கள் எவ்வளவு பணக்காரிகளாக இருந்தாலும், இரண்டு வீட்டிலே அரிசி பிச்சையாக வாங்கித் தான் இந்தநோன்புநோற்கவேண்டும்; செய்த கொழுக்கட்டை மீதமிருந்தால் வேறுயாருக்கும் கொடுக்காதீர்கள்; எலி, பூனை, நாய் தின்னப் போடாதீர்கள்: விரதமிருந்த மறுநாட்காலையில் பூஜைசெய்த அப்பொருள்களையும், பிள்ளையாரையும் மிக பயபக்தியுடன் வழிகூட்டி அனுப்புங்கள்; அன்று யாருக்கும் எதையும் கொடுக்காதீர்கள்; இது உறுதி – உறுதி' என்று சொல்லிப் போனாள்.

நாட்கள் கழிந்தன. செல்வம் நிலைமையை மாற்றியது. அண்ணிமார்கள் உள்ளத்தில் செல்வச்செருக்கு மூடியது. கடவுள்மீதுள்ள அன்பு குறைந்தது. நோன்பில் அவள்

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

செய்யக்கூடாது என்ற குற்றங்களையெல்லாம் செய்தார்கள். அன்பு குறைய வளங்குறைந்தது; வளங்குறைய உளங் குறைந்தது; உளங்குறைய உள்ள செல்வமும் குறைந்தது. ஊர் ஊராகப்போய்ப் பிழைக்கவேண்டிய நிலையும் வந்து விட்டது. இந்நிலையில் சீமாட்டியாக வாழுகின்ற தங்கை தமையன்வீட்டில் சீராட வந்தாள். நிலைமையை உணர்ந்தாள். அடிப்படையான காரணங்களையும் அறிந்தாள். அண்ணிமார் களுக்கு அறிவூட்டினுள். அறிவு திருந்தப்பெற்ற அண்ணி மார்கள் முன்போலவே செவ்வாய்ப்பிள்ளையார் பூசையை மேற்கொண்டு சிறப்பாக நடத்தினுர்கள். செல்வமும் பெருகிற்று.

செவ்வாய்ப்பிள்ளையார் கும்பிட்டால் அனைவரும் இப்படி வாழலாம் என்ற உறுதி நமதுநாட்டு மங்கையர்க்கரசியர் களிடம் மலிந்திருக்கிறது. அதனுலேதான் இந்நோன்பில் அவர்களுக்கு அழுத்தமானபற்று.

விளையாட்டில் பிள்ளையார் :

பந்து முதலியன ஆடும்போது கைவாசி வருவதற்காக ஆடும் முதல் ஆட்டத்தைப் பிள்ளையார் ஆட்டம் என்று சொல்வது வழக்கமாகும். அப்படியே சொக்கட்டான் தாயம் முதலியன ஆடும்போதும், முதலில் பிள்ளையாருக்கு என்று உருட்டுவது வழக்கம். கிராமப்பகுதிகளில் பழங் காலத்தில் பிள்ளையார்பந்து என்றே ஒரு விளையாட்டுவகை உண்டு. சிறுவர்கள் முழுச்செங்கல் ஒன்றைக் குத்திட நிறுத்தி வைப்பார்கள். அந்தக்கல்லைப் பந்தால் தலைக்கு ஒருதடவை அடிப்பார்கள். யார் அடித்தபோது அந்தக்கல் விழுந்து விடுகிறதோ அவர்கள் மற்றக் கட்சிக்காரர்களைப் பந்தால் அடிப்பார்கள். அவ்வண்ணம் அடிக்கும்போது தங்கள் கட்சிக்காரர்கள் பலரிடமும் பந்து இருக்கிறமாதிரிக் கையைத் துணியால் மூடிக்கொண்டு ஓடிஓடி அடிப்பது வழக்கம். அடித்தவர்கள் வென்றவர்கள்; அடிபட்டவர்கள் தோற்ற வர்கள். இவ்வண்ணம் குழந்தைகள் விளையாட்டிலும் பிள்ளையார் கலந்திருக்கின்றுர்.

Koviloor Digital Library

பிள்ளையார் ஆயுதங்கள்

காலதேவன் நமது வாழ்க்கைப்பாதையைப் பலவேறு வழிகளில் பலநாட்டுமக்களுடைய கூட்டுறவைக்கொண்டு கணந்தோறும் மாற்றி அமைக்கின்ருன். அதனுல் நமது அக வாழ்வு புறவாழ்வு இரண்டுமே மாறுகின்றன. நமது பண்டைய வாழ்வியலின் துணைப்பொருள்களான பாத்திர பண்டங்களும், போர்க்கருவிகளும் இன்று வேற்றுருவத்தில் வேறு வேறு பெயர் தாங்கிநிற்கின்றன. சில மறைந்தே போயின. சில பெயர்மட்டும் மறைந்துபோயின. ஆதலால் அவற்றைப்பற்றி இந்த இருபதாம் நூற்ருண்டில் வாழ்கின்ற நாம் தெரிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாதது.

கருவிகள், கருவிகளாக இருந்தகாலத்திலே காரியப்பாட்டிற்கு வேண்டிய உருவும், தகுதியும் உடையனவாக இருந்தன. அவற்றில், ஆடம்பரமும், அணியழகும் அடி வைக்கத் தொடங்கியகாலத்து, எத்தனையோ இழைப்புவேலைகளும் கொடிக்கருக்கு வேலைகளும், சிற்ப சித்திர வேலைகளும் கலந்துவிட்டன. அதனுல் அவை ஆயுதங்களா? அல்லது அணியா? என்றுகூட அறியமுடியாதநிலை நமக்கு ஏற்பட்டு விட்டது. அவ்வண்ணமே (ஆயுதங்களை) போர்க்கருவிகளை மக்கள் கையாண்டகாலத்துக் கருவிகளாகவே இருந்தன. மன்னர்களும் மந்திரிகளும் கையாளுவனவற்றில் சித்திரம் கலந்தன. கடவுட் கைகளில் இருப்பன என்றும் காட்சிப் பொருள்களாகவே இருப்பதால் அவை அழகுப்பொருள்களாகவே ஆயின. ஆதலால் அவைகளின் இயற்கையமைப்பையும், இன்று கடவுளர் கரங்களில்விளங்கும் அமைப்பையும் தெரிந்துகொள்ளவேண்டியது இன்றியமையாதது. மற்றும், நாட்டிற்குநாடு கருவிகளினுடைய அமைப்பு மாறியிருக்கின்றது.

கல்லுக்கு உயிர்கொடுத்து, கற்பனைக்கு உறைவிடமாக்கி, கலைத்தெய்வத்தின் கருணையை விளங்கச்செய்த பல்லவர்களில் முற்காலப் பல்லவர்கள் சாளுக்கியர்கள் இவர்கள் சிற்பங்களில் கருவிகளின் அமைப்புநிலை வேறு. அவற்றினின்றும் பிற்காலச் சாளுக்கிய, பல்லவ, ஹொய்சள மன்னர்களின் சிற்பங்களில்

Koviloor Digital Library

உள்ள கருவிகளின் அமைப்பு முற்றிலும் வேறுபட்டது. அவற்றைக் கிடைத்தவரையில் கணபதி கரங்களிலுள்ள கருவி வகைகளைக்கொண்டு காட்டமுயலுவோம்.

1, பாசம் : இது கயிறு. பகைவர்கள் கையையும், கால்களையும் கட்டப் பயன்படும். ஒருகயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்கு முடிச்சாக இடப்பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி. நாகமே பாச மாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.

2. அங்குசம் : இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும், குத்தியடக்கக் கூடிய ஒரு கூரிய நேரான பகுதியுமுடையது. நீளமானகழி களிற் செருகப்பெற்றிருக்கும். யானைப்பாகன் இதனை யானைக் காதிலே மாட்டித் தொங்கவிட்டிருப்பான். இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக்கருவிகளில் இதுவும் ஒன்று.

3. தந்தம் : ஒடிந்த யானைக்கொம்பு.

4. வேதாளம் : தசை நாரில்லாத, அச்சமும் அரு வெறுப்புந் தரத்தக்க பூத வடிவாக இருப்பது. இதனை ஏவிப் பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

5. சக்தி : இதுவேல். ஆறு கூரிய பகுதிகளையுடையது. தகட்டு வடிவானது. முருகனுக்குச் சிறப்பானது. விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிருக்கிறுர். இது பிடித்தபடியே எறியும் கருவிகளில் ஒன்று. வேல்மட்டும் இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது. 'யானையெறிந்த வேல் ஏந்தல் இனிது' என்பர் வள்ளுவரும்.

6, அம்பு : (Arrow) இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப்பெறுங்கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனிமட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகி யிருப்பார்கள். அதனது வால்பக்கத்தில் கழுகின் இறகுகளை

Koviloor Digital Library

யும், மற்ற பறவையின் இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டு வது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

7. வில்: இது அம்பு எய்யப் பயன்படுவது. மூங்கில், சிலையென்னும் மரம் முதலான வளையக்கூடிய நார்மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல், அல்லது நார்க்கயிற்றானியன்ற நாண் கட்டப்பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக்கட்டி அதன்நடுவில் அம்பை வைத்து விடுவது வழக்கம். எவ்வளவுக்கெவ்வளவு வில்லின் வலியும், நாணின் உறுதியும், இழுத்துவிடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அம்பின் வேகமும், தைக்கும் வன்மையும் மிகும். அம்புபட்டவுடன்இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம்; அம்பின் நுனி பிறைமதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

8. சக்கரம்: இது விஷ்ணுவுக்குரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு, அனைவருங்கும் நன்கு தெரிந்ததே. இதில் இரு வகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது. இது அழகுப் பொருளாக எத்தனையோ வடிவங் களிற் காணப்பெறுகின்றது.

9. கத்தி: இது இன்று அறவே மறந்துபோன கருவி. தலைப்பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன் படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டை ஓடுபோலவும், கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்பதுண்டு. இதனைக் குத்துக் கத்தியாகிய 'பிச்சுவா' என்பாரும் உளர்.

10. கேடகம்: இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும் வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும். சதுரம், நீளச்சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பல வடிவங்களிற் செய்யப்பெறும்.

11. சம்மட்டி: இது இரும்பாலியன்ற கனத்த தலைப் பகுதியை உடையது. இதன் நடுவில் தொளையிடப்பெற்றிருக் கும். இதில் கைபிடிக்கும் சிறுகழியைக் கோத்திருப்பார்கள்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library



சித்திபுத்தி விநாயகர்

திருவாவடுதுறை ஆதீனம்

Koviloor Digital Library

வல்லபைவிநாயகர்

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

புவனகணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

பிங்கள கணபதி.

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

சக்தி கணபதி

பஞ்சமுக கணபதி

பஞ்சபூத கணபதி



மூஷிக கணபதி

Koviloor Digital Library

கணபதியின் ஆயுதங்கள்



Koviloor Digital Library


15

16


17

18

19

20


21

22

23


24


25

26

27

28


29

Koviloor Digital Library

ஜாவாவில்

ஜப்பானில்

சைனாவில்

நேபாளத்தில்

இந்தியாவில்

Koviloor Digital Library

ஹரித்ராகணபதி யந்திரம்



விநாயகர் ஆலய அமைப்பு



Koviloor Digital Library

வக்ரதுண்ட விநாயக யந்திரம்



Koviloor Digital Library

உச்சிஷ்ட விநாயக யந்திரம்



Koviloor Digital Library

திரைலோக்ய மோகன யந்திரம்



Koviloor Digital Library

சக்தி விநாயக யந்திரம்



Koviloor Digital Library

லக்ஷ்மீ விநாயக யந்திரம்



Koviloor Digital Library



ஸ்ரீ காசி துண்டி விநாயகர்

Koviloor Digital Library

இதுவும், உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப்பெறும்.

12. கதை : குண்டாந்தடி. இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையைவிட்டு அகலாதபடி காவலாக இருந்து உடையவனைப் பாதுகாப்பது.

13. நாகபாசம் : இதுவும் பாசவகைகளுள் ஒன்று.

14. சூலம் : இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப்பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோக்கப் பெற்றிருக்கும்.

15. குந்தாலி : இன்று, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக் கூரிய நுனியோடு இருக்கும். இரும்பானியன்ற கருவி இது. இதில் பலவகைகள் உள்ளன.

16. மழு : இன்று மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது. 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்கும் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. திப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.

17. கொடி : இது வெற்றிக்கு அறிகுறியானது, துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப்பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கிறார்.

18. தண்டம் : இது நீளமான கைத்தடி. மரத்தாலானது.

19. கமண்டலம் : நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள், அந்தணர்கள் தங்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவாயினும், திருவுருவ நிலையை அறிந்துகொள்ள உதவும் கருவிகள்.

20. பரசு : இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன் வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப்பெறும் கருவியாகும்.

Koviloor Digital Library

21. கரும்புவில் : கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைத் தெய்வங்களும், காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பர்.

22. சங்கம் : இதுவும் விஷ்ணுவுக்குரிய சிறந்த ஆயுதம். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்கி அடக்கச்செய்யும் அச்சக் கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.

23. புஷ்பபாணம் : தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம். இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போகநிலையில் மற்றத்தெய்வங்களும் தாங்குவதுண்டு.

24. கோடரி : மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படுவது. இரும்பால், வாய் கூர்மையாகப் பின்பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.

25. அக்ஷமாலை : உருத்திராக்ஷமாலை. இது தனித் தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதும் உண்டு. மிகப் பழைமையான திருவுருவங்களில் இது ஓர் ஆயுதம்போல் இருப்பதைக் காணலாம்.

26. சாமரம் : இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப்பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுதவரிசையில் இது இடம் பெற்றிருக்கிறது.

27. கட்டுவாங்கம் : இது நீளமான கத்தி. போரில் படைகளை வெட்டப் பயன்படுவது. இதில் ஒருமுனையுடையதும் இருமுனையுடையதும் என இருவகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியுடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பது வழக்கம்.

28. தீ அகல் : ஒரு தீப்பிழம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவும் இப்படியேதான் இருக்கும்.

29. வீணை : இது ஓர் இசைக்கருவி. போர்க்காலங்களில் தளர்ந்த படை வீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது.

Koviloor Digital Library

காணபத்யமதம்

இத்தகைய பெருமைவாய்ந்த கணபதியையே முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடும் ஒருமதம் நமது நாட்டில் உண்டு. வடநாட்டில் இந்த மதம் பரவத்தொடங்கிய காலம் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்றான் என்று சங்கர திக்விஜயத்தில் ஆனந்த தீர்த்தர் குறிப்பிடுகிறார்.

கொள்கை: கணபதி உலகக்கடவுள். படைத்தலாதி ஐந்தொழில்களையும் செய்பவர். சிவன் முதலிய எல்லாக் கடவுளருக்கும் தலைவர்.

கண்கண்ட தெய்வம் நீயே. படைப்போன் நீயே. காப்போன் நீயே. அழிப்பவனும் நீயே. உயர்ந்த பொருள்களுக்கெல்லாம் உயர்ந்த பொருளும் நீயே. எல்லாருக்கும் எல்லாவற்றிற்கும் வன்மையை வழங்குவாய் நீ. உலகமுழுதும் உன்னிடத்தில் உண்டாயின. உன்னில் ஒடுங்குகின்றன. பஞ்சபூதங்களுக்கும் பிறப்பிடம் நீயே. நீயே பிரமன்; நீயே விஷ்ணு; நீயே ருத்திரன். அனைவருக்கும் முதல்வன் நீயே. ஓம் கணபத்யாய நம;

என்பது அவர்கள் செபிக்கும் மந்திரம்.

இவ்வாறு வழிபட்டவர்கள், மறுமையில் கணபதியின் உலகம் செல்வார்கள் என்பது அவர்கள் முடிபு. அவர்களால் வழிபடப் பெறுகின்ற கணபதி சக்திகணபதியேயாம்.

அகச்சமயத்தாரும் புறச்சமயத்தாரும்
வழிபடும் கணபதிகள் :

1.	சாக்தேயர்	சக்தி கணபதி
2.	சைவர்கள்	சிவ கணபதி
3.	வைணவர்கள்	வீஷ்ணு கணபதி
4.	சாங்கியர்	தத்துவ கணாதிபதி
5.	பூர்வ மீமாஞ்சகர்	தேவ கணாதிபதி
6.	வையாகரணிகள்	சப்தகணபதி
7.	ஆயுள்வேதியர்	மூல கணபதி

என இங்ஙனம் பெயரிட்டு வழிபடுகின்றனர்.

Koviloor Digital Library

உபாசனை

உபாசனை மனிதனை உயர்த்துகிறது. உயர்வற உயர்ந்த ஒருபொருளை உள்ளக்கிழியின் உருவெழுதி உற்றுநோக்க — உற்றுநோக்க உள்ளத்திலுள்ள பள்ளங்களும் கள்ளங்களும் மறைகின்றன. மனம் மலையாகிறது. அஞ்சாமையும் அசையாமையும் உறுதியும் படிகின்றன. அதனால் மனிதன் பேரறிவு படைத்தவனாகிறான். அதற்காகவே நம்முன்னோர்கள்—பெருந்தவமுனிவர்கள் மறைமொழிகளாகிய மந்திரத்தையும், அதனைச் செபிக்கும் முறையையும், தியானிக்குந் திறத்தையும், பயனையும் தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். கற்பனை, கவிகளையும் கவிஞர்களையும் உயர்த்துவதுபோலக் கடவுளைப் பற்றியும் - அவனேதானேயாகி இருக்கின்ற நிலையினைப்பற்றியும் மனிதன் கற்பனை செய்யச்செய்ய, கற்பனை உண்மையாகிறது. இன்று உலகத்தில் காணப்பெறுகின்ற எந்தச் செயற்படு பொருளும் முன், கற்பனையிலிருந்து கனிந்து கைவழியாக செய்பணியாக மாறியிருக்கின்றது. ஆதலால் அனைவரும், தான் விரும்பித் தொழும் கடவுளாகக் கற்பனைசெய்தும், தன் உள்ளத்தை அவருடன் உறவாடச்செய்து விளையாடுவது போலவும், பணிசெய்வதுபோலவும், அவர் பயன்கொடுப்பது போலவும், பயனைத் தான் ஆசையோடு கைநீட்டி ஏற்றுக் களிப்பதுபோலவும் வேறான நிலையினின்றும் பழகிவருதல் மிக இன்றியமையாதது. இந்நிலை முற்கூறிய கற்பனை நிலையை எய்துவிக்கும். அது வேறற நிற்கும் விழுமிய நிலையைக் கொடுக்கும். அதற்காக ஏற்பட்ட அருந்துணைகளே மந்திரங் கள். மந்திரங்களில் மனம் ஊன்றிநிற்க யந்திரங்கள் பெரிதும் உதவிசெய்யும். மந்திரம் உயிர்; யந்திரம் உடல், உபாசகன் யந்திரத் திருமேனியினிடமாக, மந்திரப் பொருளாகிய கடவுள் விளங்குவதைக் கண்டு களிப்பவன்.

நமது நாட்டில் இடைவிடாத செப தப தியானத்தாலேயே, பல பெரியோர்கள், கல்வி உணர்வு நுண்ணுணர்வு இவற்றில் யாரும் அடையாத பெருநிலை அடைந்திருக்கிறார்கள். நன்மரபில் வந்த பலரும் இவற்றாலேயே அளவற்ற நினைவு வன்மையைப் பெற்றுவருகிறார்கள். அத்தகைய தெய்வ சாதனமே தியானம். அதற்கு உரிய உறுதுணையே மந்திரம்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆதலால் பிள்ளையாருக்குரிய மந்திரங்களையும், பூசனை முறைகளையும் இங்குச் சிறிது சிந்திப்போம்.

உபதேசம் தேவை: மந்திரங்கள் ஏடுகளில் எழுதப்பெற்றிருந்தாலும், அதனை உள்ளபடி உணர்ந்துகொள்ள - செபிக்க உபதேசம் தேவை. உபதேசத்திற்குத் தீக்ஷைகள் மிக இன்றியமையாதன. தீக்ஷையென்பது உபதேசத்திற்குத்தக மனிதனைப் புனிதமாக்குவது. தீக்ஷையின் விதிகளையும், விரிவையும், சிவாகமங்களிலும், அவற்றின் சாரமாகச் செய்யப்பெற்ற பத்ததிகளிலும் காணலாம். கணபதி மந்திர உபதேசத்திற்குரியது கணபதி தீக்ஷை. இது வேதிகையில் 'மண்டலம்' இட்டே செய்யப்பெறும். கணபதி தீக்ஷைக்கு இடப்பெறும் மண்டலத்திற்குக் 'கணபதி பத்திரமண்டலம்' என்று பெயர்.

மண்டலம் அமைக்குமுறை: பூசைக்கு, தீக்ஷைக்கு என்று வரையறுக்கப்பெற்ற புனிதமான இடத்திலே, உயர்ந்த வேதிகையையாவது அறுகாற் பீடத்தையாவது அமைத்து, அதன்மேல் சதுரவடிவில் குறுக்கும் நெடுக்குமாகப் பதினேழு கோடுகளைக் கீறினால் நூற்றுத்தொண்ணூற்றாறு கட்டங்களாகும். இந்தச் சதுரத்தினைச் சுற்றி நாற்புறமும் ஒரு சதுரமும் அதனைச்சுற்றி யொருசதுரமும் கீறிக்கொள்ளுதல் வேண்டும். கோட்டமிட்ட சதுரத்தில் உள்ள நான்கு மூலைகளிலும் உள்ள மூன்று கட்டங்களைப் பிறைமதிபோல வெண்மையான தானியத்தாலாவது, மாப்பொடி முதலியவற்றாலாவது சித்திரித்தல் வேண்டும். அதற்கு நேரேயுள்ள நான்கு கட்டங்களைச் சங்கிலிகளாக, கருமையல்லது நீலநிறமான தானியங்களால் - அல்லது பொடிகளால் அலங்கரித்தல்வேண்டும். நடு மையத்தி லுள்ள பதினாறு கட்டங்களைத் தாமரைப்பூப்போல வரைதல் வேண்டும். பிறைக்கும், சங்கிலிக்கும் இருபக்கங்களிலும் உள்ள ஒன்பது கட்டங்களைக் கொடியாக, பச்சை பொன்னிறம் செந்நிறம் உள்ள தானியம் அல்லது பொடிகளைக் கொண்டு சித்திரிக்கவேண்டும். நான்கு பக்கங்களிலும் இவற்றின் இடையிலுள்ள இருபது கோட்டங்களிலும், கணபதி வடிவத்தை எழுதுதல்வேண்டும்.

இவ்வண்ணம் அமைக்கப்பெற்ற கணபதி பத்திர மண்டலத்தின் மீதுதான். மூர்த்தியையோ, அல்லது கணபதியை

Koviloor Digital Library

ஆவாகனம் செய்யப்பெற்ற கும்பத்தையோ அல்லது யந்தி ரத்தையோ வைத்துப் பூசித்தல்வேண்டும்.

இனி, முறையே கணபதியினுடைய பலவேறு மூலமந்தி ரங்களையும் அவற்றின் விதிமுறைகளையும்பற்றிக் காண்போம்.

செபிக்கும் முறை: சூரியன் உதிக்க ஐந்துநாழிகைக்கு முன்னமேயே நித்திரையைவிட்டு எழுந்து, நாட்கடன்களை முடித்துக்கொண்டு, குளிர்ந்த நீரில் முழுகி நன்கு தோய்த் துலர்ந்த ஆடைகளையேனும், பட்டையேனும் உடுத்திக் கொண்டு, நல்ல முகூர்த்தத்திலே நல்ல இடத்திலே அமர்ந்து செபிக்கத் தொடங்குதல்வேண்டும்.

செபிக்கும் இடம்: நல்ல காற்றோட்டம் உள்ளதாகவும், வெளிச்ச மானதாகவும், சுற்றுப்புறங்கள் தூய்மையானதாகவும் சந்தடியும் மக்கள் நடமாட்டமும் இல்லாததாகவும், அமை திக்கும் ஆனந்தத்திற்கும் உறைவிடமானதாகவும் இருத்தல் வேண்டும். வீட்டிற்கு அடுக்களை எவ்வளவு அவசியமோ, பணஅறை எவ்வளவு அவசியமோ அதைவிடத் தியான, பூசை அறை அவசியம், பூசையறை பூசைக்கே உரியதாக இருத்தல் வேண்டும். தாவுகின்ற மனம் சூழல், பழைய நிகழ்ச்சி, புதிய காட்சி இவைகளைப்பற்றி அடிக்கடிப் புறம்பே செல்லும். அங்ஙனம் போகாதவண்ணம் நின்று தியானிப்பதற்குத் தூய்மையான இடமே துணைபுரியும்.

முதற்கண், பிள்ளையாரை வணங்கிக்கொண்டு, நாந்தி சிராத்தம்வரை செய்து முடித்துக்கொண்டு, முற்கூறிய இலக்கண அமைதியோடு கூடிய தியான கூடத்தை அடை தல்வேண்டும். கிழக்கு நோக்கியேனும், வடக்கு நோக்கி யேனும் கூர்மாசனத்தில் இருந்துகொண்டு, மூலமந்திரத்தால் மூன்றுமுறை ஆசமனஞ் செய்து, பிராணுயாமஞ் செய்து, பூத சுத்தி ஆத்மசுத்தி முதலியவைகளையும் செய்துகொண்டு, உள் வெளி மாதிருகா நியாசங்களை முறைப்படிச் செய்து, பிற்கூறப் பெறும் முறைப்படி இதற்கே சிறப்பான நியாசங் களையும் செய்து கொள்ளுக.

கணேச சடாக்ஷர மூலமந்திரம்: ஓம், வக்கிர துண்டாய ஹூம், பார்க்கவர் இருடி. அனுஷ்டுப் சந்தஸ். விக்நேஸ்வரர் தெய்வம். 'வம்' பீஜம். 'யம்' சக்தி. அடியேனுடைய விருப்ப

Koviloor Digital Library

மெல்லாம் நிறை வெய்துதற்காகவும், வீடுபேறெய்துவதற்காகவும் செபிக்கிறேன் என்று சங்கற்பித்துக்கொண்டு நியாசங்களைச் செய்க.

ரிஷி முதலான நியாசம் :

தலையில்:	ஓம் பார்க்கவ மகரிஷயே நம:
முகத்தில்;	ஓம் அனுஷ்டுப் சந்தஸே நம:
மார்பில்:	ஓம் விக்நேச தேவதாயை நம:
உந்தியில்;	ஓம் வம் பீஜாய நம:
கால்களில்:	ஓம் யம் சக்தயே நம:
உடல் முழுதும்:	ஓம் விநியோகாய நம:

என்று தான் செபிக்கப்போகும் மந்திரத்திற்கு உரிய ரிஷி முதலானவர்களைத் தம்முடைய உடலில் நியாசம் செய்து கொள்ளுக.

கரநியாசம்:

ஓம் வம் அங்குஷ்டாப்யாம் நம:	(பெருவிரல்)
ஓம் க்ரம் தர்ஜநீப்யாம் நம:	(சுட்டுவிரல்)
ஓம் தும் மத்யமாப்யாம் நம:	(நடுவிரல்)
ஓம் டாம் அநாமிகாப்யாம் நம:	(மோதிரவிரல்)
ஓம் யம் கநிஷ்டகாப்யாம் நம:	(சிறுவிரல்)
ஓம் ஹூம் கரதல, கரபிருஷ்டாப்யாம் நம:	(உள்ளங்கை, புறங்கை)

அங்க நியாசம்:

ஓம் வம் ஹ்ருதயாய நம:	(மார்பில்)
ஓம் க்ரம் சிரஸே ஸ்வாஹா	(தலையில்)
ஓம் தும் சிகாயை வஷட்	(சிகையில்)
ஓம் டாம் கவசாய ஹூம்	(உடல்முழுதும்)
ஓம் யம் நேத்ர த்ரயாய வெளஷட்	(கண்களில்)
ஓம் ஹூம் அஸ்திராய பட்	

Koviloor Digital Library

வர்ண நியாசம்:

ஓம் வம் நம:	(புருவநடுவில்)
ஓம் க்ரம் நம:	(கழுத்தில்)
ஓம் தும் நம:	(இதயத்தில்)
ஓம் டாம் நம:	(உந்தியில்)
ஓம் யம் நம:	(குறியில்)
ஓம் ஹூம் நம:	(பாதங்களில்)

தியானம்: "இளஞ் சூரியன்போன்ற நிறத்தையுடையவரும், மலர்போன்ற கரங்களில் பாசம், அங்குசம், அபயம், வரதம் இவற்றையுடையவரும், செம்பட்டாடையை உடுத்தியவரும், எல்லா இடையூறுகளையும் நீக்குபவரும், எல்லா அணிகலன்களோடும் விளங்குகின்ற அழகான திருமேனியையுடையவரும் ஆகிய யானைமுகக் கடவுளைத் தியானிக்கிறேன்"

𑌉𑌦𑍍𑌯𑌦𑍍𑌦𑌿𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌰𑍁𑌚𑌿𑌂 𑌨𑌿𑌜𑌹𑌸𑍍𑌤𑌪𑌦𑍍𑌮𑍈𑌃
𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌾𑌭𑌯𑌵𑌰𑌾𑌨𑍍𑌦𑌧𑌤𑌂 𑌗𑌜𑌾𑌸𑍍𑌯𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌸𑌕𑌲𑌦𑍁𑌃𑌖𑌹𑌰𑌂 𑌗𑌣𑍇𑌶𑌂
𑌧𑍍𑌯𑌾𑌯𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑌖𑌿𑌲𑌾𑌭𑌰𑌣𑌾𑌭𑌿𑌰𑌾𑌮𑌮𑍍 ॥

என்று தியானிக்க.

பின்னர், வேதிகையிற் செய்யப்பெற்ற கணபதி மண்டலத்திலாவது, ஸர்வதோபத்திர மண்டலத்திலாவது மண்டூகம் முதல் பரதத்வமிறுன பீட தேவதைகளைத் தியானித்து, ஸ்தாபித்து, ஓம் மண்டூகாதி பரதத்துவாந்த பீட தேவதாப்யோ நம:" என்று பீடசக்திகள் ஒன்பதையும் பூசிக்க.

பீடசத்தி பூசைமுறை:

ஓம் தீவ்ராய நம:
ஓம் ஜ்வாலின்யை நம:
ஓம் நந்தாயை நம:
ஓம் போகதாயை நம:
ஓம் காமரூபிண்யை நம:

Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library

ஓம் உக்ராயை நம:
ஓம் தேஜோவத்யை நம:
ஓம் சத்யாயை நம:
ஓம் விக்னநாசிந்யை நம: (நடுவில்)

என்று பீடசத்திகளைத் தனித்தனி பூசிக்க.

பின்னர், பொன் முதலியவற்றாலாகிய யந்திரத்தையேனும், மூர்த்தியையேனும், செம்புத் தாம்பாளத்தில் வைத்து, நெய், பால், நீர் இவற்றால் அபிடேகித்து, வெள்ளாடையால் ஒற்றி. ஓம் ஹ்ரீம் சர்வஸக்தி கமலாசநாய நம: என்று பூவால் இருக்கை அளித்து, விதிப்படி பிரதிட்டைசெய்து, மூலமந்திரத்தால் மூர்த்தியைப் பாவித்து, பாத்திய முதலான உபசாரங்களைச் செய்து விநாயகப்பெருமானுடைய ஆணையைப் பெற்றுக்கொண்டு அதன் பிறகு ஆவரணபூசை செய்க.

ஆவரண பூசை முறை:

கையில் பூக்களை எடுத்துக்கொண்டு 'ஒளியான திருமேனி படைத்த இறைவ! மிக மேலான அமுதச்சுவையில் விருப்பம் உள்ளவரே! கணபதியே! பரிவாரங்களை அருச்சிப்பதற்காக அநுமதி தரவேண்டும்' என்று புஷ்பாஞ்சலியைக் கணபதியின் மேலிட்டு,'பூசிக்கப்பெற்று மகிழ்ந்தவராக ஆகுக' என்று விண்ணப்பிக்க.

[illegible] ।
[illegible] ॥

பின்பு சக்கரத்திலுள்ள அறுகோணங்களின் கேசரங்களில் ஆறு அங்கங்களையும்பூசிக்க. அக்கினி திசையிலுள்ள கோணத்தில் தொடங்கி நான்கு திக்கிலும் நடுவிலுமாகப் பூசிக்க.

ஓம் வம் நம: ஹ்ருதயாய நம: ஹ்ருதயே ஸ்ரீபாதுகாம்
பூஜயாமி தர்ப்பயாமி (எங்கும்)
ஓம் க்ரம் நம: சிரஸே ஸ்வாஹா சிரசி ,, (தலையில்)
ஓம் தும் நம: சிகாயை வஷட் சிகாய ,, (முடியில்)
ஓம் டாம் நம: கவசாய ஹூம் கவசே ,, (கவசம்)

Koviloor Digital Library

ஓம் யம் நம: நேத்ரத்ரயாய
வௌஷட் நேத்ரத்ரயே .. (கண்ணில்)
ஓம் ஹ்ரா:ம் நம: அஸ்த்ராய பட் அஸ்த்ரே .: (அஸ்த்ர)

என்று இவ்வண்ணமாகப் பூசிக்க; பின்பு புஷ்பாஞ்சலியை எடுத்து மூலமந்திரத்துடன் 'அடைக்கலம் புகுந்தவர்க்கருள் வழங்கும் வள்ளலே! என்னியதை எல்லாம் ஈடேற்றும்; முதல் ஆவரண பூசையை அன்புடன் அளிக்கின்றேன்' என்று பிரார்த்தித்துச் சாத்துக.

ஓம் அபீஷ்டஸித்திம் மே தேஹி சரணாகதவத்ஸல ।
பக்த்யா ஸமர்பயே துப்யம் ப்ரதமாவரணார்சனம் ॥

பின்பு சக்கரத்திலுள்ள எட்டிதழ்த் தாமரையில் பூசிக்கின்றவனுக்கும் யந்திரத்திற்கும் இடையிலுள்ள திசையைக் கிழக்காகவைத்து, அதுமுதல், மோதிரவிரல் பெருவிரலிரண்டாலும் பூவையும், சந்தனக்ஷதையையும் எடுத்துக்கொண்டு எட்டுத்திக்கிலும்,

ஓம் வித்யாயை நம: வித்யா ஸ்ரீ பாதுகாம்
பூஜயாமி தர்ப்பயாமி நம:
ஓம் விதாத்ரியை நம: விதாத்ரி ,,
ஓம் போகதாயை நம: போகதாயிநீ ,,
ஓம் விக்நகாதிந்யை நம: விக்நகாதிநீ ,,
ஓம் நிதிப்ரதிபாயை நம: நிதிப்ரதிபா ,,
ஓம் பாபக்நயை நம: பாபக்நீ ,,
ஓம் புண்யாய நம: புண்யா ,,
ஓம் சசிப்ரபாயை நம; சசிப்ரபா ,,

என்று எட்டுச்சக்திகளையும் பூசிக்க.

பின்பு புஷ்பாஞ்சலியாக மூலமந்திரத்தைச் சொல்லி, முன்போலப் பிரார்த்தித்துச் சாத்தி, இரண்டாவது ஆவரண பூசையை முடிக்க. பின் அந்த எட்டிதழ்களின் நுனிகளிலும், முன்சொன்ன திக்கிலிருந்தே,

Koviloor Digital Library

ஓம் வக்ரதுண்டாயநம:	வக்ரதுண்ட ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம:	
ஓம் ஏகதம்ஷ்ட்ராயநம:	ஏகதம்ஷ்ட்ர	,,
ஓம் மகோதராய நம:	மகோதர	,,
ஓம் ஹஸ்திமுகாய நம:	ஹஸ்திமுக	,,
ஓம் லம்போதராய நம:	லம்போதர	,,
ஓம் விகடாய நம:	விகட	,,
ஓம் விக்நராஜாய நம:	விக்நராஜ	,,
ஓம் தூம்ரவர்ணாய நம:	தூம்ரவர்ண	,,

என்று அர்ச்சித்து, முற்கூறிய வண்ணமே புஷ்பாஞ்சலி செய்து மூன்றாவது ஆவரண பூசையை முடிக்க. பிறகு பூபுரத்தில் கிழக்குத்திக்குமுதலாக,

ஓம் லம் இந்திராய நம:	ஓம் வம் வருணாய நம;
ஓம் ரம் அக்நயே நம:	ஓம் யம் வாயவே நம:
ஓம் ஹம் யமாய நம:	ஓம் ஸம் குபேராய நம:
ஓம் க்ஷம் நிருதயே நம;	ஓம் சம் ஈசாநாய நம:

என்றும், கிழக்கிற்கும் ஈசானியத்திற்கும் நடுவில் ஓம் அம் பிரமணே நம: என்றும், வருண நிருதி திசையின் நடுவில் ஓம் ஹ்ரீம் அநந்தாய நம: என்றும் திக்குப்பாலகர்களைப் பூசிக்க. இது நான்காவது ஆவரணபூசை. பின் இந்திராதி திக்குப் பாலகர்களுக்குச் சமீபத்தில்,

ஓம் வம் வச்சிராய நம:	ஓம் அம் அங்குசாய நம:
ஓம் சம் சக்தயே நம:	ஓம் கம் கதாய நம;
ஓம் தம் தண்டாய நம :	ஓம் த்ரிம் த்ரிசூலாய நம;
ஓம் கம் கட்காய நம;	ஓம் பம் பத்மாய நம:
ஓம் பம் பாசாய நம:	ஓம் சம் சக்ராய நம:

என்று பத்து ஆயுதங்களையும் பூசிக்க. இங்ஙனம் ஆவரண பூசையைச் செய்து முடித்துக்கொண்டு, தூப தீப நைவேத்திய முதலியவைகளைச் செய்து, நமஸ்கரித்துப் பின் செபத்திற்குத் தொடங்குக.

Koviloor Digital Library

செப நியமம்:

ஆறலக்ஷம் உருச் செபித்தல்வேண்டும். நூற்றுக்குப் பத்து விதம் எட்டுப் பொருள்களைக்கொண்டு ஓமமும், ஓமம் பத்துக்கு ஒன்ருகத் தர்ப்பணமும், அதில் பத்துக்கொருமுறை அந்தணர் ஒம்பலும் செய்விப்பின் மந்திரம் பலிக்கும். பின் விரும்பிய பிரயோகங்களுக்கு ஏற்றவாறு செபஞ் செய்து காரியம் சாதித்துக்கொள்ளுக.

ஓர் இருதுவுக்குள் அதாவது இரண்டு மாசத்திற்குள் லக்ஷம் உருச்செபித்து, ஓம தர்ப்பணங்களை முற்கூறியவாறு செய்து, அந்தணர்க்கு அன்னமிடின் மிக நல்லது.

ஒருவன், தளராத பிரமசரிய ஒழுக்கத்துடன் ஆயிரம்நாள் விடாமல் செபித்துவரின் ஆறுமாதத்தில் அவன் வறுமை யகலும். ஆவணி விநாயக சதுர்த்தி தொடங்கி மறு சதுர்த்தி வரையில் அதாவது அடுத்த ஆண்டு விநாயகசதுர்த்திவரையில் தவருமல் நாள் ஒன்றுக்கு நூற்றெட்டு உருவிதம் செபித்துவரி னும் முற்கூறியபயனை ஆறுமாதத்தில் அடைவான். நெய்கலந்த அன்னத்தால் ஹோமஞ்செய்யின் நிறைந்த செல்வம் எய்து வான். தேங்காய், பழம், மிளகு இவற்றுல் ஆயிரம் ஹோமஞ் செய்யின் ஒரேமாதத்தில் செல்வம் எய்துவான். பால், உப்பு, மிளகு அஷ்ட திரவியங்கள் இவற்றுல் ஆயிரம் ஹோமஞ்செய் யின் குபேரனுவான். அதன் பின்பு இஷ்ட காரியசித்திக்காக நானூற்று நாற்பத்துநான்கு உருச்செபித்து, மூலமந்திரத்தால் தர்ப்பணஞ்செய்யின் இஷ்டங்கள் யாவற்றையும் எய்துவான்.

வேறுவகையான கணபதி ஷடாக்ஷரம்: ஓம் மேதோல்காய ஸ்வாஹா என்பது மந்திரம். பூசிக்குமுறையும், செபிக்கும் முறையும் முன்போலவே.

முப்பத்தோரெழுத்து மந்திரம்:

"ஓம் ராயஸ்போஷஸ்ய ததிதா நிதிதோ ரத்ந தாதுமாந்
ரக்ஷோ ஹணோபலகஹநோ வக்ரதுண்டாய ஹும்"

𑌰𑌾𑌯𑌸𑍍𑌪𑍋𑌷𑌸𑍍𑌯 𑌦𑌦𑌿𑌤𑌾 𑌨𑌿𑌧𑌿𑌦𑍋 𑌰𑌤𑍍𑌨𑌧𑌾𑌤𑍁𑌮𑌾𑌨𑍍 ।
𑌰𑌕𑍍𑌷𑍋𑌹𑌣𑍋 𑌵𑌲𑌗𑌹𑌨𑍋 𑌵𑌕𑍍𑌰𑌤𑍁𑌣𑍍𑌡𑌾𑌯 𑌹𑍂𑌂 ॥

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Koviloor Digital Library

இதற்குப் பார்க்கவர் ரிஷி. அனுஷ்டுப் சந்தஸ். விக்நேசர் தேவதா. வம் பீஜம். யம் சக்தி. என் இஷ்ட பூர்த்திக்காக இந்தச் செபத்தை விநியோகிக்கின்றேன் என்று சொல்லி, முன்போல ரிஷியாதி நியாசம்செய்க. இனி,

கரநியாசம் :

ஓம் ராயஸ்போஷஸ்ய அங்குஷ்டாப்யாம் நம :

ஓம் ததிதா தர்ஜநீப்யாம் நம:

ஓம் நிதிதோ ரத்நதாதுமாந் மத்யமாப்யாம் நம :

ஓம் ரக்ஷோஹணோ அநாமிகாப்யாம் நம :

ஓம் பலகஹநோ கநிஷ்டகாப்யாம் நம :

ஓம் வக்ரதுண்டாய ஹூம் கரதலகர
ப்ருஷ்டாப்யாம் நம :

இவ்வண்ணமே ஹ்ருதயாதி ஷடங்க நியாஸங்களையும் செய்க. பின் முன்போலவே தியானிக்க. ஆவரணபூஜை முதலிய ஏனைய யாவும், சடாக்ஷர மந்திரத்துக்குச் சொன்ன விதியைப்போலவேதான்.

நவார்ண உச்சிஷ்ட கணபதி மந்திரம் :

ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா என்பது மந்திரம். இதற்குக் கங்கோளர் மகரிஷி. விராட் சந்தஸ், உச்சிஷ்ட கணபதி தேவதை. எல்லா இன்பமும்பெற இந்தச் செபம்.

ஓம் கங்கோளரிஷயே நம : (சிரத்தில்)
ஓம விராட்சந்தஸே நம : (முகத்தில்)
ஓம் உச்சிஷ்ட கணபதி
தேவதாயை நம : (ஹ்ருதயத்தில்)
ஓம் விநியோகாய நம : (உடல் முழுதும்)

என்று ரிஷி முதலான நியாசம் செய்துகொள்க.

ஓம் ஹஸ்தி அங்குஷ்டாப்யாம் நம :
ஓப் பிசாசி தர்ஜநீப்யாம் நம :
ஓம் லிகே மத்யமாப்யாம் நம :

Koviloor Digital Library

ஓம் ஸ்வாஹா அநாமிகாப்யாம் நம:
ஓம் ஹஸ்தி பிசாசிலிகே கநிஷ்டகாப்யாம் நம:
ஓம் ஹஸ்தி பிசாசிலிகே ஸ்வாஹா
கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம:

என்று கரந்யாசம் செய்துகொள்க.

ஓம் ஹஸ்தி ஹ்ருதயாய நம:
ஓம் பிசாசி சிரஸே ஸ்வாஹா
ஓம் லிகே சிகாயை வஷட்
ஓம் ஸ்வாஹா கவசாய ஹும்
ஓம் ஹஸ்தி பிசாசிலிகே ஸ்வாஹா அஸ்த்ராய பட்

என்று அங்கந்யாசமும் செய்க.

தியானம்: நான்கு கைகளை உடையவராகவும் அவற்றில் பாசம், அங்குசம், மோதகபாத்திரம், தந்தம் இவற்றைத் தரித் திருப்பவராகவும், செந்நிறமான திருமேனியும் முக்கண்ணும் உடையவராகவும், செந்தாமரைப் பூவிலே எழுந்தருளி இருப் பவராகவும், உன்மத்தராகவும் உச்சிஷ்ட கணபதியைத் தியானிக்க.

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌰𑌕𑍍𑌤𑌤𑌨𑍁𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂
𑌪𑌾𑌶𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑍌 𑌮𑍋𑌦𑌕𑌪𑌾𑌤𑍍𑌰𑌦𑌨𑍍𑌤𑍌 ।
𑌕𑌰𑍈𑌰𑍍𑌦𑌧𑌾𑌨𑌂 𑌸𑌰𑌸𑍀𑌰𑍁𑌹𑌸𑍍𑌥𑌂
𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌗𑌣𑍇𑌶𑌮𑍀𑌡𑍇 ॥

பின்னர், விதிப்படி மண்டலம் அமைக்கப்பட்ட பீடத்தில், பீடசத்தி தேவதைகளைத் தியானித்து, வக்ரதுண்ட கணபதி பூசையில் சொன்னதுபோலப் பூசிக்க. பின்னர், தாமிரபாத் திரத்தில், சக்கரத்தை வைத்து முன்போல அபிஷேக முதலிய வற்றைச் செய்து, ஓம் ஹ்ரீம் சர்வசக்தி கமலாசநாய நம: என்று புஷ்பாஸனம் அளித்து, பீடத்தினுடைய நடுவில் வைத்து, விதிப்படி பிரதிஷ்டைசெய்து மூலமந்திரத்தால் திரு வுருவைச் சங்கற்பித்து, பாத்யாசமனங்களாகிய உபசாரம் செய்து பிள்ளையாரிடம் உத்தரவு பெற்று ஆவரண பூசையைச் செய்க. புஷ்பாஞ்சலியும் செய்க. பிறகு சக்கரத்தில் அறுகோ ணத்தில் அங்கங்களைப் பூசிக்க.

Koviloor Digital Library

அக்னி ஓம் காம் ஹஸ்தி ஹ்ருதயாய நம: ஹ்ருதய
ஸ்ரீ பாதுகாம், பூஜயாமி தர்ப்பயாமி நம:
நிருதி ஓம் கீம் பிசாசி சிரஸே ஸ்வாஹா சிர ,,
வாயு ஓம் கூம் லிகே சிகாயை வஷட் சிகா ,,
ஈசான்யம் ஓம் கேம் ஸ்வாஹா கவசாய ஹூம் கவச,,
மத்தி ஓம் கௌம் ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா
நேத்ர த்ரயாய வௌஷட் நேத்ர த்ரய ,,
திசைகளில்: ஓம் ம: ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா
அஸ்த்ராய பட் அஸ்த்ர ,,

என்று பூசிக்க, புஷ்பாஞ்சலி செய்க. விசேஷார்க்கியமும் கொடுக்க.

அஷ்டதள பத்மத்தில் பூசிப்பவனுக்கும், யந்திரத்திற்கும் இடைப்பட்ட இதழையே கிழக்காக வைத்து, முறையே கட்டைவிரல் மோதிரவிரலால் சந்தனத்தோடு கலந்த அக்ஷதை புஷ்பம் இவற்றை எடுத்துக்கொண்டு,

கிழக்கு ஓம் பிராம்யை நம: பிராமீ ஸ்ரீ பாதுகாம்
பூஜயாமி தர்ப்பயாமி நம:
அக்னி ஓம் மாகேஸ்வர்யை நம: மாகேஸ்வரீ ,,
தெற்கு ஓம் கௌமார்யை நம: கௌமாரீ ,,
நிருதி ஓம் வைஷ்ணவ்யை நம: வைஷ்ணவீ ,,
மேற்கு ஓம் வாராஹ்யை நம: வாராஹீ ,,
வாயு ஓம் இந்திராண்யை நம: இந்திராணீ ,,
ஈசானம் ஓம் மகாலக்ஷ்மியை நம: மகாலக்ஷ்மீ ,,

என்று எட்டுச் சக்திகளைப் பூசிக்க. புஷ்பாஞ்சலி செய்து, மூல மந்திரம் செபித்து இரண்டாவது ஆவரண பூசையைச் சமர்ப்பிக்கின்றேன் என்று வேண்டிக்கொண்டு எட்டிதழ்த் தாமரைக்கு வெளியில் நாற்கோணத்துள்,

கிழக்கு ஓம் வக்ரதுண்டாய நம: வக்ரதுண்ட ஸ்ரீ பாது
காம் பூஜயாமி தர்ப்பயாமி நம:
அக்னி ஓம் ஏகதம்ஷ்ட்ராய நம: ஏகதம்ஷ்ட்ர ,,
தெற்கு ஓம் லம்போதராய நம: லம்போதர ,,

Koviloor Digital Library

நிருதி	ஓம் விகடாய நம:	விகட	,,
மேற்கு	ஓம் தூம்ரவர்ணுய நம:	தூம்ரவர்ண	,,
வாயு	ஓம் விக்நராஜாய நம:	விக்நராஜ	,,
வடக்கு	ஓம் கஜாநநாய நம:	கஜாநந	,,
ஈசானம்	ஓம் விநாயகாய நம:	விநாயக	,,
கிழக்கு	ஓம் ஈசானமத்தியில், ஓம் கணபதயே நம:	கணபதி	,,
மேற்கு	நிருதிமத்தியில் ஓம் ஹஸ்ததந்தாய நம:	ஹஸ்ததந்த	,,

என்று பூசிக்க. முன்போலப் புஷ்பாஞ்சலியும் செய்க:

மூன்ருவது ஆவரணம்:- பூபுரத்திற்கு வெளியில் முன் போல அட்டதிக்குப் பாலகர்களேயும், அவர்களுக்குப் பக்கத்தில் அவரவர்கள் ஆயுதங்களேயும் பூசிக்க, புஷ்பாஞ்சலியும், விசேஷ அர்க்கியமும் கொடுத்து நமஸ்கரிக்க. மோதகம், வெல்லப்பாயசம் ஏதாவது ஒன்றை, ஓம், ஹ்ரீம் க்லீம் ஹ்ரௌம் உச்சிஷ்ட கணேசாய மகாயக்ஷாய இயம் பலி: என்று நிவேதிக்க, பின் தேவதைக்கு நிவேதித்த பழம், மோதகம், பாயசம் இவற்றை உண்டு தாம்பூலம் தரித்துத் தம்பலவாயோடு செபிக்க.

புரச்சரணம்: ஒரு லக்ஷம் செபம். செபம் பத்திலொரு பங்கு எள் ஹோமம். ஹோமம் பத்தில் ஒருபங்கு தர்ப்பணம். தர்ப்பணம் பத்தில் ஒரு பங்கு அந்தணருக்கு உணவளிக்க. இவ்வண்ணம் செய்யின் மந்திரம் சித்தியாகும். பின்பு பிரயோகத்திற்காகச் செபித்துப் பயன் எய்துக.

செஞ்சந்தனக்கட்டையினுலாவது, வெள்ளெருக்கினது வேரினுலாவது தனது பெருவிரல் அளவு கணபதி உருவம் சமைத்து, விதிப்படி பிரதிஷ்டை செய்து தேன் அபிஷேகம் செய்க. கிருஷ்ணபக்ஷத்துச் சதுர்த்தி தொடங்கிச் சுக்கிலபக்ஷ சதுர்த்திவரை பாயச நிவேத்தியத்துடன் தினம் செபித்து வருக. ஒரு நாளேக்கு ஆயிரம் உருவாகச் செபித்து எள், நெய் இவற்ருல் ஓமஞ்செய்க. ரகசியத்தில் உச்சிஷ்டத்தோடு கூடியவனுக, தன்னைக் கணேசராகவே பாவித்துச் செபம் செய்க. இங்ஙனம் செய்துவரின் அரசபோகத்தை

Koviloor Digital Library

அநுபவிப்பான். பிள்ளையார் உருவைக் குயவன் மண்ணால் செய்யின் நல்ல அரசையும், புற்றுமண்ணாற்செய்யின் இஷ்ட லாபத்தையும், வெல்லத்தாற்செய்யின் சௌபாக்யத்தையும், உப்பாற்செய்யின் சத்துரு ஜயத்தையும் வேப்பமரத்தால் செய்யின் சத்துரு நாசத்தையும் எய்துவிக்கும். தேனில் நனைந்த பொரியால் ஒமஞ்செய்யின் எல்லா உலகங்களும் வசமாகும். படுக்கையிலிருந்து உச்சிஷ்டனாகச் செபிப்பின் சத்துருக்களை வசமாக்கும். வேப்பெண்ணெயில் நனைத்த பொரியால் ஹோமஞ்செய்யின் சத்துரு வித்துவேஷணம் சித்திக்கும். சூதாட்டம், போர், பட்டிமண்டபம் இவற்றில் வெற்றி யுண்டாகும். குபேரசெல்வத்திற்கு அதிபனுவான். செம்பட்டாடையை யுடுத்தி, சந்தன கஸ்தூரி பூசிக் கொண்டு, வெற்றிலை போட்டுக்கொண்டு செபிக்க. அல்லது நிவேதிக்கப்பெற்ற மோதகமாவது உண்ணுக. இவ்வண்ணம் செய்யின் எல்லா நன்மைகளையும் எய்தலாம்.

உச்சிஷ்டகணபதி பன்னிரண்டெழுத்து மந்திரம்:

மந்திரம் :- ஓம் ஹ்ரீம் கம் ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா. மனு ரிஷி. விராட் சந்தஸ். உச்சிஷ்ட கணபதி தேவதா. கம் பீஜம். ஸ்வாஹா சக்தி. ஹ்ரீம் கீலகம். எல்லாம் அடைய செபம். இவைகளைச்சொல்லி ரிஷியாதி நியாசம் செய்க. நவார்ண மந்திரத்திற்குச் சொன்னதுபோல் கரநியாஸமும், அங்கநியாஸமும் செய்க.

உச்சிஷ்டகணபதி பத்தொன்பதெழுத்து மந்திரம்:

மந்திரம் :- ஓம் நம: உச்சிஷ்ட கணேசாய ஹஸ்தி பிசாசி லிகே ஸ்வாஹா. [ரிஷி கங்கோளர். விராட் சந்தஸ், உச்சிஷ்ட கணபதி தேவதா. எல்லாம் அடைய செபம், ரிஷியாதி நியாசம், கரநியாசம், அங்கநியாசம் எல்லாம் முன்போல் செய்க,

உச்சிஷ்டகணபதி முப்பத்தோரெழுத்து மந்திரம்:

ஓம் நமோ ஹஸ்திமுகாய லம்போதராய உச்சிஷ்ட மகாத்மனே க்ராம் க்ரீம் ஹ்ரீம் கே கே உச்சிஷ்டாய ஸ்வாஹா என்பது மந்திரம். வேப்பமர வேரால் உருவம்செய்து கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி தொடங்கி, அமாவாசைவரையில் ஐந்நூறு செபம் செய்க.தான் உச்சிஷ்டனாக இருந்துகொண்டு கணேசர் திருமுன் செஞ்சந்தனம், அக்ஷதை, பூ இவற்றால்

Koviloor Digital Library

அருச்சித்துச் செபிக்க. இவ்வண்ணம் அட்டமிவரையில் செய்து, ஐந்நூறு ஹோமம் செய்க. எல்லா வன்மையும் இயையும்.

உச்சிஷ்டகணபதி முப்பத்திரண்டெழுத்து மந்திரம்:

ஓம் ஹஸ்திமுகாய லம்போதராய உச்சிஷ்ட மகாத்மநே ஆம் க்ரோம் ஹ்ரீம் க்லீம் ஹ்ரீம் ஹூம் ஹம் கே கே உச்சிஷ்டாய ஸ்வாஹா என்பது மந்திரம். கணகர் ரிஷி. காயத்திரி சந்தஸ். உச்சிஷ்ட கணபதி தேவதை. பின்பு ரிஷியாதி நியாசம், கரநியாசம், அங்கநியாசம், ஆவரண பூஜை அனைத்தும் முன்போலவே செய்க.

உச்சிஷ்டகணபதி முப்பத்தேழெழுத்து மந்திரம்:

ஓம் நமோ பகவதே ஏக தம்ஷ்ட்ராய ஹஸ்திமுகாய லம்போதராய உச்சிஷ்ட மகாத்மநே ஆம் க்ரோம் ஹ்ரீம் ௐ கே கே ஸ்வாஹா. இது மந்திரம். ரிஷி கணகர். காயத்ரீ சந்தஸ். உச்சிஷ்ட கணபதி தேவதை. ௐ பீஜம். ஹ்ரீம் சத்தி. ஆம் க்ரோம் கிலகம். விரும்பிய எண்ணம் ஈடேற செபம். ரிஷியாதி நியாசம் செய்க. பின்பு,

ஓம் நமோ பகவதே ஏக தம்ஷ்ட்ராய அங்குஷ்டாப்யாம் நம:
ஓம் ஹஸ்திமுகாய தர்ஜநீப்யாம் நம:
ஓம் லம்போதராய மத்யமாப்யாம் நம:
ஓம் உச்சிஷ்ட மகாத்மநே அநாமிகாப்யாம் நம:
ஓம் ஆம் க்ரோம் ஹ்ரீம் ௐ கநிஷ்ட காப்யாம் நம;
ஓம் கே கே ஸ்வாஹா கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம:

என்று கரநியாசம் செய்க.

ஓம் நமோ பகவதே ஏகதம்ஷ்ட்ராய ஹ்ருதயாய நம;
ஓம் ஹஸ்திமுகாய சிரஸே ஸ்வாஹா
ஓம் லம்போதராய சிகாயை வஷட்
ஓம் உச்சிஷ்ட மகாத்மநே கவசாய ஹூம்
ஓம் ஆம் க்ரோம் ஹ்ரீம் ௐ நேத்ர த்ரயாய வௌஷட்
ஓம் கே கே ஸ்வாஹா அஸ்த்ராய பட்

என்று அங்கநியாசம் செய்க.

Koviloor Digital Library

தியானம் :- வில், அம்பு, பாயசம், அங்குசம் இவற்றைத் தரித்த கைகளையுடையவரும், செந்நிறமான தாமரையில் எழுந்தருளியிருப்பவரும், ஆடையற்ற அம்மையோடு புணர்ச்சிக்கு முயல்பவரும் ஆகிய உச்சிஷ்ட விநாயகரை நான் தியானிக்கின்றேன் என்று தியானித்து, முன்போலவே, ஆவரணபூசைகளைச் செய்க.

𑌶𑌰𑌾𑌨𑍍𑌨𑌧𑌨𑍍𑌵𑌃 𑌪𑌾𑌶𑌸𑍃𑌣𑍀𑌸𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑍈𑌃 𑌦𑌧𑌾𑌨𑌂
𑌆𑌰𑌕𑍍𑌤𑌸𑌰𑍋𑌰𑍁𑌹𑌸𑍍𑌥𑌮𑍍 ॥
𑌵𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌂 𑌸𑍁𑌰𑌤𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌉𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌮𑌮𑍍𑌬𑌾𑌸𑍁𑌤
𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌽𑌹𑌮𑍍 ॥

புரச்சரணம் : ஒரு லக்ஷம் செபம். பத்திலே ஒருபங்கு நெய்யாகுதி. அதிலொருபங்கு அன்னமளித்தல் செய்க. எட்டுச் செயல்களும் செய்ய அதற்குமேல் அதற்குரிய முறைகளோடு திருவுருவம்செய்து அவ்வவற்றிற்குரிய ஓமத்திரவியங்களைக் கொண்டு ஓமஞ்செய்து வழிபட்டுப் பயன்பெறுக.

இதிலேயே முப்பத்தொன்பது எழுத்துக்களுள்ள உச்சிஷ்ட கணபதிக்குரிய வேறு மந்திரம் ஒன்றும் ருத்ரயாமளம் என்ற மந்திர நூலில் தெரிவிக்கப்பெறுகின்றது.

மந்திரம் :- ஓம் நமோ பகவதே ஏக தம்ஷ்ட்ராய ஹஸ்தி முகாய லம்போதராய உச்சிஷ்ட மகாத்மநே ஆம் க்ரோம் ஹ்ரீம் கம் வெ வெ உச்சிஷ்டாய ஸ்வாஹா. இதற்கு மதங்கர் ரிஷி. காயத்ரி சந்தஸ். உச்சிஷ்ட கணபதி தேவதை. கம் பீஜம். ஸ்வாஹா சக்தி. ஹ்ரீம் கீலகம். என் விருப்பம் ஈடேற செபம். மற்றவையெல்லாம் முன்போலவே.

சக்திவிநாயகர் நான்கெழுத்து மந்திரம் :

ஓம் ஹ்ரீம் க்ரீம் ஹ்ரீம் என்பது மந்திரம். பார்க்கவர் ரிஷி. விராட் சந்தஸ். சக்திகணபதி தேவதை. க்ரீம் பீஜம். ஹ்ரீம் சக்தி. எண்ணம் ஈடேறச் செபிக்க. முன்போலவே ரிஷியாதி நியாசங்கள் செய்க.

Koviloor Digital Library

தியானம்: கொம்பு, அங்குசம், அக்ஷசூத்திரம், பாசம் இவற்றைத் தரித்தவரும், துதிக்கையில் மோதகம் ஏந்திய வரும், பொன்னுபரணங்களை அணிந்த தன் மனைவியோடு கூடிய வரும், செஞ்சூரியன்போன்ற நிறத்தை உடையவருமாகிய கணேசரை வணங்குகின்றேன்.

முற்கூறியவண்ணம் சக்கரத்தை ஸ்தாபித்து. முன்போலவே எல்லாப் பூசைகளையும் செய்க நான்கு லக்ஷம் உரு செபிக்க. பத்தில் ஒன்றாகப் பணியாரத்தைக்கொண்டு ஹோமஞ் செய்க. தேன்கலந்த நீரால் தர்ப்பணமும், அன்னதானமும் செய்க. ராசவசியம் முதல் எல்லா நன்மைகளும் கிட்டும்.

லட்சுமி விநாயகர் இருபத்தெட்டெழுத்து மந்திரம்:

ஓம் ஸ்ரீம் 𑌗𑌂 ஸௌம்யாய கணபதயே வரவரத சர்வ ஜநம் மே வசமாநய ஸ்வாஹா என்பது இருபத்தெட்டெழுத்து கூடிய மந்திரம். இதற்கு அந்தர்யாமி ரிஷி. காயத்ரி சந்தஸ். லட்சுமி விநாயகர் தேவதை. ஸ்ரீம் பீஜம். ஸ்வாஹா சக்தி. ரிஷி யாதி ந்யாசங்கள் செய்க.

தியானம்: தந்தம், அபயம், வரதம், சக்கரம் ஆகிய இவைகளைத் தரித்தவரும் துதிக்கையில் பொற்கலசத்தை ஏந்தியவரும், முக்கண்ணரும் செந்தாமரை ஏந்திய லட்சுமியால் தழுவப் பெற்றவரும். பொன்னிறமேனி உடையவருமான லட்சுமி கணபதியை வணங்குகின்றேன்.

𑌦𑌨𑍍𑌤𑌾𑌭𑌯𑍇 𑌚𑌕𑍍𑌰𑌵𑌰𑍌 𑌦𑌧𑌾𑌨𑌂 𑌕𑌰𑌾𑌗𑍍𑌰𑌗𑌂
 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌘𑌟𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌧𑍃𑌤𑌾𑌬𑍍𑌜𑌯𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌮𑌬𑍍𑌧𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑍍𑌯𑌾 𑌲𑌕𑍍𑌷𑍀𑌗𑌣𑍇𑌶𑌂
 𑌕𑌨𑌕𑌾𑌭𑌮𑍀𑌡𑍇 ॥

பின்பு பீடத்தில் அமைக்கப்பெற்ற கணேசமண்டலத்தில் பத்ததி முறைப்படி தாபித்து, பீடசத்திகள் ஒன்பதையும் பூசிக்க.

பின்பு, யந்திரத்தை அல்லது மூர்த்தியை முற்கூறிய வண்ணம் தாமிரபாத்திரத்தில் வைத்து, நெய் பால் தண்ணீர்

Koviloor Digital Library

சங்கடஹரர்

திருவாவடுதுறை ஆதீனம்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஆகியவைகளால் அபிஷேகித்து, வெள்ளையாடையால் ஒற்றி ஓம் ஹ்ரீம் ஸர்வசக்தி கமலாசநாய நம; என்று புஷ்பாஸனம் கொடுத்து, பீடமத்தியில் பத்ததிமுறைப்படி பிரதிட்டை செய்து, அர்க்கிய பாத்ய ஆசமனங்கள் தந்து, அனுமதிபெற்று ஆவரண பூசை செய்க.

ஸம்விநுயேச வரோஷெவவரா ஊதரவஸ்விரு ।

சுதாதுரொஷெஹிமுவ வசிவாராவடிநாயகே ॥

என்று புஷ்பாஞ்சலி செய்க. விசேஷார்க்கியமும் கொடுக்க.

அறுகோண கேசரங்களில் உள்ள ஆக்கினேய முதலான நான்கு திசைகளிலும் மத்தியிலும்,

ஓம் ஸ்ரீம் காம ஹ்ருதயாய நம:

ஓம் ஸ்ரீம் கீம சிரஸே ஸ்வாஹா

ஓம் ஸ்ரூம் கூம சிகாயை வஷட்

ஓம் ஸ்ரைம் கைம கவசாய ஹூம்

ஓம் ஸ்ரௌம் கௌம நேத்ர த்ரயாய வௌஷட்

ஓம் கஃ அஸ்த்ராய பட்

என்று ஆறங்கங்களையும் பூசிக்க. பிரார்த்தனை, புஷ்பாஞ்சலி எல்லாஞ்செய்து முதலாவரண பூசையை முடிக்க. விநாயகப் பெருமானின் வலது பக்கத்தில் ஓம் சங்காய நம: சங்க ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: என்றும், இடது பக்கத்தில் ஓம் பத்மநிதயே நம: பத்மநிதி ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம: என்றும் பூசிக்க.

எட்டிதழ்த் தாமரையில், முன்போலப் பூசிப்பவனுக்கும், சக்கரத்திற்கும் இடைப்பட்ட பகுதியைக் கிழக்காகவைத்துக் கட்டை விரலோடு கூடிய மோதிரவிரலால் பூவையும், கந்தாக்ஷதைகளையுங்கொண்டு,

ஓம் வலாயை நம: வலா ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம:

ஓம் விமலாயை நம: விமலா ,,

Koviloor Digital Library

ஓம் கமலாயை நம:	கமலா	,,
ஓம் வநமாலிகாயை நம:	வநமாலிகா	,,
ஓம் விபிஷிகாயை நம:	விபீஷிகா	,,
ஓம் மாலிகாயை நம:	மாலிகா	,,
ஓம் சாங்கர்யை நம:	சாங்கரீ	,,
ஓம் வசுவாலிகாயைநம:	வசுவாலிகா	,,

என்று எட்டு சக்திகளைப் பூசிக்க. மூலமந்திரத்துடன் புஷ்பாஞ்சலி செய்க. இனி மூன்றுவது ஆவரணம் பூபுரத்தில் இந்திராதி திக்குப் பாலகர்களையும் தசாயுதங்களையும் பூசிக்க. தூபதிப நமஸ்காரங்கள் செய்க.

புரச்சரணம்: நான்கு லக்ஷம் செபம். வில்வ சமித்தால் பத்தில் ஒரு பங்கு ஓமம். முன்போலவே தர்ப்பணம், அன்ன தானங்கள் எல்லாம் செய்க. அஷ்டகர்ம சித்திக்காகப் பின்னர் தனித்தனியே செபம் செய்க.

திரைலோக்ய மோகனகர கணேசமந்திரம்:

ஓம் வக்ரதுண்டைக தம்ஷ்ட்ராய க்லிம் ஹ்ரீம் ஸ்ரீம் கம் கணபதே வர வரத ஸர்வஜநம் மே வசமாநய ஸ்வாஹா என்பது முப்பத்து மூன்று அக்ஷரமுள்ள மந்திரம். கணகர் ரிஷி. காயத்ரி சந்தஸ். திரைலோக்கிய மோகனகர கணேசர் தேவதை. அபீஷ்ட சித்தியின்பொருட்டுச் செபம். பின் ரிஷியாதி நியாசம், கரநியாசம் செய்க.

ஓம் வக்ரதுண்டைக தம்ஷ்ட்ராய க்லீம் ஹ்ரீம் ஸ்ரீம் கம்
ஹ்ருதயாய நம:

ஓம் கணபதே சிரஸே ஸ்வாஹா
ஓம் வர வரத சிகாயை வஷட்
ஓம் சர்வஜநம் கவசாய ஹூம்
ஓம் மே வசமாநய நேத்ர த்ரயாய வௌஷட்
ஓம் ஸ்வாஹா அஸ்த்ராய பட்

என்று அங்கநியாசம் செய்க.

தியானம்: கதை, மாதுளம்பழம், வில், சூலம், சக்கரம், தாமரை, உற்பலம், பாசம், நெற்கதிர், தந்தம் இவற்றைத்

Koviloor Digital Library

தரித்தவரும், துதிக்கை நுனியில் ரத்நகும்பம் தாங்கியவரும், மடியில் உள்ள பத்தினியால் தழுவப்பெற்றவரும், யானைமுகம் உடையவரும். பிறை மதி அணிந்தவரும், முக்கண்ணரும், செந்நிறம் பொருந்தியவரும், ஜகன்மோகனருமான கணபதியை வணங்குகின்றேன்.

கதாபீஜபூரே தநு: ஶூலசக்ரே
ஸரோஜோத்பலே பாஶதாந்யாக்ரதந்தௌ ।
கரைர்தாநம் ஸ்வஶுண்டாக்ரராஜந்
மணீகும்பமங்காதிரூடம் ஸ்வபத்ந்யா ॥
ஸரோஜந்மநாபூஷணாநாம் பரேணா ?
ஜ்வலத்தஸ்ததந்வ்யா ஸமாலிங்கிதாங்கம் ।
கரீந்த்ராநநம் சந்த்ரசூடம் த்ரிநேத்ரம்
ஜகந்மோஹநம் ரக்தகாந்திம் பஜேஹம் ॥

முன்போல் பீடசத்திகளைப் பூசிக்க. கரநியாசஞ் செய்த பின் முற்கூறிய மூலமந்திரங்களைக் கொண்டே அங்கநியாசமும் செய்க. புஷ்பாஞ்சலி முதலியனவும் செய்க. தாமரையிதழில் முன்போலவே கிழக்குத் தொடங்கி, கந்தாக்ஷதை புஷ்பங்களை எடுத்துக்கொண்டு,

ஓம் வாமாயை நம:	வாமா	ஸ்ரீ பாதுகாம்பூஜயாமி தர்ப்பயாமி நம:
ஓம் ஜ்யேஷ்டாயை நம:	ஜ்யேஷ்டா	,,
ஓம் ரௌத்ரியை நம:	ரௌத்ரீ	,,
ஓம் காளியை நம:	காளீ	,,
ஓம் கலபதாதிகாயை நம:	கலபதாதிகா	,,
ஓம் விகரிண்யை நம:	விகரிணீ	,,
ஓம் பலாயை நம:	பலா	,,
ஓம் ப்ரமதிந்யை நம:	ப்ரமதிநீ	,,

என்று பூசித்துக் கடவுள் முன்பு,

Koviloor Digital Library

ஓம் வாமாயை நம: வாமா ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம:

ஓம் சர்வபூத தமந்யை நம; சர்வபூததமநீ ,,

ஓம் மநோன்மந்யை நம: மநோன்மநீ ,,

என்றும் நான்கு திசைகளிலும், ,,

ஓம் பிரமோதாயை நம: பிரமோத ,,

ஓம் சுமுகாய நம: சுமுக ,,

ஓம் துர்முகாய நம: துர்முக ,,

ஓம் விக்நநாசாய நம: விக்நநாசக ,,

என்றும் பூசிக்க. புஷ்பாஞ்சலியை மூலமந்திரத்துடன் செய்க. பின் தாமரை இதழ்களின் நுனியில் முன்சொன்ன திசை தொடங்கி முறையே,

ஓம் ஆம் பிராம்யை நம; பிராமீ ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம;

ஓம் ஈம் மாகேஸ்வர்யை நம: மாகேஸ்வரி

ஓம் ஊம் கௌமார்யை நம: கௌமாரி ,,

ஓம் ரும் வைஷ்ணவ்யை நம: வைஷ்ணவி ,,

ஓம் லும் வாராஹ்யை நம: வாராஹி ,,

ஓம் ஐம் இந்திராண்யை நம: இந்திராணி ,,

ஓம் ஔம் சாமுண்டாயை நம: சாமுண்டா ,,

ஓம் அ: மகாலக்ஷ்மியை நம: மகாலக்ஷ்மீ ,,

என்று மூலமந்திரத்துடன் பிரார்த்தித்துப் புஷ்பாஞ்சலி செய்க. பின் பூபுரத்தில், முன்போலவே இந்திராதி திக்குப் பாலகர்களையும், அவர்கள் ஆயுதங்களையும் பூசிக்க.

புரச்சரணம்: நான்கு லக்ஷம் ஜபம். அஷ்ட திரவியங்களால் ஓமம், அன்னதானம் முதலியன செய்யின் மந்திரசித்தியாகும். பின்னர் வசியாதி காரியங்களுக்குத் தனித்தனியே அதற்குரிய விதிப்படி செபம்செய்க.

Koviloor Digital Library

திருவாரூர் மூலாதார கணபதி

திருவாவடுதுறை ஆதீனம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

ஹரித்ரா கணேச மந்திரம் :

ஓம் ஹூம் கம் க்லௌம் ஹரித்ரா கணபதியே வரவரத சர்வ ஜ்ஞ ஹ்ருதயம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா என்பது முப்பத் திரண்டெழுத்து மந்திரம். மதனன் ரிஷி. அநுஷ்டுப் சந்தஸ். ஹரித்ராகணநாயகர் தேவதை. எண்ணம் ஈடேறச் செபம். பிறகு ரிஷியாதி நியாசம்.

ஓம் ஹூம் கம் க்லௌம் அங்குஷ்டாப்யாம் நம:
ஓம் ஹரித்ரா கணபதயே தர்ஜநீப்யாம் நம:
ஓம் வரவரத மத்யமாப்யாம் நம:
ஓம் சர்வஜ்ஞ ஹ்ருதயம் அநாமிகாப்யாம் நம:
ஓம் ஸ்தம்பய ஸ்தம்பய கநிஷ்டகாப்யாம் நம:
ஓம் ஸ்வாஹா கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம:

என்று கரநியாசமும் செய்க.

ஓம் ஹூம் கம் க்லௌம் ஹ்ருதயாய நம:
ஓம் ஹரித்ரா கணபதயே சிரஸே ஸ்வாஹா
ஓம் வரவரத சிகாயை வஷட்
ஓம் சர்வஜ்ஞ ஹ்ருதயம் கவசாய ஹூம்
ஓம் ஸ்தம்பய ஸ்தம்பய நேத்ர த்ரயாய வௌஷட்
ஓம் ஸ்வாஹா அஸ்த்ராய பட்

என்று அங்கநியாசம் செய்க.

தியானம்: பாசம், அங்குசம், மோதகம், ஏகதந்தம் ஆகிய இவற்றைக் கைகளில் ஏந்தியவரும், பொன்மயமான ஆசனத்தில் வீற்றிருப்பவரும், மஞ்சள்நிற மேனியரும், முக் கண்ணரும், பொன்னுடை யுடையவரும் ஆகிய ஹரித்ரா கணபதியை வணங்குகின்றேன்.

பாசாங்குசௌ மோதகமேகதந்தம் கரைர்ததாநம்
கநகாஸநஸ்தம் ।
ஹாரித்ரவர்ணப்ரதிமம் த்ரிநேத்ரம் பீதாம்சுகம்
ஹாரித்ரகணேசமீடே ॥

Koviloor Digital Library

முன்போலவே பீடசத்திபூசை செய்து, யந்திரஸ்தாபனம், மூர்த்தி ஸ்தாபனம் செய்து, புஷ்பாஞ்சலி தூபதீப நமஸ்காரம் செய்து ஆணைபெற்று ஆவரண பூசை செய்க. யந்திரத்தில் அறுகோண நுனிகளில் அக்கினிதிக்கு முதல் நான்கு திக்குகளிலும் நடுவிலும்.

ஓம் ஹாம் மம் மூளம் ஹ்ருதயாயநம; ஹ்ருதய ஸ்ரீ பாதுகாம் பூஜயாமி தர்ப்பயாமி நம:

ஓம் ஹரித்ர கணபதே சிரஸே ஸ்வாஹா சிர ,,

ஓம் வர வரத சிகாயை வஷட் சிகா ,,

ஓம் ஸர்வஜ்ஞ ஹ்ருதயம் கவசாய ஹூம் கவச ,,

ஓம் ஸ்தம்பய ஸ்தம்பய நேத்ரத்ரயாய வௌஷட் நேத்ரத்ரய ,,

ஓம் ஸ்வாஹா அஸ்த்ராய பட் அஸ்த்ர ,,

என்று அங்கநியாசம் செய்க

பின் தாமரையின் நுனியில் முன்போலக் கிழக்குமுதல் கந்த புஷ்பாக்ஷதைகளைக் கொண்டு, வாமாதி சக்திகளைப் பூசிக்க. கிழக்குமுதல் நான்கு திக்குகளிலும் பிரமோதர், சுமுகர், துன்முகர், விக்நநாசனர் என்பவர்களைப் பூசித்து, மூலமந்திரம் செபித்துப் புஷ்பஞ்சாத்துக. பின் இதழ் நுனிகளில் பிராமீ முதல் மகாலட்சுமி வரையுள்ள சப்த மாதர்களையும் லட்சுமியையும் பூசிக்க. பூபுரத்தில் முன்போல இந்திராதி திக்குப் பாலகர்களையும். வச்சிரம் முதலான ஆயுதங்களையும் பூசிக்க. பின் தூபமுதல் நமஸ்காரம் வரையெல்லாம் செய்து, செபம் செய்க. உரு நான்கு லக்ஷம் செபிக்க. மஞ்சளரிசியால் பத்தில் ஒரு பங்கு ஓமம். ஏனைய முன்போல.

சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் மணமாகாத பெண்ணால் அரைக்கப்பெற்ற மஞ்சளைப் பூசிக்கொண்டு விடியலில் நதியில் நீராடிக் கணபதியைப் பூசிக்க. இங்ஙனம் பூசிப்பின் கன்னிகை கணவனையும், ஆடவன் மனைவியையும் பெறுவர். எல்லாச் செல்வமும் பெருகும். ஏனைய வசியாதிகள் தனியே சிந்திக்கத் தக்கன.

Koviloor Digital Library

ருணநாசன கணபதி மந்திரம் :

மந்திரம் :- ஓம் 𑌗𑍍𑌲𑍌𑌂 𑌗𑌃 𑌗𑍌𑌂 கணேசாய 𑌋ணம் 𑌛𑌿𑌨𑍍𑌧𑌿𑌵𑌰𑍇𑌣𑍍𑌯𑌂 ஹூம் நம: பட். ரிஷி சதாசிவர். அனுஷ்டுப் சந்தஸ். ருணமோசன விநாயகர் தேவதை. 𑌗𑍍𑌲𑍌𑌂 பீஜம். 𑌗𑌃 சத்தி. 𑌗𑍌𑌂 கீலகம். எல்லாக் கடன் களும் தீர்தற்குச் செபம்.

ஓம் கணேச அங்குஷ்டாப்யாம் நம :
ஓம் ருணம் சிந்தி தர்ஜநீயாப்யாம் நம :
ஓம் வரேண்யம் மத்யமாப்யாம் நம :
ஓம் ஹூம் அநாமிகாப்யாம் நம :
ஓம் நம : கநிஷ்டகாப்யாம் நம :
ஓம் பட் கரதலகர ப்ருஷ்டாப்யாம் நம :

என்று கரநியாசம் செய்க.

ஓம் கணேச ஹ்ருதயாய நம :
ஓம் ருணம் சிந்தி சிரஸே ஸ்வாஹா
ஓம் வரேண்யம் சிகாயை வஷட்
ஓம் ஹூம் கவசாய ஹூம்
ஓம் நம : நேத்ர த்ரயாய வௌஷட்
ஓம் பட் அஸ்த்ராய பட்

என்று அங்கநியாசம் செய்க.

தியானம் : செந்நிறம், இரண்டு கை, தொங்குகிற வயிறு ஆகிய இவைகளை உடையவரும், பத்மாசனத்தில் வீற்றிருப் பவரும், பிரமாதிகளால் சூழப்பெற்றவரும், சித்தர்களாற் சேவிக்கப்பெறுபவரும் ஆகிய தேவனை நமஸ்கரிக்கின்றேன்.

𑌓𑌂 𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌵𑌰𑍍𑌣𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌂 𑌗𑌣𑍇𑌶𑌂
𑌲𑌂𑌬𑍋𑌦𑌰𑌂 𑌪𑌦𑍍𑌮𑌦𑌳𑍇 𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌂 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑌿𑌦𑍇𑌵𑍈𑌃 𑌪𑌰𑌿𑌸𑍇𑌵𑍍𑌯𑌮𑌾𑌨𑌂
𑌸𑌿𑌦𑍍𑌧𑍈𑌰𑍍𑌯𑍁𑌤𑌂 𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌮𑌾𑌮𑌿 𑌦𑍇𑌵𑌂 ॥

Koviloor Digital Library

நாடோறும் இருபத்தொன்றாக ஆயிரக்கடவை எவன் செபிக்கின்றானே அவன் அனைவராலும் விரும்பப்படுவான். அறிவில் வியாழனாகவும், செல்வத்தில் குபேரனாகவும் விளங்கு வான். லக்ஷம் உரு செபித்தால் இஷ்டபலம் எல்லாம் எய்து வான். இந்த முறை ஸ்ரீ கிருஷ்ணயாமள தந்திரத்திற் கூறப் பெற்றுள்ளது.

பிராகிருத நூல்களில்: ஓம் நமோ சித்த விநாயகாய சர்வகார்ய கர்த்ரே ஸர்வவிக்ந பிரசமநாய ஸர்வராஜ்ய வசிகர ணாய ஸர்வஜ்ந ஸர்வஸ்திரி புருஷாகர்ஷணாய ஸ்ரீ ஓம் ஸ்வாஹா என்பது மந்திரம்.

இம்மந்திரத்தை நாடோறும் நூற்றெட்டு உரு விதம் செபித்தால் காரியசித்தி உண்டாம். யாத்திரைச் சமயத்தில் செபித்துச் செல்லின் வழியில் பயமே இல்லை. எல்லாக் காரியங்களும் சித்திக்கும்.

வேறொரு மந்திரம்: ஓம் ஹ்ரீம் க்லீம் வீரவர கணபதயே வ: வ: ஊடம் விஷ்வம் மமவசம் ஆநய ஓம் ஹ்ரீம் பட்.

செவ்வாடையுடுத்தி, செஞ்சந்தனம் பூசிப் பொட்டிட்டு, கணபதியைத் தியானித்துப் பன்னிராயிரம் உரு இம்மந்திரத் தைச் செபித்தால் கணபதி வெளிப்பட்டு அருள்வர். மேலும் பஞ்சகவ்ய ஸ்நானம் செய்து நாடோறும் நூற்றெட்டுதரம் செபித்து, ஓமஞ்செய்யின் அட்டமாசித்திகளை அடையலாம்.

மற்றொரு வகை: ஓம் கீம் ஹூம் கணபதயே நம: ஸ்வாஹா. இம்மந்திரத்தைப் பிரமசரிய ஒழுக்கந்தவறாமல், பூமியிலே படுத்துறங்குபவனாக நாடோறும் செபித்து லக்ஷம் உரு ஏற்றுக. ஓமஞ் செய்க. செல்வமும் சீரும் உண்டாகும்.

மற்றொன்று: ஓம் மம் கணபதயே நம: குயவன் மண்ணைக் கொணர்ந்து கணபதி உருவஞ்செய்து, ஐவகை உபசாரங்களாலும் பூசித்து, அவர் முன்னிலையில் நாடோறும் ஆயிரம் உரு செபிக்க. ஒருவாரத்தில் சித்தியாகும். மேலும் நாடோறும் செபிக்கின் அறிவு வளரும். ஒரு மாசம் செபிக்கின் தனதான்யம் விருத்தியாகும். —வீரபத்ரோயீச தந்திரம்.

Koviloor Digital Library



கணபதி பத்திரமண்டலம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

மற்ருென்று: ஓம் ௱ கணபதயே ஸர்வ விக்நஹராய சர்வாய சர்வகுரவே லம்போதராய ஹ்ரீம் ௱ நம; என்பது மந்திரம்.

தை ஞாயிற்றுக்கிழமையில் வெள்ளெருக்கினுல் நான்கு கரங்களுடன் பிள்ளையார் செய்து பூசிக்க. சந்தியாகாலத்தில் நூற்றெட்டு உருச் செபித்து, போர்க்களத்தில் தனித்த இடத்திலிருந்து விசேட பூசைசெய்க. ஆயிரம் உரு செபிக்க. வெற்றி நிச்சயம்.

மூல நக்ஷத்திரத்தில் எருக்கினுல் அங்குஷ்ட அளவு விநாயகரைச்செய்து பூசிக்க. குங்குமச் செப்பில் அந்த நக்ஷத்திரத்தில் பிரதிஷ்டை செய்க. மூன்று சந்திகளிலும் ஆயிரம் ஆயிரம் உரு செபிக்க. வஸ்திரமும் வைக்க. இவ்வண்ணம் தியானிப்பவன் எதனை விரும்புகிருனே அவனுக்கு எல்லாம் சித்திக்கும்.

இந்நூலில் கணபதி வழிபாட்டின் தொன்மையும், வரலாறும், அது வெளிநாடுகளில் பரவியுள்ள முறைமையும், விநாயகருடைய திருவுருவத் தத்துவமும், உபாசனை முறைகளும், பிறவும் ஆகிய பல தலைப்புக்களில் விவரிக்கப்பெற்றுள்ளது.

முதற்பகுதி, நம்மை அறியாமலே நம்முடைய அன்ருட வாழ்விலும் எழுத்திலும் பேச்சிலும் ஏன் எல்லாவற்றிலும் பிள்ளையார் கலந்திருக்கிருர்; அவரைப்பற்றி வேத ஆகமங்களும் புராணங்களும் பலபல குறிப்புக்களைத் தருகின்றன; அவற்றினுடைய அடிப்படைத் தத்துவமெல்லாம் ஒன்றே; பிள்ளையார் ஓங்கார ஒலியின் உரு; பழந்தமிழ்க் காலத்திலேயே பிள்ளையார் வழிபாட்டுமுறை பரவியிருந்தது என்ற விஷயங்களை விளக்குகின்றது.

இரண்டாம் பகுதியில் விநாயகரைப்பற்றிய பிறப்பு வரலாறுகள் பலவாயிருப்பதே அவருக்குப் பிறப்பே இல்லை என்பதைக் காட்டும் பெருஞ்சான்ருகும்: பிறந்தார் எனப் பேசப்படுவன யாவும் அடியார்களை ஆட்கொள்ள அவர் அடைந்த அருளுருவங்களே என்ற அடிப்படைக் கருத்துக்கள் விளக்கப்பெறுகின்றன.

மூன்ரும் பகுதி, விநாயகருடைய வீரம்பற்றிய வரலாறு அனைத்தும் மக்களுக்கு இடையூறுகள் எத்தனை வழிகளால்

Koviloor Digital Library

வரும் என்பதை விளக்கி, மக்களைக் காப்பாற்றும் மகிமையைத் தெரிவிக்கிறது.

நான்காம் பகுதி முழுவதும் விநாயகப்பெருமான் வியாபகம் இந்தியநாட்டில் மட்டுமன்றி எல்லா நாடுகளிலும் இடம் பெற்றுள்ளமையைத் தெரிவிக்கிறது.

ஐந்தாம் பகுதியில், சிறு கிராமமாயினும் ஒரு பிள்ளையார் கோயில் தேவை; அதை அமைப்பது எப்படி? வழிபடுவது எப்படி? என்பனவற்றை ஆகம ஆதாரங்களுடன் விளக்கப் படுகின்றன.

ஆறும் பகுதி, விநாயகர் விரத வகைகளையும், அவைகளை அனுஷ்டிக்கும் முறையையும், பயனையும் அறிவிக்கின்றது,

இறுதியான உபாசனை என்ற ஏழாம்பகுதி, விநாயக மூல மந்திரங்களையும் அவற்றைத் தியானிக்கும் முறைகளையும் தெரிவிக்கிறது. ஆனால் சித்தியடைந்த தேசிகரிடத்தில் மூல மந்திரங்களைக் கேட்டு ஜெபிப்பதே முறைமை. கொட்டாத பஞ்சும், காட்டாத மந்திரமும் பயன்படாது என்பது பழமொழி.

இவ்வண்ணம் வரலாற்றாராய்ச்சி முதல் உபாசனையீறாக எல்லாப் பகுதிகளும் ஒருமைப்பட்டு உருவேற்றி என்றும் இன்பம் பெருக இருக்க.

Koviloor Digital Library

சிவமயம்

ஔவையார் அருளிச்செய்த

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மலரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்அரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூடிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி.
ஆரு தாரத் தங்குச நிலையும்

Koviloor Digital Library

பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி இரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலைஅறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

Koviloor Digital Library

Koviloor Digital Library

செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

உருகும் அடியார் அள்ளூற
உள்ளே ஊறும் தேன்!வருக;
உன்னத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே! வருக; புலன்வழிபோய்த்
திருகும் உளத்தார் நினைவினுக்குச்
சேயாய்! வருக; எமைஆண்ட
செல்வா! வருக; உமைஈன்ற
சிறுவா! வருக; இணைவிழியால்
பருகும் அமுதே! வருக;உயிர்ப்
பைங்கூழ் தழைக்கக் கருணைமழை
பரப்பு முகிலே! வருக;நறும்
பாகே! வருக; வரைகிழித்த
முருக வேட்கு முன்உதித்த
முதல்வா! வருக வருகவே;
மூரிக் கலைசைச் செங்கழுநீர்
முனியே! வருக வருகவே.

—ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்